Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©
Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.

வெளியீடு : 16-11-2011 | Issued : 16-11-2011

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, ஆகஸ்ட் 12, 2011—தொகுதி 6—எண் 2

**Friday, the 12th August 2011—Volume 6—No. 2**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009*

**Legislative Assembly Secretariat, Chennai - 600 009**

விலை ரூ. 3.00] [Price Rs. 3.00

**12–8–2011**

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| **1. இரங்கற்குறிப்பு—** | |
| முன்னாள் உறுப்பினர் மறைவு | 163 |
| **2. விதி 110–ன்கீழ் அறிக்கைகள்—** | 164-166 |
| (அ) பி.டி. பருத்தி சாகுபடி பரவலாக்கும் நடவடிக்கையைக் கைவிடுதல் குறித்து மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை | 164-165 |
| (ஆ) உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்துதல் குறித்து மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை | 165-166 |
| **3. அறிவிப்பு—** | 166-168 |
| பல்கலைக்கழகங்களின் ஆட்சிமன்றப் பேரவை/ஆட்சிக் குழு/கல்விக் குழு/நிர்வாகக் குழுக்களுக்கு உறுப்பினர்கள் தேர்வு | 166-168 |
| **4. திருத்திய வரவு–செலவுத் திட்டம், 2011–2012, பொது விவாதமும் பதிலுரையும்—** | 168-270 |
| திரு. எம். ஆறுமுகம் | 168-192, 194, 196-197, 220 |
| மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா | 170, 180, 181, 187, 189, 190, 195, 204, 208-209, 214, 219-220, 270 |
| மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன் | 171, 175, 176, 208, 209-210 |
| மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம் | 179, 212, 213 |
| செல்வி கே. பாலபாரதி | 189-190, 220-221 |

பக்கங்கள்

**4. திருத்திய வரவு–செலவுத் திட்டம், 2011–2012, பொது விவாதமும் பதிலுரையும்**—தொடர்ச்சி

| | |
|---|---|
| மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம் | 191 |
| *மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி | 191-192 |
| *மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத் | 192-194 |
| *திரு. க. பாலகிருஷ்ணன் | 194-195, 268-269 |
| *மாண்புமிகு திரு. வி. செந்தில் பாலாஜி | 195-196 |
| திரு. என்.ஆர். ரெங்கராஜன் | 196, 226, 227 |
| திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் | 197-198 |
| *திரு. அ. சவுந்தரராசன் | 198-201, 202-218, 220, 227-231 242-243 |
| *மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி | 200, 201-202, 212 |
| மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு | 203, 206, 207, 269-270 |
| *முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா | 221 |
| *திரு. ரா. சரத்குமார் | 221-222 |
| *திரு. பி.வி. கதிரவன் | 222-223 |
| டாக்டர் க. கிருஷ்ணசாமி | 223 |
| முனைவர் செ.கு. தமிழரசன் | 223-224 |
| திரு. உ. தனியரசு | 224-226, 227 |
| *மாண்புமிகு திரு. பி. தங்கமணி | 228-229 |




பக்கங்கள்

**4. திருத்திய வரவு–செலவுத் திட்டம், 2011–2012, பொது விவாதமும் பதிலுரையும்**—தொடர்ச்சி

| | |
|---|---|
| *மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம் | 231 |
| *திரு. விஜயகாந்த் | 231-242, 243-245 |
| மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் | 246-266 |
| திரு. சு. குணசேகரன் | 266-267 |
| மாண்புமிகு திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி | 267-268 |
| மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் | 269 |
| **5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | 270 |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## திருவள்ளுவர் ஆண்டு 2042, ஆடி 27,

## 2011 ஆகஸ்ட் 12, வெள்ளிக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. டி. ஜெயக்குமார்** அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"கொடைஅளி செங்கோல் குடிஓம்பல் நான்கும்
உடையான்ஆம் வேந்தர்க்கு ஒளி"

கொடுக்கும் பண்பு, முகம் மலர்ந்து பேசல், நீதி தவறாத ஆட்சி, மக்களைக் காத்தல் ஆகிய நான்கும் கொண்ட அரசர், மற்ற அரசர்களுக்கெல்லாம் ஒளி விளக்குப் போன்றவர் ஆவார்.

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

## 1. இரங்கற்குறிப்பு

### முன்னாள் உறுப்பினர் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினரான திரு. எம்.ஏ. ஜெயவேலு அவர்கள் 22–6–2011 அன்று மறைவுற்ற செய்தியினைப் பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம்.ஏ. ஜெயவேலு அவர்கள், காட்பாடி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1977 முதல் 1980 வரை மிகவும் சிறப்பான முறையில் பணியாற்றினார்.

இம்முன்னாள் உறுப்பினரது மறைவால் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும் வகையில், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)*

[2011 ஆகஸ்ட் 12

## 2. விதி 110–ன்கீழ் அறிக்கைகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: பேரவை விதி 110–ன்படி இரண்டு அறிக்கைகளை அளிக்கவேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதியளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

### (அ) பி.டி. பருத்தி சாகுபடி பரவலாக்கும் நடவடிக்கையைக் கைவிடுதல் குறித்து மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமன்றப் பேரவையில் 4–8–2011 அன்று தாக்கல் செய்யப்பட்ட 2011–2012 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு செலவுத் திட்ட நிதிநிலை அறிக்கையில், “முன்னோடி தொழில்நுட்பங்களான திருந்திய நெல் சாகுபடி திட்டம்; நவீன முறையில் கரும்பு உற்பத்தித் திறனை உயர்த்தும் திட்டம்; துல்லிய பண்ணையம்; பி.டி. பருத்தியைப் பரவலாக்குதல்; பயறு வகைகள், எண்ணெய்வித்துக்கள் ஆகியவற்றில் உகந்த பயிர் மேலாண்மையைக் கடைப்பிடித்தல்; பசுமைக் குடில்; துல்லிய பண்ணையம் முறைகளில் காய்கறிகளைப் பயிரிடுதல்; தோட்டக்கலைப் பயிர்களுக்கான அடர் நடவுமுறை போன்றவை தீவிரமாக பரவலாக்கப்படும்” என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த மாமன்றத்தில் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர், பி.டி. இரகப் பருத்தி பயிரிடுவதில் பல பிரச்சினைகள் இருப்பதால், இதனை அரசு ஊக்குவிக்கக்கூடாது என்ற கருத்தினைத் தெரிவித்திருந்தனர். விவசாயிகளும், அரசளவில் பி.டி. இரகப் பருத்தி பயிரிடுவதை ஊக்குவிக்கக்கூடாது என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

2002 ஆம் ஆண்டு, மத்திய அரசு பி.டி. இரகப் பருத்தியினை விவசாயிகள் சாகுபடி செய்வதற்காக Genetic Engineering Approval Committee மூலம் அனுமதி அளித்து, இன்று பல மாநிலங்களில் பரவலாக சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. பி.டி. பருத்தியின்மூலம் அதிக இலாபம் பெற முடியும் என்பதால், இலாப நோக்கோடு தனியாரிடம் பி.டி. இரக விதைகளை வாங்கி தமிழக விவசாயிகளும் பயிரிட்டு வருகிறார்கள். எனவேதான், நிதிநிலை அறிக்கையில் பி.டி. இரகப் பருத்தி சாகுபடி பரவலாக்கப்படும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.



2011 ஆகஸ்ட் 12] [செல்வி ஜெ ஜெயலலிதா]

எனினும், மரபணு மாற்றம் செய்யப்பட்ட பருத்தி என்பதாலும், விவசாயிகளுக்கு நிச்சயமான பலன் அளிக்கும் என்ற உறுதி இல்லாததாலும், இதனை அரசளவில் பரவலாக்கக் கூடாது என்ற மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் விவசாயிகளின் கருத்தினை ஏற்று, பி.டி. பருத்தி சாகுபடியைப் பரவலாக்கும் எந்த நடவடிக்கையையும் இந்த அரசு மேற்கொள்ளாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

### (ஆ) உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்துதல் குறித்து மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு அடித்தளமாக அமைவது மனித வளம்தான். மனித வள மேம்பாட்டில் முக்கியப் பங்காற்றுவது கல்வி. கல்வியில் மேம்பட்ட சமுதாயத்தால்தான் வளர்ச்சிக் குறியீடுகளை எளிதாக அடைய இயலும். அந்தவகையில்தான், எனது தலைமையிலான அரசு கல்வி வளர்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது.

கல்வி வளர்ச்சியை மேம்படுத்தும் நடவடிக்கையின் ஓர் அங்கமாக, மாநிலத்தில் உள்ள 100 அரசு, மாநகராட்சி மற்றும் நகராட்சி உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்த நான் ஆணையிட்டுள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10–05

மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்படும் பள்ளிகளில், அறிவியல் பிரிவு மட்டும்தான் இதுவரை துவக்கப்பட்டு வந்தது. மேலும், உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்படும்போது, உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் பணியிடங்கள், மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் பணியிடங்களாகத் தரம் உயர்த்தப்படுவதுடன், ஆங்கிலம், கணிதம், இயற்பியல், வேதியியல் மற்றும் உயிரியல் ஆகிய 5 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களும் ஒப்பளிக்கப்பட்டு வந்தன.

தற்போது, நிலை உயர்த்தப்படும் 100 பள்ளிகளிலும், அறிவியல் பிரிவுடன் கலைப் பிரிவும் துவக்க இந்த அரசு முடிவு செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத்

தட்டும் ஒலி) இவ்வாறு நிலை உயர்த்தப்படும் 100 பள்ளிகளிலும், உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் பணியிடங்கள், மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் பணியிடங்களாகத் தரம் உயர்த்தப்படும் என்பதையும், ஆங்கிலம், கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல், வரலாறு, பொருளியல், வணிகவியல் மற்றும் தமிழ் ஆகிய பாடங்களுக்காக 9 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் ஒப்பளிப்பு செய்யப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இதன்மூலம் தற்போது நிலை உயர்த்தப்படும் 100 பள்ளிகளில், கூடுதலாக 900 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் ஏற்படுத்தப்படும். மேலும், வரலாறு, பொருளியல், வணிகவியல் ஆகிய பாடங்களைப் படிக்கும் வாய்ப்பு மாணவர்களுக்குக் கிடைப்பதுடன், இந்தப் பிரிவுகளில் முதுகலைப் பட்டம் பெற்றவர்கள் வேலைவாய்ப்புப் பெறவும் இது வழிவகுக்கும். மேலும் கடந்த பல ஆண்டுகளாக உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்படும்போது, தமிழ் முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் ஒப்பளிப்பு வழங்கப்படாத நிலை இருந்து வந்தது. இந்த நிலையும் தற்போது மாற்றப்பட்டு, தமிழ் மொழிப் பாட ஆசிரியர் பணியிடங்களுக்கு ஒப்பளிப்பு வழங்கப்படுவதால், தமிழ் மொழிப் பாடத்தில் முதுகலைப் பட்டம் பெற்றவர்களுக்கு மேல்நிலைப் பள்ளிகளில் முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் வேலைவாய்ப்பு பெற இது ஒரு வாய்ப்பாக அமையும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வாறு 100 உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்படுவதால், ஆண்டு ஒன்றுக்குத் தோராயமாக 44 கோடியே 91 இலட்சம் ரூபாய் செலவு ஏற்படும் என்பதையும் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## 3. அறிவிப்பு

### பல்கலைக்கழகங்களின் ஆட்சிமன்றப் பேரவை / ஆட்சிக் குழு / கல்விக் குழு / நிர்வாகக் குழுக்களுக்கு உறுப்பினர்கள் தேர்வு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாட்டிலுள்ள பின்வரும் பல்கலைக்கழகங்களின் ஆட்சிமன்றப் பேரவை (Senate), ஆட்சிக் குழு (Syndicate), கல்விக் குழு (Academic Council) மற்றும் நிர்வாகக் குழு (Board of Management) ஆகியவற்றில் அலுவல் சார்பற்ற உறுப்பினர்களாகப் பணிபுரிய அப்பல்கலைக்கழகங்களுக்கு நேரெதிரே குறிப்பிடப்பெற்றுள்ள காலியிடங்களுக்குச் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்குமாறு சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகப் பதிவாளர்களிடமிருந்து கோரிக்கைகள் வரப்பெற்றுள்ளன:





| பல்கலைக்கழகம் | உறுப்பினர்களின் எண்ணிக்கை |
|---|---|
| சென்னைப் பல்கலைக்கழகம் | 6 |
| தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம் | 2 |
| அண்ணாமலைப் பல்கலைக்கழகம் | 3 |
| அழகப்பா பல்கலைக்கழகம் | 1 |
| பாரதியார் பல்கலைக்கழகம் | 2 |
| பாரதிதாசன் பல்கலைக்கழகம் | 2 |
| மதுரை காமராசர் பல்கலைக்கழகம் | 4 |
| மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகம் | 2 |
| தமிழ்ப் பல்கலைக்கழகம் | 2 |
| பெரியார் பல்கலைக்கழகம் | 2 |
| அண்ணா பல்கலைக்கழகம் | 1 |
| தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம் | 1 |
| தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் | 1 |
| தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் | 1 |
| திருவள்ளுவர் பல்கலைக்கழகம் | 2 |

மேற்குறிப்பிட்டுள்ள பல்கலைக்கழகங்களுள், சென்னைப் பல்கலைக்கழகம் மற்றும் மதுரை காமராசர் பல்கலைக்கழக ஆட்சிமன்றப் பேரவைகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் பதவிக் காலம் 10–1–2013 வரை ஆகும். அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆட்சிமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் பதவிக் காலம் 5–12–2013 வரை ஆகும். மற்ற பல்கலைக்கழகங்களின் அமைப்புகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் பதவிக் காலம் தேர்ந்தெடுக்கப்பெற்ற நாளிலிருந்து மூன்று ஆண்டுகளாகும்.

தேர்ந்தெடுக்கப்பெற விழையும் வேட்பாளர்கள் தங்களின் வேட்பு மனுக்களை 16–8–2011 அன்று பிற்பகல் 3–00 மணிக்குள் பேரவைச் செயலாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும். வேட்புமனு படிவங்கள் வேண்டுவோர் பேரவைச் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். வேட்பு மனுக்கள் 16–8–2011 அன்று பிற்பகல் 4–00 மணிக்கு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

விலகிக்கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் 16–8–2011 அன்று பிற்பகல் 5-00 மணிக்குள் வேட்பு மனுக்களைத் திரும்பப் பெறலாம்.

வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு மேற்படுமாயின், அப்பல்கலைக் கழகங்களின் அமைப்புகளுக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க தேர்தல் நடைபெறும். தேர்தல் நடைபெறும் நாள் பின்னர் அறிவிக்கப்படும்.

முற்பகல் 10–10

## 4. திருத்திய வரவு–செலவுத் திட்டம், 2011–2012, பொது விவாதமும் பதிலுரையும்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2011–2012 ஆம் ஆண்டுக்கான திருத்திய நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதமும் பதிலுரையும். மாண்புமிகு சட்டமன்ற இந்திய கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மரியாதைக்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, 2011–2012 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை சம்பந்தமாக நான் சார்ந்திருக்கக்கூடிய இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக ஒருசில கருத்துகளை இந்த மாமன்றத்தின் முன்பாக எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். நிதிநிலை அறிக்கையில் பல்வேறு அம்சங்கள், கிட்டத்தட்ட 99 பக்கங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. இதில் சொல்லப்பட்டிருக்கக்கூடிய அத்துணை அம்சங்களையும் இந்திய கம்யூனிஸ்டு கட்சி முழு மனதாகப் பாராட்டி வரவேற்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டும்; இந்தத் திட்டங்கள் முழுமையும் மக்களிடம் சென்றடைய வேண்டும். திட்டங்களை நிறைவேற்ற, திட்டங்கள் மக்களிடம் சென்றடையக்கூடிய முறையில், இரண்டு ஆண்டுக் காலம் நம்முடைய அதிகாரிகள், சட்டமன்ற உறுப்பினர்கள், அமைச்சர் பெருமக்கள் முழுமையான ஈடுபாட்டோடு இந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கான ஒரு involvement—ஐச் செலுத்த வேண்டும்.





அதேபோல இத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக நேர்மையான முறையில் நடவடிக்கை எடுக்கப்பட்டால், தமிழகத்தினுடைய வளர்ச்சி என்பது, அநேகமாக இப்போது இருப்பதைக் காட்டிலும், கூடுதலான மடங்கு வளர்ச்சி ஏற்படும் என்பது எங்களுக்கிருக்கக்கூடிய ஆழமான கருத்து. அந்த அடிப்படையில், அரசாங்கம் போட்டிருக்கக்கூடிய நல்ல திட்டங்களை, மக்கள் நலத் திட்டங்கள், சமூக நலத் திட்டங்கள், இலவச திட்டங்கள் என்று மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். தேர்தல் காலத்தில் கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய அத்துணை வாக்குறுதிகளும், இந்த நிதிநிலை அறிக்கையில் முழுமையாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, அதற்கான நிதி ஒதுக்கப்பட்டிருக்கின்றது.

வேளாண் துறையைப் பொறுத்தமட்டிலும், வேளாண் துறையிலே ஈடுபட்டுக் கொண்டிருக்கக்கூடிய விவசாயிகளின் நலன் முழுமையாகப் பாதுகாக்கப்பட்டிருக்கின்றது. வேளாண் துறையை நம்பியிருக்கக்கூடிய விவசாயத் தொழிலாளர்களின் நலன்கள் முழுமையும் இந்த நிதிநிலை அறிக்கையில் பாதுகாக்கப்பட்டிருக்கின்றன. நிதியொதுக்கப்பட்டிருப்பது மட்டுமல்ல; முழுமையாகக் கிராமத்தில் வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய விவசாயக் கூலித் தொழிலாளர்களின் நலன்கள் பாதுகாக்கப்படுவது மட்டுமல்ல; எதிர்கால வளர்ச்சிக்கான திட்டங்களும் இதிலே சொல்லப்பட்டிருக்கின்றன.

அதோடு நீங்கள் முழுமையாகப் படித்துப் பார்த்திருப்பீர்களேயானால், நேற்றையதினம்கூட நான் ஒரு கேள்வியைக் கேட்கின்றபோது, மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள், “நிதிநிலை அறிக்கையை முழுமையாக உறுப்பினர் படித்திருப்பாரேயானால், இந்தக் கேள்வியைக் கண்டிப்பாகக் கேட்டிருக்க மாட்டார்” என்று சொன்னார்கள். நான் முழுமையாகப் படித்தேன். இந்த நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கக்கூடிய நலத் திட்டங்கள், இலவச திட்டங்கள், தமிழகத்தினுடைய வளர்ச்சிக்கான, மேம்பாட்டிற்கான திட்டங்கள், இந்த அவையில் இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும், நமக்கு மட்டுமே தெரியுமே தவிர, நாம் முதலமைச்சரிடம் கேள்வியைப் போட்டு வாங்குகின்றபோதுதான், வெளியே இருக்கக்கூடிய பத்திரிகைகளும், ஊடகங்களும் செய்திகளாகச் சொல்கின்றபோதுதான், இப்படிப்பட்ட திட்டங்கள் தமிழகத்தினுடைய நிதிநிலை அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கின்றனவா என்பது தெரியும் என்ற காரணத்தினாலே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் பிரமாதமாகச் சமாளிக்கிறார் என்றுதான் கூறவேண்டும்! *(சிரிப்பு)* நேற்று நான் இப்படி பதில் சொன்ன பிறகுதான், அவர் உட்கார்ந்து நிதிநிலை அறிக்கையை முழுவதுமாகப் படித்திருக்கிறார் என்பது தெரிகிறது! *(சிரிப்பு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்களே, நன்றாகச் சமாளித்துவிட்டீர்கள்!

**திரு. எம். ஆறுமுகம்:** முன்பே படித்துவிட்டேன். இருந்தாலும் இன்னும் ஆழமாகப் படித்துச் சொல்ல வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் *(சிரிப்பு)* இன்றையதினம் அவற்றைப்பற்றி நான் சொன்னேன். இந்த நிதிநிலை அறிக்கையில் இருக்கக்கூடிய சில அம்சங்கள் குறித்து, எங்கள் கட்சியைச் சார்ந்திருக்கக்கூடிய சில தோழர்கள் தெளிவாக இங்கே எடுத்துச்சொல்லியிருக்கின்ற காரணத்தால், நான் அதற்குள் செல்லவில்லை.

மரியாதைக்குரிய தமிழகத்தினுடைய முதல்வராக இருந்த மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், தமிழகத்தினுடைய ஏழைக் குழந்தைகள், தாழ்த்தப்பட்ட மக்கள், கல்வி அறிவு பெறவேண்டும்; ஒரு நாளைக்கு ஒருவேளை உணவாவது அவர்களுக்குக் கிடைக்கவேண்டுமென்கிற அடிப்படையிலே சத்துணவுத் திட்டத்தினை அறிமுகப்படுத்தினார்கள். அதன்மூலமாக, தமிழகத்தினுடைய கல்வித் துறையில், பள்ளிக்கூடம் செல்லவேண்டுமென்று ஒரு awareness ஏற்பட்டதற்கு மதிய உணவுத் திட்டமும் காரணமாக அமைந்தது என்பது என்னுடைய ஆழமான கருத்து. மரியாதைக்குரிய மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள், தமிழகத்திற்கு முதல்வராக வந்ததற்குப் பின்னால்— தமிழகத்தில் முன்னர் தனியார் கொள்ளையடித்துக் கொண்டிருந்தார்கள்; கள்ளச் சாராயமாக இருந்தாலும் சரி, பிராந்திக் கடைகளாக இருந்தாலும் சரி, அதில் அடிக்கக்கூடிய கொள்ளைகளெல்லாம் தனியாருக்குப் போய் சேர்ந்து கொண்டிருந்தது; ஆனால், அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னால்— தமிழகத்தில் டாஸ்மாக் என்ற நிறுவனத்தைத் தொடங்கி,



தனியார் கொள்ளைக்கு முற்றுப்புள்ளி வைத்ததே இந்த அரசாங்கம்தான் என்பதை நான் இந்த நேரத்திலே நினைவுகூரக் கடமைப்பட்டிருக்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*முற்பகல் 10–15*

அநேகமாக திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலிருந்தபோது பாலாறும், தேனாறும் வீடு தேடிவரும் என்று சொன்னது. ஆனால், குழாய்களின் மூலமாக கள்ளச் சாராயம் வந்ததெல்லாம் நன்றாக நமக்குத் தெரியும். இன்றைக்கு இருக்கக்கூடிய டாஸ்மாக் கடைகளால் பல்வேறு தீய அம்சங்களும் உண்டு. இதனால் இன்றைக்கு இருக்கக்கூடிய இளைஞர் சமுதாயம் கெட்டுப் போவதற்கான வழிகளும் உண்டு. ஆனால், அதை எடுக்காவிட்டால் முழுமையாகக் கெட்டுப்போய்விடும். ஆகவே, அரசாங்கத்திற்கு வருமானத்தை ஈட்டக்கூடிய முறையில், ஆண்டுக்குக் கிட்டத்தட்ட 17 ஆயிரம் கோடி ரூபாய் இந்த அரசாங்கத்திற்கு வருமானத்தை ஈட்டிக் கொடுக்கக்கூடிய அளவிற்கு அவர்களுடைய ஆட்சியிலே செய்தது என்பது, ஐந்தாண்டுக் காலம் கருணாநிதிக்குப் பொற்கால ஆட்சியாக இருந்தது. இலவச டிவி. மற்றும் இன்னும் இருக்கக்கூடிய பல்வேறு திட்டங்களுக்கு வழி காணப்பட்டது. இப்பொழுது அதற்குப் பின்னாலே தனியார் அடித்து வந்திருக்கக்கூடிய கொள்ளைக்கு மீண்டும் ஒரு முற்றுப்புள்ளி; ஒரு ஆப்பு வைக்கக்கூடிய முறையிலே— ஆப்பு என்ற வார்த்தை parliamentary word என்று நினைக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த வருமானம் கருணாநிதியின் பொற்கால ஆட்சிக்கு வழி வகுத்தது என்று சொல்கிறார்கள். பொற்கால ஆட்சியல்ல; அது ஒரு கற்கால ஆட்சி. *(மேசையைத் தட்டும் ஒலி) (சிரிப்பு)*

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொற்கால ஆட்சி என்பது அவர்களுக்கு இருக்கக்கூடிய பொற்கால ஆட்சி. *(சிரிப்பு)* மக்களுக்காகச் சொல்லவில்லை. அதில் வருமானம் ரூ.17,000 கோடி என்பது, கருணாநிதி அவர்களுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய பொற்கால ஆட்சி. இப்பொழுது தனியார்

தொலைக்காட்சி, அது சுமங்கலி டி.வி.—யாக இருந்தாலும் சரி, channel–களாக இருந்தாலும் சரி, தனியாருடைய குடும்பத்திற்குச் சென்றுகொண்டிருந்ததற்கும் ஒரு பலமான ஆப்பு வைக்கக்கூடிய முறையில், அரசு கேபிள் டி.வி. கொண்டு வந்திருப்பது என்பதும் ஒரு சிறந்த நடவடிக்கை என்பது மட்டுமல்ல; (மேசையைத் தட்டும் ஒலி) தனியாருடைய சுரண்டலிலிருந்து, exploitation–இலிருந்து ஒரு முற்றுப்புள்ளி வைக்கக்கூடிய முறையில் அரசாங்கத்திற்கு வருமானத்தை ஈட்டக்கூடிய முறையில், இந்தத் திட்டம் என்பது நன்மை பயக்கக்கூடிய திட்டமாக அமைந்திருக்கிறது. அதைப் பாராட்டுகிறோம்; வாழ்த்துகிறோம். எனவே, இப்படிப்பட்ட திட்டங்கள் நாட்டில் தொடர்ந்து நடைபெற வேண்டும் என்பது எங்கள் கட்சியினுடைய ஆழமான கருத்து.

இந்த நிதிநிலை அறிக்கையிலே மிக முக்கியமான அம்சங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. நான் பல்வேறு விஷயங்களுக்குள் செல்லவில்லை. தொழில் துறை வளர்ச்சி சம்பந்தமான பல திட்டங்கள் இங்கே சொல்லப்பட்டிருக்கின்றன. ஆனால், அமெரிக்கப் பொருளாதாரத்தில் சமீப காலத்தில் கடுமையான வீழ்ச்சி ஏற்பட்டிருக்கின்றது. வெளிநாட்டு முதலீடுகள் வரத்தையும், ஏற்றுமதியையும் பாதிக்குமென்றும், அமெரிக்க நாடு இந்தியாவில் முதலீடு செய்வதும், பன்னாட்டுக் கம்பெனிகள் முதலீடு செய்வதென்பதும், கார்ப்பரேட் நிறுவனங்கள் இந்தியாவில், தமிழகத்தில் முதலீடு செய்வதென்பதும், எதிர்காலத்திலே கடுமையான பாதிப்பை உருவாக்கும் என்று, சமீபத்தில் ஒரு பத்திரிகையில் நம்முடைய பாரதப் பிரதமர் அவர்களின் பொருளாதார ஆலோசர் மரியாதைக்குரிய திரு. ரங்கராஜன் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கின்றார்கள்.

1940-இலிருந்து அமெரிக்காவின் கடன் தொகை உச்சவரம்பு 106 மடங்காக உயர்ந்துள்ளது. அமெரிக்கப் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளதை, சர்வதேச அளவில் நாடுகளின் பொருளாதார நிலையை நிர்ணயம் செய்யும் அமைப்பு, 3 ஆம் தர நிலையிருந்து 2A+ தர நிலைக்கு அமெரிக்கப் பொருளாதாரத்தைத் தாழ்த்தி சான்றிதழ் வழங்கியுள்ளது. அமெரிக்க டாலர் வீழ்ச்சியடைந்ததையொட்டி, அமெரிக்கப் பொருளாதாரத்தில் சரிவு ஏற்பட்டுள்ளது. இதனால் இந்தியப் பொருளாதாரமும் வீழ்ச்சியடையும் நிலை ஏற்பட்டிருக்கின்றது. அமெரிக்கப் பொருளாதார வீழ்ச்சி, அதன் தொடர்புடைய எல்லா நாடுகளையும்



பாதிக்குமென்று குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். இந்தியாவைப் பொறுத்தமட்டிலும், கடுமையான பாதிப்பு ஏற்படாவிட்டாலும்கூட, ஏற்றுமதி குறையும். வெளிநாட்டு வர்த்தகத்தின் கனவு வீழ்ச்சியடையும். இந்தியாவிற்கு வரும் வெளிநாட்டு மூலதனம் குறையும். ஆனால், எதிர்காலத்தில் சீனாவினுடைய பொருளாதாரம் ஆதிக்கம் செலுத்துமென்ற அடிப்படையிலே தன்னுடைய கருத்தைச் சொல்லியிருக்கின்றார். இதை நான் சொல்வதற்குக் காரணம், மீண்டும் கார்ப்பரேட் நிறுவனங்களும், பன்னாட்டு மூலதனக் கம்பெனிகளும் இந்தியாவிலும் சரி, தமிழகத்திலும் சரி; தொழில் தொடங்குகிறபொழுது, அதனால் கடுமையான நெருக்கடியும், சிக்கலும் ஏற்படுவது மட்டுமல்ல; இந்த மூலதனங்கள் மீண்டும் அந்த நாட்டுக்கே செல்லும் என்ற கருத்தைச் சொல்லியிருக்கக்கூடிய இந்த நேரத்தில், நம்முடைய இந்தியாவில், தமிழகத்தில் இருக்கக்கூடிய பழைமையான தொழில்களை, தொன்மையான தொழில்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கின்றது.

உலக அளவில், தமிழ்நாடு, உற்பத்தியைச் சார்ந்திருக்கக்கூடிய தொழில் முதலீட்டுக்கு உகந்த மாநிலமாகக் கருதப்படுகிறது. சமீப காலமாக மாநிலத்தில் தொழில் வளர்ச்சி பின்னடைவைச் சந்தித்து வருவதாக நிதிநிலை அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கின்றது. அது உண்மைதான். கடந்த ஐந்தாண்டுக் காலத்தில் தமிழ்நாடு பின்னோக்கி சென்று கொண்டிருந்ததே தவிர, தமிழகத்தினுடைய தொழில் வளர்ச்சியில் கவனம் செலுத்தப்படவில்லை என்பது தெளிவாக இந்த அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. உற்பத்தி சார்ந்திருக்கக்கூடிய தொழில் தொடங்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று கோடிட்டுக் காட்டப்பட்டிருக்கின்றது.

*முற்பகல் 10–20*

நம்முடைய மாநிலத்தில், பருத்தியை மூலப் பொருளாகக் கொண்டு செயல்படும் பஞ்சாலைகள், பனியன், விசைத்தறி போன்ற தொழில்களைப் பாதுகாப்பதற்கான முன்முயற்சிகளை அரசு மேற்கொள்ள வேண்டும். ஆனால், தமிழகத்தில்தான் ஒட்டுமொத்தமாக நூல் உற்பத்தி என்பது, 45 சதவீதம் செய்யப்படுகின்றது. இத்தொழிலுக்குத் தேவையான மூலப் பொருளான பருத்தியை உற்பத்தி செய்வதற்கு விவசாயிகளை

ஊக்கப்படுத்த வேண்டும். தமிழகத்தில் இருக்கக்கூடிய பஞ்சாலைகளுக்கு ஆண்டொன்றுக்கு 50 இலட்சம் பேல்கள் பருத்தி தேவை. ஆனால், தமிழகத்தில் 5 இலட்சம் பேல்கள் பருத்தி மட்டுமே உற்பத்தியாகிறது. 45 இலட்சம் பேல்கள் பருத்தியை நாம் வட நாட்டிலிருந்து வாங்க வேண்டும்; அல்லது வெளி நாட்டிலேயிருந்து இறக்குமதி செய்ய வேண்டும். எனவே, தொழிலுக்கு அடிப்படைத் தேவையான மூலப் பொருள்களை உற்பத்தி செய்வதற்கு விவசாயிகளை ஊக்குவிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். மத்திய அரசாங்கமும் நம்முடைய தேவைக்கேற்ப பஞ்சை இருப்பு வைக்காமல், வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்வதைத் தடை செய்வதற்கான முறையில், நம்முடைய முதலமைச்சர் அவர்களும் வலியுறுத்தியிருக்கிறார்கள். மீண்டும் அதை உறுதிப்படுத்தி, நம்முடைய தேவைக்குப் போகத்தான் வெளிநாட்டிற்குப் பருத்தி ஏற்றுமதி செய்ய வேண்டும்; இல்லையென்றால், ஏற்றுமதி செய்யக்கூடாது என்ற சூழலை உருவாக்க வேண்டும்.

அதேபோல, தமிழகத்தில் சமீப காலமாக, கிட்டத்தட்ட 20, 25 ஆண்டுக் காலமாக—heavy industries—பெரிய தொழிற்சாலைகளுடைய வரவு குறைந்துகொண்டே வந்திருக்கிறது. தமிழகத்தில் heavy industries வருவதற்கான நடவடிக்கைகள் தமிழக அரசின் சார்பாக எடுக்கப்பட்டு, மத்திய அரசாங்கம் அதற்கான அனுமதி கொடுக்காமல் இருப்பதற்கான சூழ்நிலை இருக்குமேயானால், அதைக் கேட்டுப் பெற வேண்டும். மத்திய அரசாங்கம் பெரிய பெரிய தொழில்களைத் தமிழகத்திலே தொடங்குவதற்கு திட்டமிட வேண்டும்.

நிதிநிலை அறிக்கையில், 2025 தொலைநோக்குத் திட்டத்தைத் தயாரிப்பதுடன், மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலைமையில் தமிழ்நாடு கூட்டமைப்பு மேம்பாட்டு வாரியம் ஒன்றினை அரசாங்கம் உருவாக்கும் என்று குறிப்பிடப்பட்டிருப்பது, தமிழகத்தினுடைய தொழில் வளர்ச்சிக்கும், அதனுடைய தேவைக்கும் வாய்ப்பு ஏற்படக்கூடிய முறையிலே அமைந்துள்ளது என்பது பாராட்டுதலுக்குரியது.

அடுத்து, இந்தத் தொழில்களுக்கெல்லாம் அடிப்படையாக இருக்கக்கூடியது மின்சாரம். மின்சாரத்தைப்பற்றி மரியாதைக்குரிய நம்முடைய முதலமைச்சர் அவர்கள் முன்னாலேயே கோடிட்டுக் காட்டினார்கள். ஐந்தாண்டுக் காலத்தில் நம்முடைய



தமிழகத்தினுடைய மின் தேவை சராசரியாக 10,500 மெகா வாட்டிலிருந்து 11,500 மெகா வாட் ஆகும். ஆனால், சராசரியாக மின் உற்பத்தி 8,000 மெகா வாட் மட்டுமே. 2,500 மெகா வாட் முதல் 3,500 மெகா வாட் வரை மின் தட்டுப்பாடு உள்ளதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. மின் உற்பத்தித் திட்டங்களுக்கு அரசு எடுத்துள்ள முயற்சிகள், நடவடிக்கைகள் பாராட்டுதலுக்குரியவை.

அதே நேரத்தில், மின்சாரப் பற்றாக்குறையைப் போக்குவதற்கு, என்னுடைய தொகுதியிலிருக்கக்கூடிய காடம்பாறை நீரேற்று மின் திட்டம், மரியாதைக்குரிய புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது தொடங்கப்பட்டது. அந்தத் திட்டத்தின்மூலமாகக் கூடுதலான மின் உற்பத்தி செய்வதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளனவா என்பதை அரசு பரிசீலிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, மின் உற்பத்தியில். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காடம்பாறை நீருந்து மின் சக்தித் திட்டத்தில் கூடுதலாக மின் உற்பத்தி செய்வதற்கு வாய்ப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆனால், எங்கெங்கெல்லாம் வாய்ப்பு இருக்கிறதோ, அது நீர் மின் சக்தியாக இருந்தாலும் சரி அல்லது அனல் மின் சக்தியாக இருந்தாலும் சரி அல்லது gas மூலமாக இருந்தாலும் சரி, சோலார் மின் சக்தியாக இருந்தாலும் சரி, எங்கெங்கு வாய்ப்பு இருக்கிறதோ, அத்தனை வாய்ப்புகளையும் 100 சதவீதம் முழுமையாகப் பயன்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, வாய்ப்பு இருக்கின்ற அனைத்து இடங்களிலும், நிச்சயமாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேயே மின் உற்பத்தித் திட்டம் தொடங்கப்பட்டு, அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேயே உற்பத்தித் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மின் உற்பத்தி குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்தினார்கள். மின்சாரக் கசிவு-line loss-என்பது 18 சதவீதம் இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அது தொடர்ச்சியாகச் சொல்லப்பட்டு வரக்கூடிய ஒரு கருத்து. இவ்வளவு தொழில்நுட்ப வளர்ச்சி ஏற்பட்டதற்குப் பின்னாலுங்கூட, அந்த 18 சதவீதம் line loss—ஐக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கிறதா என்று தெரியவில்லை. பெரிய பெரிய தொழிற்சாலைகளில், மின்சாரம் திருட்டுத்தனமாகக் கொக்கி போட்டு எடுப்பதாகச் சொல்கிறார்கள். அந்த மாதிரியான திருட்டுகளைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர்களுக்கு fine போட்டால், பெரிய தொழிற்சாலைகளின் தொழிலதிபர்களெல்லாம் அதனைக் கட்டிவிட்டு வந்துவிடுவார்கள். எனவே, அதைத் தடுத்து நிறுத்த வேண்டும். தமிழகத்தினுடைய. .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் திருட்டை முழுமையாக, அறவே நீக்கிட வேண்டுமென்று அம்மா அவர்கள், அதற்காக தனியாக ஒரு ஆய்வுக் கூட்டம் நடத்தி, பல்வேறு ஆலோசனைகளையும், அறிவுரைகளையும் வழங்கியிருக்கிறார்கள். அதிலே ஒரு கட்டமாக, இப்போது ஓய்வுபெற்ற இராணுவ வீரர்களையும், அதிகாரிகளையும் கொண்டு, அவர்களுக்குக் குறைந்தகால தொழில் நுட்பப் பயிற்சிகளையும் அளித்து, தமிழகம் முழுவதற்கும் மின் திருட்டைக் கண்டுபிடிப்பதற்கென்றே தனியாக ஒரு புதிய அமைப்பினை உருவாக்கியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* அதனால் கூடுதலாகப் பலன் கிடைத்தால், அதனுடைய விளைவாக, அந்தத் திட்டம் முழுமையாக விரிவுபடுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10—25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவை நிதிநிலை அறிக்கையில் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. என்னுடைய கருத்தெல்லாம், அது தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருப்பது மட்டுமல்ல; ஒரு



குறிப்பிட்ட காலத்திற்குப் பின்னால் அவர்களை இந்தப் பணியில் நீடிப்பதா, வேண்டாமா என்று சொல்லப்பட்டிருப்பதுதான். அவர்களை நீடிக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய அனுமானம். தமிழகத்தினுடைய மின் உற்பத்தியை அதிகரிக்க, மத்திய அரசு புதிய மின் நிலையங்களை உருவாக்க முழுமையான நிதி உதவி வழங்க வேண்டுமென்ற கோரிக்கையினை தமிழகத்திலிருந்து நாம் எழுப்பவேண்டும். தமிழக அரசு அதற்கான முழு முயற்சிகள் மேற்கொள்ளவேண்டும் என்பது எங்களுக்கு இருக்கக்கூடிய கருத்துகள்.

சாலைகள்; சாலைகளைப் பொறுத்தமட்டிலும், அநேகமாக மற்ற மாநிலங்களோடு compare பண்ணினோம் என்று கேட்டால், தமிழகத்தில் இருக்கக்கூடிய சாலைகள் நல்லவிதமான வளர்ச்சி பெற்றிருக்கக்கூடிய சாலைகளாகத்தான் இருக்கின்றன. தரமான சாலைகள் அமைப்பது அவசியம் என்பது உண்மைதான். தெற்கு ஆசியாவில் பெரிய தொழில் மையமாக சென்னை திகழ்ந்தாலும்கூட, தமிழகத்தில் சென்னையை அடுத்த தொழில் நகரம் கோவை. தெற்கு ஆசியாவினுடைய பெரிய தொழில் மையம் சென்னை. சென்னைக்கு அடுத்தபடியாக பெரிய தொழில் நகரம் என்று சொல்வது என்பது கோவை மாவட்டம். அது தென் இந்தியாவின் மான்செஸ்டர் என்று இந்திய வரைபடத்தில் சொல்லப்பட்டிருக்கக்கூடியது. இன்றைக்கு மாவட்டங்கள் பிரிந்திருந்தாலும்கூட, அது ஒரு தென்னிந்திய மான்செஸ்டர்தான். ஆனால் சென்னைக்கு அடுத்தபடியாக கோவை மாவட்டம், பஞ்சாலை, இன்ஜினியரிங், பம்புசெட் உற்பத்தி, பஞ்சாலை இயந்திரங்கள் தயார் செய்யும் தொழிற்சாலை, வாகனங்களுக்குத் தேவையான மீட்டர் தயார் செய்யும் தொழிற்சாலை, பனியன், விசைத்தறி, தேயிலை உற்பத்தி, குறு சிறு நடுத்தரத் தொழில்களை உள்ளடக்கியும், கிரைண்டர், மிக்சி போன்றிருக்கக்கூடிய தொழில்களை உள்ளடக்கியும் இருக்கக்கூடிய பொறியியல் தொழிற்சாலைகளைக் கொண்டு ஏற்றுமதி செய்யக்கூடிய அளவிற்கு வளர்ச்சி பெற்றிருக்கக்கூடியது. இந்த நிலையில், கோவை மாநகராட்சியினுடைய மக்கள் தொகை நெருக்கத்தாலும், வாகனப் பெருக்கத்தாலும், நகரத்தில் சாலைகள் குறுகலாக இருப்பதாலும், விபத்துகள் ஏற்படக் காரணமாக அமைந்துள்ளன. மனித உயிர்களைப் பாதுகாக்கவும், வாகன நெரிசலைத் தவிர்க்கவும், காந்திபுரம் to சத்தி சாலையை இணைக்கும் மேம்பாலம், தேசிய நெடுஞ்சாலை 47 என்று சொல்லும் அவிநாசி சாலை, பொள்ளாச்சி–பாலக்காட்டிலிருந்து உக்கடம் வரக்கூடிய சாலையில் மேம்பாலம் அமைத்தல், அதேபோல, நகரில் subway–களை அமைக்கக்கூடிய

*நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென்று இந்த நேரத்திலே உங்களிடத்திலே கோரிக்கையாக வைக்கிறேன்.*

*அதேபோல், கோவையிலிருந்து ஊட்டிக்குச் செல்லக்கூடிய பாதை என்பது— உண்மையிலேயே, ஊட்டி என்பது சர்வதேச ரீதியாக பல்வேறு மக்கள், சுற்றுலாப் பயணிகளாக வந்து செல்லக்கூடிய இடம்; அந்த ஊட்டியினுடைய வழிப்பாதை—மிகவும் மோசமாக, அங்கே செல்லமுடியாத அளவிற்கு உள்ளது. உங்களை நான் குறை சொல்லவில்லை. அது தேசிய நெடுஞ்சாலை. ஆனால், அந்தச் சாலையில் மழைக் காலங்களில் செல்லவே முடியாது. நூற்றுக்கணக்கான தொழிற்சாலைகளின் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள், நிறைய கல்லூரிகளின் மாணவர்கள், மாணவிகள் சென்று வருவதாலும், ஒரு சுற்றுலா மையமாக அது அமைந்துள்ளதாலும், அந்தச் சாலைகளை உடனடியாகச் செப்பனிடவேண்டும்.*

*அதேபோல, வால்பாறை செல்லும் சாலையை அகலப்படுத்தவேண்டும். சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில், ஆழியாறு அணைக்கட்டு, குரங்கு அருவி, சின்னக்கல்லாறு அணைக்கட்டு, சோலையாறு அணைக்கட்டு, நீரார் அணைக்கட்டு, காடம்பாறை நீரேற்று மின் திட்டம், நெல்லித்துறை* Scheme, Top Slip *என இதுபோன்று இருக்கக்கூடிய இந்த வால்பாறைப் பகுதியில், அந்தச் சாலைகள் அகலப்படுத்தப்படவேண்டும். இன்னும் அதை விரிவுபடுத்த வேண்டும் என்பது மட்டுமல்ல; அந்தப் பகுதியைச் சுற்றுலா மையமாக உருவாக்கி, சுற்றுலாப் பயணிகள் அதிகமாக வந்து செல்லக்கூடிய அளவிற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.*

*பள்ளிக் கல்வி. நிதிநிலை அறிக்கையில் அரசு, கல்விக்காக அதிக கவனம் செலுத்தியிருப்பது பாராட்டுதலுக்குரியது. "அனைவருக்கும் கல்வி" என்று சொல்வது என்பது, சாதாரண விஷயம் அல்ல. இன்றைக்கு ஏழைகளும்கூட கல்வி கற்கக்கூடிய அளவிற்கு ஒரு விழிப்புணர்வை உருவாக்கி அதற்காக இந்த அறிக்கையில் பல்வேறு அம்சங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. நாம் பள்ளிக்குப் போகவேண்டும் என்ற உணர்வைக்கூடத் தூண்டும்வகையில், நீங்கள் கொடுத்திருக்கக்கூடிய நிதிநிலை அறிக்கையிலே, பள்ளி மாணவர்களுக்கான ஊக்கத் தொகை, பள்ளிக் குழந்தைகளுக்கான சீருடை, முழுக்கால் சட்டை, பெண்களுக்குச் சல்வார் கமீஸ், காலணிகள் வழங்குவது இவையெல்லாம் பெரிய வரவேற்பைப் பெற்றுள்ளன.*



*சாதாரண ஏழையெளிய, கிராமப்புறத்தில் வாழக்கூடிய மக்களின் பிள்ளைகள் எல்லாம் இன்றைக்கு* Uniform *போடுகிறார்கள். நாங்களெல்லாம் படித்த காலத்தில் பார்த்தீர்களென்றால், ஒரு* khaki half trouser; blue *சட்டையும் ஒரு வாரத்திற்குப் போட வேண்டும். அதை ஆறு மாதங்களுக்கு மேல் போடவே முடியாது. அம்மா அவர்கள் இருக்கக்கூடிய இந்தக் காலக்கட்டத்திலே நாம் மாணவர்களாக இருப்போமேயானால், நாமெல்லாம் படித்து விட்டு எங்கேயாவது பெரிய பதவிகளிலே போயிருக்கலாம்! (சிரிப்பு) (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கான ஒரு வாய்ப்பு இல்லை.*

*முற்பகல் 10–30*

*கிராமப்புறப் பகுதியில் இருக்கக்கூடிய சாதாரண ஏழையெளிய மக்கள், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இப்படிப்பட்ட அறிவிப்பு நிதிநிலை அறிக்கையில் சொல்லப்பட்டிருப்பது என்பது, ஒரு வரப்பிரசாதம் மட்டுமல்ல; எதிர்காலத்தில் பள்ளிக்குச் செல்ல வேண்டும்; கல்லூரிக்குச் செல்ல வேண்டுமென்ற உணர்வைத் தூண்டக்கூடிய முறையில் கல்வி சம்பந்தப்பட்டிருக்கக்கூடிய அறிவிப்புகள் இதில் சொல்லப்பட்டிருக்கின்றன; அதற்காகப் பாராட்டுகிறோம்; வாழ்த்துகிறோம்.*

*அதேபோல, கல்லூரியில் படிக்கக்கூடியவர்களுக்கும், ப்ளஸ் 1, ப்ளஸ் 2 மாணவர்களுக்கெல்லாம் இலவசமாக மடிக் கணினி கொடுக்கிறோம். நாங்கள் எல்லாம் மடிக் கணினியை எங்கே பார்த்தோம்? "எங்களுக்கெல்லாம்கூட ஒரு லேப்–டாப் கொடுங்கள்" என்று ஒரு எம்.எல்.ஏ. கோரிக்கை விடுத்தார். "உங்களுடைய நிதியிலிருந்து வாங்கிக் கொள்ளுங்கள்" என்று அம்மா அவர்கள் அப்போதே சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடு) பட்ஜெட்டிலே அதை இலவசமாக மாணவர்களுக்கு . . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லூரி மாணவர்களுக்கு மட்டுமல்ல; பள்ளியிலே படிக்கின்ற ப்ளஸ் 1, ப்ளஸ் 2 மாணவர்களுக்கும் மாண்புமிகு அம்மா அவர்கள் மடிக் கணினி கொடுக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளியில் படிக்கும் ப்ளஸ் 1, ப்ளஸ் 2 மாணவர்களுக்கும்தான் இலவசமாக மடிக் கணினி கொடுக்கிறோம். அதேபோன்று, தமிழகத்தில்தான் பொறியியல் கல்லூரிகள் அதிகம்; மற்ற மாநிலங்களைக் காட்டிலும், தமிழகத்தில்தான் பொறியியல் கல்லூரிகள் அதிகம். இன்னும் வெளிநாடுகளிலிருந்தும், வெளி மாநிலங்களிலிருந்தும் வந்து, தமிழகத்திலே உள்ள பொறியியல் கல்லூரிகளில் சேர்ந்து படிக்கக்கூடியவர்கள் ரொம்ப அதிகம். ஆண்டுதோறும், பொறியியல் படிப்பை முடித்துவிட்டு வெளியிலே வரக்கூடியவர்களின் எண்ணிக்கை கூடுதலாகிக் கொண்டேயிருக்கிறது. ஆனால், அவர்களுக்கு வேலைவாய்ப்பு என்பது முழுமையாகத் தமிழகத்தில் மட்டுமல்ல; வெளிநாட்டிலும் வேலைவாய்ப்பை உருவாக்கிக் கொடுக்கக்கூடிய வகையில், அதற்கேற்றாற்போல ஒரு திட்டம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. ஆனால், பொறியியல் கல்லூரிகளில் படித்து வெளியே வரக்கூடிய மாணவர்கள் வெளிநாடு செல்கின்றபோது, வெளிநாடு செல்வதற்கு அரசாங்கமே அவர்களுக்கு வெளிநாட்டில் வேலை வாங்கிக் கொடுக்கக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்குவதற்கான ஒரு திட்டத்தை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆஸ்திரேலியா போன்றிருக்கக்கூடிய நாடுகளில் நம்முடைய இந்திய மாணவர்கள் அடி வாங்குவதைப் பார்த்தால், இலண்டனில் அடி வாங்குவதைப் பார்த்தால் பரிதாபமாக இருக்கிறது. ஆகவே, தமிழ்நாடு அரசாங்கமே அவர்களுக்கு வெளிநாட்டில் வேலை வாங்கிக் கொடுக்கக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்கித் தரவேண்டும். கேரள அரசு அதற்கான நடைமுறைகளைச் செய்து கொண்டிருக்கிறது.

இந்தக் கல்வி சம்பந்தப்பட்டிருக்கக்கூடிய இன்னொரு விஷயம்; என்னுடைய வால்பாறை தொகுதியிலே கிட்டத்தட்ட 40 hair-pin bends . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Overseas Manpower Corporation என்ற அமைப்பை தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது. இளைஞர்களுக்கு, படித்தவர்களுக்கு வெளிநாடுகளில் வேலைவாய்ப்பைப் பெற்றுத் தருவதுதான் இந்த கார்ப்பரேஷனின் பணி. அதை மேலும் விரிவுபடுத்துவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** நன்றி. என்னுடைய வால்பாறை தொகுதியிலே இருப்பவர்களுடைய மிக முக்கியமான கோரிக்கை. Tamil Nadu Public Service Commission Examination மற்றும் இதுபோன்ற தேர்வுகளை எழுத வேண்டுமென்றால், பேருந்தில் வால்பாறையிலிருந்து கிட்டத்தட்ட 5 மணி நேரம் பயணம் செய்ய வேண்டியுள்ளது. Tamil Nadu Public Service Commission Examination, இன்னும் இருக்கக்கூடிய தேர்வுகளை எழுதுவதற்கு, வால்பாறையை ஒரு மையமாகத் தமிழக அரசு அறிவிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். தேர்வு எழுத வருகிற வழியில் நிறைய பஸ்கள் accident ஆகி, brake-down ஆகி, examination எழுத கல்லூரிக்கு வரமுடியாமல் போய்விடுகிறது. தலைவர் அவர்களே, கிட்டத்தட்ட 40 கொண்டை ஊசி வளைவுகள் (Hair pin bends) இருக்கின்றன. 40 Hair pin bends–ஐ கடந்து அங்கிருந்து நாம் வருவதற்குள் போதும் போதும் என்றாகி விடுகிறது. அதனால் வால்பாறையை ஒரு தேர்வு மையமாக அறிவிக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்களின் கோரிக்கை ஏற்கப்பட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) வால்பாறையில் தேர்வுகளை எழுதக்கூடிய வகையில் ஒரு ஏற்பாட்டைச் செய்து, வால்பாறை ஒரு தேர்வு மையமாக அறிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சம் நிறைந்த நன்றியினை நான் எனது வால்பாறை தொகுதி மக்களின் சார்பாகத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி. அதேபோல வால்பாறை, தொழிலாளர்கள் நிரம்பியிருக்கக்கூடிய பகுதி; கீழேயெல்லாம் வந்து படிக்க முடியாது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கே தெரியும். அங்கே ஒரு பாலிடெக்னிக் ஆரம்பிப்பதற்கு ஏற்கெனவே ஒரு proposal இருக்கிறது. எனவே, ஒரு பாலிடெக்னிக்கை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கையையும் முன்வைக்கிறேன்.

வால்பாறையிலே உள்ள அரசு உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் எஸ்.எஸ்.எல்.சி., ப்ளஸ் 2 தேர்வுகளில் தேர்ச்சி விகிதம் என்பது குறைவாகவே உள்ளது. 10, 15 ஆண்டுக் காலமாகவே தேர்ச்சி விகிதம் குறைவாகவே இருந்து கொண்டிருக்கிறது. எனவே, அதில் ஒரு சிறப்புக் கவனம் செலுத்தி, இருக்கக்கூடிய இடங்கள் முழுமைக்கும், ஆசிரியர்கள் பற்றாக்குறையைப் போக்கக்கூடிய வகையில் நீங்கள் அங்கே கீழேயிருப்பவர்களை நியமனம் செய்தால், நன்றாக இருக்கும். அமைச்சர் அவர்களிடம்கூட நான் ஒரு requisition கொடுத்தேன். "நீங்கள் அவர்களுக்காக டிரான்ஸ்பர் கேட்கிறீர்கள்; ஆனால், அங்கே போட்டால் போகமாட்டேன் என்கிறார்கள்; இவர்களுக்காக நீங்கள் பரிந்துரை செய்கிறீர்கள்; நான் என்ன செய்வது?" என்று நேரடியாகவே கேட்டார். அது உண்மைதான். ஆனால், அந்தப் பகுதியிலே வாழும் தொழிலாளர்களின் குழந்தைகள் எவரேனும் படித்துப் பட்டம் பெற்றிருப்பார்களேயானால், வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து இருப்பார்களேயானால், அவர்களை நியமித்தீர்கள் என்றால், அவர்கள் அங்கே நிரந்தரமாக இருப்பார்கள். அங்கே இந்தமாதிரி காலியிடங்கள் இருப்பதற்கான வாய்ப்பு இருக்காது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அதைச் செய்ய வேண்டும்.

முற்பகல் 10–35

மக்கள் நல்வாழ்வு என்ற தலைப்பில் 2011–2012 ஆம் ஆண்டுக்கான திருத்திய நிதிநிலை அறிக்கையில் 4,761 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. அனைவருக்கும் சுகாதாரம் என்ற அடிப்படைக் கொள்கை பாராட்டுதலுக்குரியதாகும். "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பதை அம்மாவினுடைய அரசு ஏற்றுக்கொண்டு, அதற்கான முயற்சியில் இந்தச் சுகாதாரத்திற்கான (மேசையைத்



தட்டும் ஒலி) தொகையை ஒதுக்கியிருப்பது என்பதும், 75 சிறிய நகரங்களில் பொதுச் சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு இயக்குநரின் கட்டுப்பாட்டில் புதிய நகர்ப்புற ஆரம்பச் சுகாதார நிலையங்கள் உருவாக்கப்படும் என்பதும், மக்களின் வீட்டிற்கே சென்று சுகாதார வசதிகள் அளிக்க நடமாடும் மருத்துவமனை தொடங்கப்படும் என்பதும் சிறந்த திட்டங்கள் என்பது மட்டுமல்ல; இதுவரையில் நடைமுறையில் இல்லாத திட்டங்களை அறிமுகப்படுத்தி இருக்கின்றார்கள். பாராட்டுகிறோம், வாழ்த்துகிறோம்.

அதேபோல், ஏழைப் பெண்களுக்கு மகப்பேறு உதவித் தொகை 6,000 ரூபாயிலிருந்து 12,000 ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது. Hundred percent increase. அதேபோல, நமது தமிழ்நாட்டில் Maternity Benefit Act என்று ஒன்று இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்ஃபோன் சத்தம் வருகிறது. நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். Seize செய்துவிடுவேன்.

**திரு. எம். ஆறுமுகம்:** மன்னித்து விடுங்கள். Maternity Benefit Act என்ற சட்டம் இருக்கிறது. மகப்பேறு உதவித் தொகையை நீங்கள் உயர்த்திக் கொடுத்திருக்கிறீர்கள். ஆனால், அந்தச் சட்டத்தில், தமிழ்நாடு அரசாங்கம், தொழிற்சாலைகளில் வேலை செய்யக்கூடிய பெண்களுக்கும் மகப்பேறு காலங்களில் கூடுதலான மகப்பேறு உதவித் தொகை கொடுப்பதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உணவுப் பாதுகாப்பு, மருந்து கட்டுப்பாடு நிருவாகத்திற்கென தனி ஒரு ஆணையரகம் உருவாக்கப்பட வேண்டுமென்பது சரியானது. திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியில் தமிழ்நாட்டிலே போலி மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டன; போலி தொழிற்சாலைகள் கண்டுபிடிக்கப்பட்டன. எத்தனை பேர்களின் உயிரை வாங்கியிருப்பார்கள்? ஆனால், இன்றைக்கு இந்த ஆட்சியில் கலப்படத்தைக் கண்டறியவும், போலி மருந்துகளைத் தயாரிக்கும் தொழிற்சாலைகளின் விற்பனையாளர்களைத் தடுத்து நிறுத்தவும், மக்களுக்குத் தரமான மருந்து, மாத்திரைகள் கிடைக்க வேண்டுமென்றும் இந்தத் திட்டத்தை அறிமுகப்படுத்தியிருப்பது பாராட்டுதலுக்குரியது.

உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல் அக்டோபர் மாதத்தில் நடைபெறும் என்று தெரிவித்திருக்கிறார்கள். உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதியே இல்லையென்ற தகவல்கள் வந்து

கொண்டிருக்கின்றன. அது உண்மையா, இல்லையா என்பது தெரியவில்லை. ஆனால், உள்ளாட்சி அமைப்புகளுக்கு இப்போது நிதி இல்லையென்ற ஒரு சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. அதை என்ன என்று பார்க்க வேண்டும். அக்டோபர் மாதத்தில் தேர்தல் நடைபெறக்கூடிய இந்த நிலையில், திருப்பூர், ஈரோடு, சேலம், தூத்துக்குடி, வேலூர் போன்றவை புதிய மாநகராட்சிகளாக அறிவிக்கப்பட்டுள்ளன. ஆனால், அதோடு இணைக்கப்பட்டுள்ள பகுதிகள் தனித் தனியாகவே, இன்னும் ஊராட்சிகளாக, பேரூராட்சிகளாகத்தான் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. எனவே, மாநகராட்சி என்று அறிவிக்கப்பட்டிருக்கக்கூடிய அடிப்படையில் தேர்தல் நடைபெறுமா அல்லது இப்போது நடைமுறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய அடிப்படையில் தேர்தல் நடைபெறுமா என்பது தெரியவில்லை; தெளிவுபடுத்த வேண்டும்.

மேயர், நகராட்சித் தலைவர், பேரூராட்சித் தலைவரை மக்களே நேரடியாகத் தேர்ந்தெடுக்க வேண்டும். அம்மாவினுடைய கடந்த ஆட்சியில் நேரடியாகத் தேர்வு நடந்தது. அதனால் யாரையும் கடத்துகின்ற வேலை இல்லை; ஒளித்து வைக்கின்ற வேலை இல்லை; பணம் கொடுக்கிற வேலை இல்லை; கூலி பேரம் ஊழல் இல்லை; இதெல்லாம் இல்லை; ஆனால், இதெல்லாம் யாருக்குத் தேவையோ, அவர்கள் அந்தச் சட்டத்தை மாற்றிக் கொண்டு வந்தார்கள். அது நடந்தது. இன்றைக்கு எங்குமே வந்து செயல்படாமல், ரோடு போடாமலே போட்டதாக எழுதுகிறார்கள். குடி தண்ணீர் வராத இடங்களில் வந்ததாக எழுதுகிறார்கள். இதெல்லாம் நடந்து கொண்டிருக்கிறது. கூட்டுறவுத் தேர்தல் நடத்துவது இல்லையென்று முடிவே செய்தார்கள் அவர்கள். கூட்டுறவுத் தேர்தலை அறிவித்து, அறிவித்த தேர்தலை இரத்து செய்து தேர்தலை நடத்தாமல், மீண்டும் தனி அதிகாரிகளினுடைய காலத்தை நீட்டித்தார்கள். அநேகமாக, 6 மாதத்திற்குப் பின் கூட்டுறவுத் தேர்தல் கட்டாயமாக நடக்கும் என்று நான் நம்புகின்றேன். அதனால் தயவுசெய்து இந்த நேரத்தில் கேட்டுக்கொள்வது, நகராட்சித் தலைவர்களையும் நேரடியாகத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

கோவை மாநகராட்சியில் 72 வார்டுகள் இருந்தன. அதில் புதிய பகுதிகள் இணைக்கப்பட்டு 100 வார்டுகளாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஒரு முக்கியமான விஷயம். அதாவது 100 வார்டுகளாகப் பிரித்திருப்பது என்பது சமமான வாக்காளர்கள் எண்ணிக்கையில் பிரிக்கப்படவில்லை. மாறாக, ஒரே மாநகராட்சியில்



புதிதாகச் சேர்க்கப்பட்டிருக்கக்கூடிய பகுதியில் ஒரு டிவிஷனில் 32 ஆயிரம் ஓட்டு, இன்னொரு டிவிஷனில் 4,500 ஓட்டு என்று உள்ளது. எனவே, கோவை மாநகராட்சியில் சமமான அடிப்படையில் வாக்காளர் எண்ணிக்கை பிரிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை நான் முன்வைக்கிறேன். அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும்.

அதேபோல், ஊரக வளர்ச்சி. இதில் ஒரு முக்கியமான விஷயம். தனியார் விவசாய நிலங்களில் பணிபுரிய தொழிலாளர்களுக்குத் தட்டுப்பாடு இருப்பதாகச் சொல்லும் புகார்பற்றி இந்த நிதிநிலை அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. இது நீண்டகாலமாக இருக்கக்கூடிய புகார். விவசாயக் கூலி வேலைக்கு தொழிலாளர்கள் கிடைக்கவில்லை. 100 நாட்கள் வேலை திட்டம் இருப்பதால், எங்கள் தோட்டங்களில் வேலை செய்வதற்குக்கூட ஆட்கள் இல்லையென்ற ஒரு கோரிக்கை இந்தச் சட்டமன்றத்தில் வைக்கப்பட்டு, அம்மாவிடம்கூட represent செய்திருக்கிறார்கள். இந்த விஷயத்திலே, இதிலே சொல்லப்பட்டிருப்பது, தனியார் விவசாய நிலங்களில் மேற்கொள்ளப்படும் வேலைகளுக்கு, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் 100 நாட்கள் வேலைவாய்ப்பு என்ற இத்திட்டத்தைப் பயன்படுத்துவது பற்றி அரசு ஆய்வு செய்யும் என்ற கருத்து, வேளாண் தொழிலுக்கு வேலைக்கு ஆட்கள் இல்லை என்ற குறையை நிவர்த்தி செய்யும் என்று நான் கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதை நிச்சயமாக செய்ய வேண்டும். இது மிகவும் அருமையான திட்டம். நாளைக்கு இல்லை என்ற சூழல் இருக்காது.

*முற்பகல் 10–40*

அடுத்து, போக்குவரத்து. 2011–2012 ஆம் ஆண்டுக் காலத்திற்குள் 3,000 புதிய பேருந்துகள் வாங்கப்படும் என்று நிதிநிலை அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கின்றது. இது ஒரு மகிழ்ச்சிகரமான செய்தி. அரசுப் போக்குவரத்துக் கழக பஸ்களிலே Insurance இல்லை. நிறைய Workmen's Compensation Act–இலே case தொடுக்கப்பட்டுள்ளது. பணத்தைக் கட்ட முடியாமல் கடந்த ஆட்சியிலே அந்த பஸ்களெல்லாம் அப்போது தாசில்தார் ஆபீஸ்களில்தான் நிறுத்தி வைக்கப்பட்டன, அதை எப்படி நிவர்த்தி செய்வது என்பதற்கான முறையிலே நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். Superannuation retirement ஆகக்கூடியவர்களுக்கு Pension, Gratuity இன்னும் வழங்கப்படவில்லை. இப்பொழுது அல்ல; நான்

[திரு. எம். ஆறுமுகம்] [2011 ஆகஸ்ட் 12

சொல்வதை நீங்கள் இப்பொழுது என்று எடுத்துக்கொள்ளக்கூடாது. திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியிலேயிருந்தே மாதா மாதம் வழங்கக்கூடிய சம்பளம் வழங்கப்படாமல் இருந்துகொண்டிருக்கிறது. அதை தயவுசெய்து நிவர்த்தி செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக ஆதி திராவிடர் நலத் துறை. இது மிக முக்கியமான துறை. இதிலே அம்மா அவர்களுடைய ஆட்சியில் இந்த அரசு ஆதி திராவிடர் நலனில் மிகுந்த அக்கறையோடு 5,007 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியுள்ளது. அவர்கள் பொருளாதார மேம்பாடு காண, ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதிகளுக்கு அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கான திட்டம் என்பது சிறப்பான அம்சமாகும். நாம் அவர்களைத்தான் அதிகமாகப் பார்க்க வேண்டும். இந்த விஷயத்திலே இந்த அரசு மிக முக்கியமான கவனம் செலுத்தியுள்ளது. 10 இலட்சம் ஆதி திராவிட மாணவ, மாணவிகள் பயன்பெறும் வகையில், மெட்ரிக் படிப்பதற்கு, உயர் கல்வி படிப்பதற்கான கல்வி உதவித் தொகை ரூபாய் 238.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது வரவேற்கக்கூடிய ஒன்றாகும்.

ஆதி திராவிட, பழங்குடியின மாணவ, மாணவிகளுக்கு 43 கோடி ரூபாய் அளவிற்கு இலவச மிதிவண்டி (Cycle) வழங்கி இருப்பது என்பதும் பாராட்டுதலுக்குரியது. பழங்குடியினர் மேம்பாட்டுக்காக 2011–2012 இல் 246 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், குடிநீர் போன்ற அடிப்படை வசதிகளை மேம்படுத்தவும், அழிவின் விளிம்பு நிலையிலுள்ள—அந்த வார்த்தை எனக்கு சரியாகப் புரியவில்லை. அழிவின் விளிம்பு நிலையிலுள்ள குறிப்பிட்ட பழங்குடியினர் நலனை மேம்படுத்த 10.76 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி, அடிப்படை வசதிகள் மேம்பாட்டுக்குச் செலவழிக்கப்படுகின்றனவா என்பதை உறுதி செய்ய நிறைய தொகை ஒதுக்குகிறார்கள். இந்தத் தொகை முழுவதும் சம்பந்தப்பட்ட ஆதி திராவிடர்களுக்கும், பழங்குடியினருக்கும் போய்ச் சேருகின்றனவா; அந்தத் திட்டங்கள் முறையாக நிறைவேற்றப்படுகின்றனவா என்பதனைக் கண்காணிப்பதற்காக ஆங்காங்கே கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட வேண்டும் என்பது எங்களுடைய கருத்து.

அதேபோல, மாற்றுத் திறனாளிகளுக்கு ஒதுக்கப்பட்டிருப்பது 3 விழுக்காடு என்பது பாராட்டுதலுக்குரியது; வரவேற்புக்குரியது.



2011 ஆகஸ்ட் 12]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலவச கறவை மாடுகள் வழங்கும் திட்டத்திலும், 60 ஆயிரம் இலவச கறவை மாடுகள் வழங்கும் திட்டத்திலும், 28 இலட்சம் இலவச ஆடுகள் வழங்குகின்ற திட்டத்திலும் பயனாளிகளில் 30 சதவிகிதம் பேர் ஆதி திராவிடர்களாக இருப்பார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மிகவும் நன்றி. அன்றைக்கே விளக்கி சொல்லிவிட்டார்கள். மீண்டும் இப்பொழுது மக்களுக்குப் புரிகிற மாதிரி விளக்கம் சொன்னதெல்லாம் மக்களுக்குப் போய்ச் சேரும் என நான் நம்புகிறேன்.

அடுத்து, தொழிலாளர் நலன். நல வாரியங்கள் திறம்பட செயல்படவில்லை. இந்த நல வாரியங்களைப் பற்றி நான் இங்கே விமர்சனம் செய்ய விரும்பவில்லை. எப்படி எப்படி, எந்த எந்த அடிப்படையிலே எது எதற்காக வேண்டி இந்த நல வாரியங்கள் அமைக்கப்பட்டன என்பது நாட்டுக்கே தெரியும். ஆனால், இப்பொழுது நல வாரியங்கள் திறம்பட செயல்படாத நிலையில் உள்ளதால், இந்த அரசு இவ்வாரியங்களைச் சீரமைத்து, அவற்றின் செயல்பாடுகளை மேம்படுத்தும் என்று நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது பாராட்டுதலுக்குரியது. அதற்கான நடவடிக்கைகளைத் தொடங்க வேண்டும். வாரியங்களில் பெற வேண்டிய பணப் பயன்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. தொழிற்சங்கங்களுடன் கலந்து பேசி, இந்த வாரியங்கள் எப்படித் திறம்பட செயல் பட வேண்டும் என்பதற்கான முறையில் அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழிற்சாலை ஆய்வகத்தை தொழிலாளர் துறையோடு இணைக்க வேண்டும். அது தனித் தனியாகப் பிரிக்கப்பட்ட பிறகுதான், Factory Inspectors inspection–க்குப் போகும்போது, பல சிக்கல்கள் உருவாகின்றன. எனவே, தொழிற்சாலை ஆய்வகத்தை தொழிலாளர் துறையோடு இணைப்பதற்கான முறையிலே நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எம். ஆறுமுகம்] [2011 ஆகஸ்ட் 12

முற்பகல் 10—45

எனது தொகுதியான வால்பாறை தொகுதிக்கு வருகிறேன். இந்தத் திட்டத்தைப் பார்த்தவுடன், எனக்கு ஒரு சினிமாப் பாட்டுதான் நினைவுக்கு வருகிறது.

"காடு விளைஞ்சென்ன மச்சான்?
நமக்குக் கையும், காலும்தானே மிச்சம்.
காடு விளையட்டும் பொண்ணே,
காலம் இருப்பது பின்னே"
அடுத்து,
"மாடாய் உழைத்தவன் வாழ்க்கையிலே
பசி வந்திட காரணம் என்ன மச்சான்?
தேடிய செல்வங்கள் ஓர் இடத்தில்
போய்ச் சேர்வதினால் வரும் தொல்லையடி"

அதற்குத்தான் முற்றுப்புள்ளி வைத்திருக்கிறார்கள் என நினைக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அநேகமாக, தமிழ்நாட்டில் தனியார் கொள்ளையடிப்பதை ஊக்குவிக்காமலும், அதற்கு வழிவிடாமல் செய்திருப்பதையும் நாங்கள் பாராட்டுகிறோம்.

கடைசியாக, வால்பாறை சட்டமன்றத் தொகுதி 2007 ஆம் ஆண்டில் புலிகள் சரணலாயம் என்று அறிவிக்கப்பட்டது. அதற்குப் பின்னால், நேற்றையதினம் ரூ.1½ இலட்சத்திலிருந்து ரூ.3 இலட்சம் இழப்பீடு என அறிவித்தது செய்திகளில் எல்லாம் வந்தது. அங்குள்ள பிரச்சினை என்னவென்றால், தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலிருந்தும் தேயிலைத் தோட்டப் பணிக்கு, குறிப்பாக திருநெல்வேலி, சேலம், திருச்சி மற்றும் பிற மாவட்டங்களிலிருந்து 98% தேயிலைத் தோட்டத் தொழிலாளிகளாக, அங்கு வந்து பணியாற்றி வருகிறார்கள். அங்கு இருக்கக்கூடிய மக்களுக்கு வன விலங்குகளால் பாதிப்பு தொடர்ச்சியாக ஏற்பட்டு வருகின்றது. எனவே, அங்குள்ள மக்களைப் பாதுகாப்பது மட்டுமல்லாமல், நான் நேற்றையதினமே ஒரு கேள்வி கேட்டபோது தெரிவித்தேன், அங்கு தெரு விளக்குகள் முழுமையாக இல்லாத காரணத்தினால், அந்த மக்கள் இரவு நேரத்தில் மருத்துவமனை மற்றும் வேறு இடங்களுக்குச் செல்லும்போது, கையில் தீப்பந்தம் எடுத்துக்கொண்டு போகின்றார்கள். யானைகள் டார்ச் லைட்டை பார்த்து மிரளாது. அவர்கள் தீப்பந்தத்தை எடுத்துக்கொண்டு தேயிலைச் செடிகளுக்கு நடுவில் போகும்பொழுது, யானைகள் தீப்பந்தத்தைப் பார்த்து மிரளுகின்றன. அந்தத் தீப்பந்தத்திற்கு மண்ணெண்ணெய் போதுமானதாக இல்லை.



2011 ஆகஸ்ட் 12] [திரு. எம். ஆறுமுகம்]

மண்ணெண்ணெய் சமையலுக்கே சரியாகி விடுகிறது. ஆகவே, தனிச் சலுகை என்ற முறையில் மாதம் ஒன்றுக்கு ஐந்து லிட்டர் மண்ணெண்ணெய் ஒவ்வொரு ரேஷன் கார்டுக்கும் வழங்க வேண்டும். அவர்கள் பணத்தைக் கொடுத்து விடுவார்கள்,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலத்திற்கு மத்திய அரசுதான் மண்ணெண்ணெய் ஒதுக்கீடு செய்து வழங்குகிறது. கடந்த ஜூன் மாதத்திலிருந்து என்ன காரணத்தினாலோ மத்திய அரசு தமிழ்நாட்டிற்கு வழக்கமாக வழங்குகின்ற மண்ணெண்ணெயின் அளவைக் குறைத்துக் கொண்டே வருகிறது. நான் மாண்புமிகு பிரதமர் அவர்களுக்குக் கடிதமும் எழுதியிருக்கிறேன். நேரிலும் வற்புறுத்தியிருக்கிறேன், இருந்தாலும் தமிழ்நாட்டிற்கு இன்னும் முழுமையான ஒதுக்கீடு மண்ணெண்ணெய் கிடைக்கவில்லை; மத்திய அரசு குறைத்துக்கொண்டே வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டினுடைய வளர்ச்சியைக் கீழே கொண்டுபோவது மத்திய அரசுதான் (மேசையைத் தட்டும் ஒலி) என்பது இப்போது தெளிவாகத் தெரிகிறது. இதற்குப் படம் போட்டுக் காட்ட வேண்டியதில்லை. இதைப் புரிந்து கொண்டு, கம்யூனிஸ்டு கட்சி இயக்கங்கள் பல விஷயங்களுக்காகத் தொடர்ச்சியாகப் போராடிக் கொண்டுதான் இருக்கின்றன. (குறுக்கீடு) ஜனங்கள்தான் எங்கள் பின்னால் வருவதில்லை. தொடர்ச்சியாக எல்லா விஷயங்களிலும் போராடிக் கொண்டிருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள் திரு. எம். ஆறுமுகம். மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கம்யூனிஸ்டு கட்சிகள் போராட்டம் நடத்தி வருவது உண்மைதான். ஜனங்கள் பின்னால் வருவதில்லை எனக் கூறுவது

உண்மையல்ல. கடந்த ஐந்து ஆண்டுக் காலமாக நாம் நடத்திய போராட்டங்களின் காரணமாகத்தான், சட்டமன்றத்தில் இவ்வளவு பெரிய வெற்றி கிடைத்திருக்கிறது. ஒரு நல்ல கூட்டணி உருவாகி இருக்கிறது. மக்கள் பின்னால் வந்ததினால்தான் அது சாத்தியமாயிற்று. ஆகவே, மக்கள் பின்னால் வரவில்லை என்று கூறுவது உண்மையல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் என்று நான் சொன்னதை அவர்கள் வேறுவிதமாக எடுத்துக்கொண்டு விட்டார்கள். நம் மக்கள் எல்லாம் பின்னால் வந்த காரணத்தினால்தான் இந்த வெற்றி கிடைத்திருக்கிறது. சிகரம் தொட்ட ஊழலை மக்கள் மத்தியில் கொண்டு சென்றது நாங்கள்தான். மக்கள் வருகிறார்கள்; ஆனால், நாங்கள் எதிர்பார்க்கின்ற அளவிற்கு வரவில்லை என்பதுதான் என்னுடைய கருத்து..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசின் உரிமைகளைப் பெறுவதற்காக மத்திய அரசுடன் போராடுவோம்; நீங்களும் வாருங்கள்; நானும் வருகிறேன்; (மேசையைத் தட்டும் ஒலி) பின்னால் மக்கள் தாங்களாகவே வருவார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைத்தான் நாங்கள் எதிர்பார்த்தோம். மத்திய அரசாங்கத்தினுடைய கொள்கைகளை எதிர்த்துப் போராடுவதில் முனைப்பாக நின்று கொண்டிருக்கக்கூடிய இடதுசாரி கட்சிகளோடு, அம்மா அவர்களும் வந்து சேர்ந்து செய்கின்றபோது, தமிழ்நாட்டினுடைய வளர்ச்சி 'ஓகோ' என்று வரும் என்பதுதான் எங்களின் கருத்து. நான் அந்த அடிப்படையில் சொல்லவில்லை. மன்னித்து விடுங்கள். ஆகவே, இந்த நிதிநிலை அறிக்கையில் தஞ்சாவூர்



மாவட்டத்திலுள்ள கோட்டூர் தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் டிராக்டருக்காகக் கடன் வாங்கிய விவசாயிகளிடம், வங்கி இப்போது ஜப்தி நடவடிக்கையை முடுக்கி விட்டிருக்கிறது. இதுசம்பந்தமாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது எங்களுடைய கோரிக்கை.

கடைசியாக இரண்டே கோரிக்கைகள். என்னுடைய தொகுதியில் உள்ள ஆனைமலை நல்லாறு திட்டம் மற்றும் அவினாசி அத்திக்கடவு குடிநீர்த் திட்டம் ஆகியவற்றை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டு, வாய்ப்பளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்து, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளிடம் ஜப்தி செய்வது, தேசியமயமாக்கப்பட்ட வங்கிதான். மாநில அரசினுடைய கூட்டுறவுத் துறை அல்ல. தேசியமயமாக்கப்பட்ட வங்கி, அதையும் மாவட்ட ஆட்சித் தலைவர்மூலம் ஜப்தி செய்யக் கூடாதென்று மாண்புமிகு அம்மா அவர்களின் ஆலோசனையைப் பெற்று கூறப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10–50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள். அமைச்சர் பேசிவிடட்டும், உட்காருங்கள்.

***மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை தொகுதியில் தேர்வு மையத்தை அமைப்பதாக அறிவித்த புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு கோவை மாவட்ட மக்களின் சார்பாக நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, நம்முடைய வால்பாறை சட்டமன்ற உறுப்பினர், அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்த இரண்டே மாதத்தில், வனத் துறையைப் பற்றியும், அங்கே மக்கள் பாதிக்கப்பட்டதைப் பற்றியும் பேசினார்கள். இரண்டே மாதத்தில், 10 நாட்களுக்கு முன்னால் அமைச்சரை அங்கே அனுப்பி, பாதிக்கப்பட்ட இடங்களையெல்லாம் பார்த்து,

வால்பாறை மட்டுமல்ல; கவுண்டம்பாளையம், கிணத்துக்கடவு, மேட்டுப்பாளையம் போன்ற பகுதிகளையெல்லாம் பார்த்து அதற்குரிய நிவாரணத்தையும் அம்மா அவர்கள் அறிவித்ததை அவர்கள் அங்கே கொடுத்தார்கள்; இரண்டே மாதத்தில் கொடுத்தார்கள். அன்றைக்கு அவரும்கூட இருந்தார். அதற்கு அம்மா அவர்களுக்கு அவர் நன்றி சொல்லவில்லை என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

அதேபோல, வால்பாறையைப் பொறுத்தவரையில், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய தனி கவனத்தில் அது இருக்கும். 1989-இலே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தனியாக நின்றபோது வெற்றி பெற்ற தொகுதி. அதேபோல 2001-இலே கோவை தங்கம் அவர்களும் அம்மாவினுடைய ஆசியுடன்தான் அங்கே வெற்றி பெற முடிந்தது. போன காலத்திலே தி.மு.க.-விற்கு ஒத்து ஊதி, ஜால்ரா அடித்த காரணத்தினால், இன்றைக்கு அவர் தோற்கடிக்கப்பட்டிருக்கிறார்; இவரையும் வெற்றி பெறச் செய்தது புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்பதையும் அவருக்கு நினைவுகூர விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நான் நன்றி சொல்லவில்லை என்று நினைக்கக்கூடாது. அவருக்கும் நன்றி. எங்களோடு சேர்ந்து வேலை செய்த அவருக்கும் நன்றி. அமைச்சர் வந்தார்கள்; அவரோடு சேர்ந்து எல்லா இடங்களுக்கும் சென்றோம். எல்லா இடங்களையும் பார்வையிட்டோம். அமைச்சருக்கும் நன்றி என்று சொல்லி, வால்பாறையினுடைய வளர்ச்சிக்காக நம்முடைய மாவட்ட அமைச்சரும் சேர்ந்து வளர்ச்சிப் பாதையில் வரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு நன்றி சொல்கிறேன்.

***மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சிறப்புத் திட்ட அமலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 14 ஆவது சட்டமன்றத்திற்கு நடைபெற்ற பொதுத் தேர்தலில் கடலூர் சட்டமன்றத் தொகுதி வேட்பாளராகப் போட்டியிட வாய்ப்பளித்து, வெற்றி பெறச் செய்து, மீண்டும் இரண்டாவது முறையாக அமைச்சரவையில் இடம் பெறச் செய்து, அதுவும் குறிப்பாக சிறப்புத் திட்ட அமலாக்கத் துறைக்கு,





வரலாற்றில் மற்ற மாநிலங்களிலெல்லாம் இல்லாத ஒரு சிறப்பு அம்சத்தைச் சேர்த்து, சிறப்புத் திட்ட அமலாக்கத் துறைக்கு அமைச்சராக நியமனம் செய்த (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது சார்பாகவும், எனது குடும்பத்தின் சார்பாகவும் கோடானு கோடி நன்றியைப் பாத மலர்களில் தெரிவித்து, என்னை வாக்களித்து வெற்றி பெறச் செய்த கடலூர் சட்டமன்றத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் இலவச திட்டங்கள் உடனடியாக மக்களைச் சென்றடையுமா, அதற்கு இந்த அரசு என்ன நடவடிக்கை மேற்கொண்டுள்ளது என்ற வினாவை எழுப்பினார். நடப்பாண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு 8,900 கோடி ரூபாயை புதிய திட்டங்களுக்காக ஒதுக்கி அறிவித்துள்ளது. குறிப்பாக, புதிய திட்டங்களையும், எந்தெந்த சிறப்புத் திட்டங்கள் இலவச திட்டங்களில் சேரும் என்பதையும், இந்த அரசின் சிறப்புத் திட்டங்களை விரைந்து செயல்படுத்தும் தெளிந்த குறிக்கோளுடன் புதிய துறையான சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை, அரசாணை (நிலை) எண் 423, பொது (சிறப்புத் துறை) நாள் 16-5-2011 இல் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்துறையின் உடனடி செயல்பாட்டிற்கு அரசுச் செயலாளர், இ.ஆ.ப., சிறப்புப் பணி அலுவலர், இ.ஆ.ப., (ஓய்வு), இணைச் செயலாளர், இ.ஆ.ப., கூடுதல் இயக்குநர் (புள்ளியியல்) ஆகியோர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள். இவர்களுடன் பணியில் உதவிட, அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். இவர்களன்றி, மாவட்ட வருவாய் அலுவலர் பணியிடமும், கூடுதல் இயக்குநர், இணை இயக்குநர் (ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை) பணியிடமும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. விரைவில் நியமனங்கள் எதிர்நோக்கப்படுகின்றன. அரசின் முக்கிய திட்டங்களில் செயலாக்கத்தினை விரைவுபடுத்த, விரைந்து செயல்பட, முழுமையான தகுதி வாய்ந்த பயனாளிகளைத் தேர்வு செய்து, இந்த இலவச திட்டங்களை முழுமையாகக் கொண்டு செல்வதற்குச் சம்பந்தப்பட்ட துறைகளுடன் இத்துறை ஒருங்கிணைந்து செயல்படும் என்பதையும், இத்துறையின் அலுவலர் நேரடியாகக் களப் பணிகளுக்காக மாவட்டந்தோறும் பயணங்களை மேற்கொண்டு, அந்தந்த மாவட்டங்களில் நடைபெறும் திட்டங்களின் தரம் மற்றும் அளவு விவரங்களை ஆய்ந்து, அவை குறித்த கருத்துகளை அரசுக்கு

அளித்திடவும், அவற்றைத் திருத்தி மேம்படுத்தும் வழிமுறைகளை உரிய நேரத்தில் அரசுக்குத் தெரிவித்திடவும் இத்துறை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்தச் சிறப்புத் திட்ட அமலாக்கத் துறையின் மூலமாக அரசினுடைய முழுமையான திட்டங்களான இலவச கறவை மாடுகள் வழங்கும் திட்டம், இலவச ஆடுகள் வழங்கும் திட்டம், மாணவ–மாணவிகளுக்கு இலவச மடிக்கணினி வழங்கும் திட்டம் மற்றும் இதைப்போலவே மிக்சி, கிரைண்டர் மற்றும் ஃபேன் வழங்குதல் போன்ற திட்டங்களையும் அந்தந்தத் துறையினுடைய அமைச்சரோடு சேர்ந்து ஒருங்கிணைந்து அரசினுடைய முழுமையான திட்டங்களை—மாவட்டந்தோறும் இருக்கும் முழுமையான பயனாளிகளுக்கு நிறைவான அளவில், உடனடியாகக் கொண்டு செல்வதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு செயல்படும் என்பதை இந்த (மேசையைத் தட்டும் ஒலி) அவைக்குத் தெரிவித்து அமருகிறேன். நன்றி. வணக்கம்.

*முற்பகல் 10–55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன், என்ன சொல்ல வருகிறீர்கள்? மாண்புமிகு உறுப்பினர் ஆறுமுகம் அவர்களுக்கு முதலில் வாய்ப்பு கொடுத்து விடுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்பிக்கையோடுதான் சட்டமன்றத்திலே உரையாற்றினேன். நிச்சயமாக நடைபெறும் என்ற நம்பிக்கை எங்களுக்கு உண்டு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன், இதிலே என்ன சொல்ல வருகிறீர்கள்?

***திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் கோட்டூரிலே மட்டும் கடன் பாக்கிக்காக டிராக்டர்கள் பறிமுதல், ஜப்தி செய்யப்பட்டு இருப்பதாகக் குறிப்பிட்டார்கள். தமிழகத்தினுடைய அனைத்து மாவட்டங்களிலேயும் ஏறக்குறைய 330–க்கும் மேற்பட்ட டிராக்டர்களை ஜப்தி செய்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல; இந்தக் கடன் பாக்கியை வசூலிக்கிறபோது, மனிதநேயமற்ற முறையிலே



நடந்துகொண்ட காரணத்தினால், கடந்த ஆட்சியின்போது திருவண்ணாமலையிலேயும், விழுப்புரம் மாவட்டம், செஞ்சியிலேயும் 2 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டிருக்கிறார்கள். எனவே, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் இப்படிக் கடன் வசூல் என்கிற முறையிலே கண்மூடித்தனமாக நடந்து கொண்டிருக்கிற காரணத்தினால், பாதிக்கப்படுவது தமிழக விவசாயிகள். விவசாயிகளிடமிருந்து ஜப்தி செய்கிறபோது, மாவட்ட ஆட்சித் தலைவரைக் கேட்பதில்லை. அவர்கள் காவல் துறையைப் பயன்படுத்துவதில்லை. அதற்காகவே ஒரு துறையை வைத்துக் கொண்டு அவர்கள் தானடித்த மூப்பாகச் செய்து கொண்டிருக்கிறார்கள். அதனால் ஏற்படக்கூடிய அவப்பெயர்களுக்கெல்லாம் தமிழக அரசுதான் பொறுப்பேற்க வேண்டியிருக்கிறது. எனவே, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் இப்படி ஜப்தி போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடாது, அப்படி மேற்கொள்ள வேண்டுமானால், அரசினுடைய அனுமதி இல்லாமல் இதையெல்லாம் செய்யக் கூடாது என்கிற முறையிலே தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளைத் தமிழகத்திலே கட்டுப்படுத்த வேண்டுமெனத் தமிழக அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில் ஏராளமான ஜப்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. கழக அரசு அமைந்தவுடன் கடந்த இரண்டு மாத காலமாக எல்லா ஜப்தி நடவடிக்கைகளையும் நிறுத்தச் சொல்லி, நிறுத்தி விட்டோம். (மேசையைத் தட்டும் ஒலி) அதை மீறி தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன என்றால், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மாநில அரசின் கட்டுப்பாட்டில் இல்லை. இருப்பினும், எங்களால் இயன்றதை நாங்கள் செய்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. வி. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள், விபத்து இழப்பீடுகள் கொடுக்க முடியாமல் நீதிமன்றங்களில்

இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். கடந்தகால மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் 198 கோடி ரூபாய் விபத்து இழப்பீட்டுத் தொகையை நிலுவையில் வைத்து விட்டுச் சென்று விட்டார்கள். போக்குவரத்தினுடைய அவலநிலையைப் போக்குவதற்கு மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஜூன் மாதத்திற்கு 60 கோடி ரூபாயும், ஜூலை மாதத்திற்கு 50 கோடி ரூபாயும் சம்பளம் வழங்குவதற்கு நிதியை வழங்கி, இன்று போக்குவரத்துக் கழகத்தை (மேசையைத் தட்டும் ஒலி) மேம்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். என்பதை இந்த அவையில் பதிவு செய்ய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.

**திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மரியாதைக்குரிய மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூறும்போது, மத்திய அரசு கொடுக்கக்கூடிய மண்ணெண்ணெயினுடைய அளவு குறைந்து கொண்டிருக்கிறது என்று சொன்னார்கள். அவர்களுடைய உணர்வுகளோடு எங்களையும் நாங்கள் இணைத்துக்கொள்கின்றோம். மத்தியிலே இருக்கக்கூடிய எங்களுடைய அமைச்சர்கள்மூலமாக இந்த மண்ணெண்ணெய் குறைவாக இருக்கக்கூடிய தகவலைச் சொல்லி, வற்புறுத்தி நாங்களும் தமிழகத்திற்கு முதலமைச்சர் எடுக்கக்கூடிய நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்போம் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, அதேநேரத்தில் மரியாதைக்குரிய வால்பாறை சட்ட மன்ற உறுப்பினர் பேசும்போது, மத்தியில் இருக்கக்கூடிய ஆட்சியினால்தான் தமிழகம் பின்தங்கியிருக்கிறது என்ற ஒரு வார்த்தையைச் சொன்னார்கள். அது எங்களின் வருத்தத்திற்குரியது. அதற்கு என்னுடைய கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11–00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** சொன்னதிலே பொய்யே இல்லை, உண்மைதான். தமிழ்நாட்டினுடைய (குறுக்கீடு) பொய் என்கிற வார்த்தை தவறு. உண்மைக்கு மாறானது. உண்மைதான். தமிழ்நாட்டினுடைய வளர்ச்சியில் பாரபட்சமாக மத்திய அரசாங்கம்



நடந்துகொண்டிருக்கிறது என்பதற்கு இங்கே ஒரு debate நடத்துவது என்று சொன்னால், நிறைய விஷயங்கள், கம்னியூஸ்டு–இடதுசாரி கட்சிகள் சொல்வதற்குத் தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அது உண்மை. அதிலே மண்ணெண்ணெய் ஒரு சிறு துளி. சாதாரண விஷயம். நமக்கு கிடைக்க வேண்டிய தொகுப்பிலிருந்து, தமிழ்நாட்டிற்கு ஒதுக்க வேண்டிய தொகுப்பிலிருந்து மண்ணெண்ணெய்கூட இன்னும் வரவில்லையே என்பதுதான் வருத்தம் அளிக்கக்கூடிய ஒன்று.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்கள்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை தொகுதி என்னுடைய தொகுதியின் அருகில் இருக்கிறது என்கிற முறையில் ஒரேயொரு கருத்தை மட்டும் பணிவோடு சொல்லி விடைபெறுகிறேன்.

வால்பாறை என்பது 1900 ஆம் ஆண்டுக்கு பிறகு ஏற்பட்ட ஒரு குடியேற்ற பகுதி ஆகும். சிவங்கை, இராமநாதபுரம், சேலம் போன்ற பகுதிகளிலிருந்து ஆதி திராவிட சமுதாய மக்களை வேலைவாய்ப்பு கருதி அந்த நாளிலே ஆண்ட ஆங்கிலேயர்கள் அங்கே குடியமர்த்தினார்கள். அங்கே தேயிலைத் தோட்டங்கள் உருவாக்கப்பட்டபொழுது, இந்த மக்கள் கடுமையாக உழைத்தார்கள். இப்போது அங்கே ஓய்வு பெற்றவர்கள் எல்லாம் செல்கிறபொழுது, அவர்கள் தங்குவதற்கு இடமில்லை. அனைத்து நிலங்களும் அரசாங்க நிலங்கள். இந்த அரசாங்க நிலங்களைக் குறைந்த குத்தகைக்கு TATA Finlay, N.E.P.C., Birla போன்ற Group–கள் எடுத்து பன்னெடுங்காலமாகத் தேயிலையை உற்பத்தி செய்து கொண்டிருக்கிறார்கள். பெருமளவில் இலாபத்தை ஈட்டி வருகிறார்கள். ஆனால், அந்தத் தேயிலை தோட்டங்களில் வேலைச் செய்யும் தொழிலாளர்கள் ஓய்வு பெற்றதற்குப் பிறகு, அவர்களுக்குத் தங்கும் இடமில்லாமல் சொந்த ஊர்களுக்கு திரும்பிப்போகிறபொழுது அங்கும் அவர்கள் தங்குவதற்கு வாழ்வாதாரம் இல்லை. எனவே, குறைந்த குத்தகைக்கு அரசாங்க நிலத்தை எடுத்து நடத்திக் கொண்டிருக்கிற அந்தப் பெரிய நிறுவனங்களிடமிருந்து, குறிப்பிட்ட அளவுக்கு நிலத்தைப் பெற்று, ஓய்வுபெறும் தொழிலாளர்களுக்கு 2 சென்ட், 3 சென்ட் நிலம் அவர்கள் குடியிருப்புகளுக்காக வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வால்பாறை மலைப் பகுதி

என்பது, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்திலும், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய காலத்திலும், சேவல் சின்னத்தில் அம்மா அவர்களுக்கு வெற்றியைத் தேடிக் கொடுத்த பகுதி. குறிப்பாக 2006 ஆம் ஆண்டுக்குப் பிறகு 2011 ஆம் ஆண்டு வரை வால்பாறை தொகுதியினுடைய மலைப் பகுதியினுடைய ஜனத் தொகை 50 சதவிகிதம் குறைந்த. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

***திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையின் விழுமிய நோக்கங்கள் அனைத்தையும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் நான் மனதாரப் போற்றி வரவேற்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கை கடந்த ஆட்சியின் நிதிநிலை அறிக்கையிலிருந்து பல அடிப்படை விஷயங்களில் மாறுபடுகிறது. இந்த நிதிநிலை அறிக்கையின் துவக்கத்திலேயே சேவைத் துறையின் உந்துதலால் மட்டும் ஏற்படும் வளர்ச்சி நிலையானதாக இருக்காது என்கிற வாசகம்; ஒரு பொன்மொழி என்றே அதைச் சொல்லலாம். அந்த வாசகம் அதிலே இடம்பெற்றிருக்கிறது. கடந்த ஆட்சியில், அடிப்படையான விவசாயம், தொழில் ஆகிய வளர்ச்சிகளில் உரிய முன்னுரிமை தரப்படவில்லை என்பதால்தான், நம்முடைய மாநிலத்தின் உண்மையான வளர்ச்சி பின் தள்ளி இருந்தது. திராவிட முன்னேற்றக் கழகம் கொஞ்சம் நாட்டுச் சேவையும், அதிகமாக வீட்டுச் சேவையும் செய்து கொண்டதால்தான், மாநிலத்திலே கடந்த ஐந்து ஆண்டுகளிலே பெரும் பிரச்சினை ஏற்பட்டது. இந்த அறிக்கையை விமர்சிக்கிற திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் இந்த அறிக்கையிலே பக்கங்கள் அதிகமாக இருக்கின்றனவே தவிர, வேறு ஒன்றுமில்லை என்று கூறுகிறார். பக்கங்களில்கூட நம்மை விஞ்சி விட்டார்களே என்ற ஏக்கத்தைத் தவிர, அவரது அறிக்கையிலே வேறொன்றுமில்லை. சரி! என்ன செய்வது? அவர்கள் 'பக்க' வாத நிலையில்தானே இருக்கிறார்கள். இந்த அவையில் நிதியொதுக்கீடுகள் பற்றி நாம் அக்கறையோடு பேசிக்கொண்டிருக்கும்போது, அவர்கள் தங்களுக்கான இட ஒதுக்கீடு குறித்து வெளியே புலம்பிக் கொண்டிருக்கிறார்கள். மக்கள், 'ஆட்சியைவிட்டு வெளியேறு' என்று தேர்தலிலே தீர்ப்புக் கொடுத்தார்கள். இவர்களோ அவர்களுக்குத் தேர்தல் பிரச்சாரம் செய்த பிரதான நடிகரின் பாணியில், "ஆட்சியைவிட்டு மட்டுமல்ல; அவையைவிட்டும் வெளியேறுகிறோம் பார்" என்று காமெடி செய்து



கொண்டிருக்கிறார்கள். வெளி நடப்பு என்பது ஜனநாயகத்தில் எதிர்ப்பைக் காட்டும் ஒரு வழிமுறை. அதை இங்குள்ள எல்லோரும் பயன்படுத்தியிருக்கிறோம். ஆனால் இவர்கள் செய்துகொண்டிருப்பது அரசியலற்ற அணுகுமுறை. மக்களை நிராகரிக்கின்ற அணுகுமுறை.

*முற்பகல் 11–05*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நிதிநிலை அறிக்கையிலே, வரியல்லாத வருவாய் ரூபாய் 4,483.72 கோடி; மத்திய அரசின் வரிகளின் பங்கு 13,111 கோடி ரூபாய்; மத்திய அரசின் உதவி மானியங்கள்மூலம் வருகின்ற வருமானம் 7,772 கோடி ரூபாய்; இந்த மூன்று இனங்களிலேயும் நாம் உயர்வை செய்ய நடவடிக்கை எடுத்தாகவேண்டும். வரியல்லாத வருவாயைத் தமிழகத்திலே நாம் அதிகப்படுத்துவதற்கு முக்கியமான வழிகள், மணலைத் தனியார் கொள்ளையடிப்பதைத் தடுக்கும்; குவாரிகளை அரசே நடத்தும் என்று எப்படி இந்த அரசு சொன்னதோ, அதைப்போல, தமிழகத்திலுள்ள இதர கனிம வளங்கள் அனைத்தையும் அரசே எடுக்கவும், அதையொட்டி தொழிற்சாலைகளை அமைக்கவும், பயன்படுத்துவதுமான செயலில் ஈடுபட்டால், இந்த வரியல்லாத வருவாயை நாம் இரட்டிப்பாக்க முடியும்.

உதாரணமாக, தூத்துக்குடி பகுதியில் இருக்கின்ற Titanium-di-oxide என்கின்ற அரிய பொருளை, அரசே பொதுத் துறையான TAMIN மூலமாக எடுத்துப் பயன்படுத்தினால், நல்ல வருமானம் அரசுக்குக் கிடைக்கும். இந்த அவையிலேயே கறிவேப்பிலை ஃபேக்டரியை மேட்டுப்பாளையத்திலே அமைப்பதற்கு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் வாக்குறுதி தந்ததைப்போல, குமரியிலே இரப்பரை மையப்படுத்தி தொழிற்சாலை அமைக்கவேண்டும். சிவகங்கையிலே கிராஃபைட் தொழிற்சாலை அமைக்கவேண்டும். இப்படிப்பட்ட வளங்கள் சார்ந்த நம்முடைய தொழிற்சாலைகளை அரசே நடத்துவதன்மூலமாக நம்முடைய வருமானத்தைப் பெருக்க வழியிருக்கிறது. அதை அரசு செய்ய முன்வரவேண்டும்.

அரசு, தனியார் கூட்டு முயற்சியின்மூலமாக என்று பல முன்மொழிவுகள் இந்த நிதிநிலை அறிக்கையிலே இடம்பெற்றிருக்கின்றன. இதில் நாம் சற்று எச்சரிக்கையாக இருக்கவேண்டுமென்று நான் கூற விரும்புகிறேன். அடிப்படையிலான விஷயங்கள் அனைத்தையும் அரசே மேற்கொள்வதுதான் அவசியம்.

ஊராட்சி, உள்ளாட்சி மேன்மையைப்பற்றி நாம் ஏராளமாக இந்த அறிக்கையின்மூலமாக அக்கறை காட்டியிருக்கிறோம். சென்னை மாநகராட்சியிலே, இரண்டு மூன்று Zone—களில் குப்பை அள்ளும் பொறுப்பைத் தனியாருக்கு ஒப்படைத்தார்கள். மிகச் சிறப்பாக இருக்கும் என்று அறிவித்துதான் ஒப்படைத்தார்கள். ஆனால், எங்கெல்லாம் தனியாருக்கு வேலை தரப்பட்டதோ, அங்கே மிகப் பெரிய வேலை சுணக்கமும், குப்பை தேங்கலும், மக்கள் மத்தியிலே கடுமையான அதிருப்தியும்தான் வந்தது. இந்தத் தனியார் துறை நிறுவனங்களை அந்தப் பொறுப்பிலிருந்து அகற்றிவிடவேண்டுமென்று மாநகராட்சியே, நம்முடைய அமைச்சர்களே முடிவெடுக்கவேண்டிய நெருக்கடியும் வந்துவிட்டது. ஆகவே, அடிப்படையான மக்கள் தேவை பிரச்சினைகளில் தனியாரை நாம் ஈடுபடுத்தி சோதனை செய்வது கூடாது. அரசே அவற்றைச் செய்யவேண்டுமென்று நான் சொல்ல விரும்புகிறேன். தமிழகத்தினுடைய ஏராளமான ஊராட்சிகளிலே, நகராட்சிகளிலே இப்படிப்பட்ட நிலையிருக்கிறது என்பதையும் நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை இந்த அவையிலே வைக்கப்பட்டிருக்கிறது. ஆனால், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஐந்து நாட்களுக்கு முன்பாகவே, தன்னந்தனியாக வானில் பறந்து, சென்னை மாநகராட்சியினுடைய குப்பைக் கூளங்களையெல்லாம் கண்டறிந்து, உடனடியாக உத்தரவு பிறப்பித்து, இப்போது போர்க்கால நடவடிக்கையில் சென்னை மாநகராட்சி மட்டுமல்ல; அதைச் சுற்றியுள்ள மற்ற ஊராட்சிகளும், நகராட்சிகளும் தூய்மைப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்த அந்த அறிவிப்பிற்கு நான் ஏற்கெனவே நன்றி தெரிவித்திருக்கிறேன். இப்போதும் தெரிவிக்கின்றேன். இதிலே



நாம் ஒரு வாரம், இரண்டு வாரம் என்றுகூட தள்ள முடியாத அளவிற்கு நெருக்கடி இருக்கின்றது என்பதால்தான் இதை நான் மீண்டும் மீண்டும் வலியுறுத்துகின்றேன்.

அடுத்து, இரண்டு மாதங்களுக்குள்ளாக சென்னையிலே கடுமையான மழை வருகின்றபோது, சென்னை நகரமே மிதந்துவிடுமோ என்று கருதத்தக்க அளவிற்கு இன்றைக்கு நிலைமை மோசமாக இருக்கிறது. இந்த இரண்டு மாதங்களில், மழைநீர்க் கால்வாயைப் பெரும்பாலும் போட்டுவிட்டு, இடையிலே ஒரு சின்ன இடத்தை மட்டும் விட்டு வைத்திருக்கிறார்கள். அதை இணைக்காத காரணத்தினால் ஒரு கிலோ மீட்டர், இரண்டு கிலோ மீட்டர் நீளத்திற்கு, போட்டதெல்லாம் வீணாகக் கிடக்கிறது. ஏன் இப்படித் துண்டு துண்டாகக் கிடக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை. அதுபோன்ற விஷயங்களில் எல்லாம் விரைவான நடவடிக்கை தேவையென்று நான் வலியுறுத்துகின்றேன்.

ஊரகப் பகுதியிலிருந்து நகரப் பகுதியை நோக்கி மக்கள் ஓடிவருகின்ற போக்கைத் தடுப்பதற்கு, அங்கிருக்கின்ற கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு, ஊரக வளர்ச்சி விஷயத்திலே, உள்ளாட்சி அமைப்பு விஷயத்திலே நாம் ஏராளமான நடவடிக்கைகளுக்குத் திட்டங்களை அறிவித்திருக்கிறோம். ஆனால், அதேநேரத்தில் இன்னொரு பக்கத்தில் நகரமயமாதல் 2030 ஆம் ஆண்டு வாக்கில், 67 சதவீதமாக உயரும் என்றும் இந்த நிதிநிலை அறிக்கையிலே போடப்பட்டிருக்கிறது. இந்த இரண்டிற்கும் சற்று முரண் இருப்பதாக எனக்குப் படுகிறது. நம்முடைய விவசாயத் தொழிலுக்கும், ஊரகப் பகுதிகளிலே நாம் இப்போது காட்டியிருக்கிற இந்தக் கவனத்திற்கும் உரிய பலனாக இது எனக்குப் படவில்லை. ஒருவேளை நம்முடைய கணிப்பு அதிலே ஏதாவது தவறோ என்று கூட எண்ணத் தோன்றுகிறது எனக்கு...

முற்பகல் 11–10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே இந்தக் கருத்துக்கள் முரண்பாடாக இருக்கிறது என்று கூறியிருக்கிறார்கள். கல்வி அறிவு கூடுதலாக வருகின்றபோது, அந்தக் கல்வி அறிவைப் பயின்றவர்கள் எங்கு சென்றால் பணி

கிடைக்கும் என்று அலைகிறார்களோ அங்கு செல்லுகின்றபோது இயற்கையாகவே நகர்ப்புறங்கள், மேலும் மேலும் வளர்ச்சியடையும். அதன் அடிப்படையிலேதான், வருகின்ற 10 ஆண்டுகள் கழித்து 67 விழுக்காடுகள் வரும் என்பது அங்கே கோடிட்டுக் காட்டப்பட்டிருக்கிறது. அதைத் தடுத்து நிறுத்துகின்ற முகத்தான்தான் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கிராமப்புறங்களில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற விவசாயப் பெருமக்கள், கிராமப்புறங்களில் படித்திருக்கின்ற இளைஞர் பெருமக்களுக்கு ஏற்றவாறு நல்ல செயல் திட்டங்களைத் தீட்டி நடைமுறைப்படுத்தியிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** நம்முடைய திட்டங்களிலே மிக முக்கியமானது பொது விநியோகத் திட்டம். நாம் இவ்வளவு எல்லாம் கொடுத்த பிறகும்கூட, மக்கள் முழுமையான நிம்மதியைப் பெறுகிறார்களா என்பதைத்தான் நாம் பார்க்கவேண்டும். பொது விநியோகத்திற்கு நாம் மிகப் பெரிய அளவுக்கு முக்கியத்துவம் கொடுத்து, இலவச அரிசி மற்றும் இதர அத்தியாவசியப் பொருட்கள் என்று நாம் வழங்கிக் கொண்டிருக்கிறோம். ஏற்கெனவே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசியதைப்போல, மண்ணெண்ணெய் என்பது இந்த மொத்த பொது விநியோகத் திட்டத்தில் நாம் ஆற்றிக்கொண்டிருக்கிற எல்லாப் பணிகளையும் பின்னுக்குத் தள்ளிவிடுமோ என்று கருதத்தக்க அளவுக்குள்ள பிரச்சினையாக இன்றைக்கு மாறிவிட்டது. ஐந்து லிட்டர் கொடுத்தவர்களுக்கு மூன்று லிட்டர்தான் கொடுக்கிறோம். மத்திய அரசாங்கம் மண்ணெண்ணெயின் ஒதுக்கீட்டைக் குறைத்த காரணத்தினால், ஒவ்வொரு ரேஷன் கடைகளிலும் எவ்வளவு தேவையோ அதிலே, 70 சதவீதத்திலிருந்து 80 சதவீதம் அளவுக்குத்தான் மண்ணெண்ணெய் போய்ச் சேருகிறது. ஆகவே, 80 சதவீதம் கார்டுகளுக்குக் கிடைக்கும்; 20 சதவீதம் கார்டுகளுக்குக் கிடைக்காது. அவர்கள் அடுத்த மாதம் வாங்கிக்கொள்ளவேண்டுமென்று அனுப்பப்படுகிறார்கள். இப்படிச் சுழற்சி முறையிலே ஒரு பகுதியினர் மண்ணெண்ணெயே கிடைக்காதவர்களாகவும் இருக்கிறார்கள். ஆகவே, மக்கள் மத்தியிலே



ஒரு முணுமுணுப்பை உண்டாக்கக்கூடிய ஒரு காரியமாக இன்றைக்கு இது மாறிவிட்டது என்பதை நான் இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழகத்திற்கு இந்த மண்ணெண்ணெயை விநியோகம் செய்வதில் மத்திய அரசு எவ்வளவு பாராமுகமாக இருக்கிறது என்பதைச் சொன்னார்கள். ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் ஆறுமுகம் அவர்கள் பேசும்போதும் சொன்னார்கள். அதே கருத்தை, மாண்புமிகு சவுந்தரராசன் அவர்களும் கோடிட்டுக் காட்டுகிறார்கள். எங்கும் எந்த ரேஷன் கடைகளிலும் 5 லிட்டர் மண்ணெண்ணெய்க்குப் பதிலாக, 3 லிட்டர் மண்ணெண்ணெய் கொடுப்பதாக ஏதாவது புகார் கூறுவார்களேயானால், அவர்கள்மீது உறுதியாக நடவடிக்கை எடுக்கப்படும். 3 லிட்டர் மண்ணெண்ணெய் எந்தெந்த கார்டுகளுக்கு எந்த அளவுக்கு வழங்கப்பட்டதோ, அதே அளவுக்குத்தான் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டு வருகிறது. அதுமட்டுமல்ல; இந்த 3 லிட்டர் மண்ணெண்ணெய்கூட கடந்த ஆட்சியிலே ஏற்பட்ட ஏறத்தாழ 14 இலட்சம் போலி கார்டுகளுக்கும் மண்ணெண்ணெய் விநியோகம் செய்யக்கூடிய அளவுக்கு இன்றைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது இந்த அரசு. அப்படி மண்ணெண்ணெய் குறைவாக வருகின்றபொழுது, மண்ணெண்ணெய் இல்லாமல் ஏழையெளியோர்கள் யாரும் கஷ்டப்படக் கூடாது என்பதற்காக, அவர்களுக்கு முன்னுரிமை வழங்கி, அதுவும் எல்லோருக்கும் வழங்க வேண்டும். அதேநேரத்தில் கிடைக்காதவர்கள் அடுத்து அவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டு, அவர்களுக்கு உரிய அளவுக்கு மண்ணெண்ணெய் வழங்கப்படும் என்பதை இந்த அவையின்மூலமாக மாண்புமிகு பேரவைத் தலைவரின்மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மண்ணெண்ணெயைப்பற்றி அமைச்சர் அவர்கள் கொடுத்த விளக்கத்திற்கு நன்றி. மத்திய அரசாங்கத்தை எதிர்த்து நாம் இந்த விஷயத்திலே போராட வேண்டும்; தீர்மானம்

நிறைவேற்ற வேண்டும்; பெறுவதற்கு முயற்சிக்க வேண்டும். இதர மாநில அரசுகளையும் இந்த விஷயத்தில் ஒரு கருத்து ஒற்றுமைக்குக் கொண்டுவர வேண்டும் என்கிற அளவுக்கு இது ஒரு முக்கியமான பிரச்சினை. இடையிலே, நாம் நம்முடைய நிதியிலிருந்தாவது வால்பாறை போன்ற மிகப் பின்தங்கிய பகுதிகளுக்கு எல்லா வகையிலும் மண்ணெண்ணெய் பயன்படுத்தியே தீர வேண்டும் என்று இருக்கிற அந்த மக்களுக்காவது நாம் ஏதாவது உதவி செய்ய முடியுமா என்று பார்க்கிற அளவுக்கு அது முக்கியமானதாக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

*முற்பகல் 11–15*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண்ணெண்ணெயைப் பொறுத்தவரையில், மாநில அரசுக்கு அதை வாங்கிக்கொள்ளும் அதிகாரம் இல்லை. மத்திய அரசுதான் ஒதுக்கீடு செய்ய வேண்டும். மத்திய அரசுதான் வழங்க வேண்டும். மாநில அரசுகள் விரும்பினாலும் வெளியே வாங்கிக்கொள்ள அனுமதி இல்லை. மண்ணெண்ணெய் மட்டும் அல்ல; D.A.P. உரத்தைக்கூட மத்திய அரசு போதுமான அளவில் ஒதுக்கவில்லை. அதற்குக்கூட நான் கடிதம் எழுதியிருக்கிறேன். நேரிலும் பிரதமரிடம் வற்புறுத்தி இருக்கிறேன். ஆனால் அந்த உரத்தின் அளவைக்கூட மத்திய அரசு குறைத்திருக்கிறது. ஆக ஒன்றல்ல; இரண்டல்ல; பல இனங்களில் மாநில அரசுகளுக்கு அநீதியைத்தான் மத்திய அரசு இழைத்துக் கொண்டிருக்கிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** விளக்கத்திற்கு மிக்க நன்றி. ஏழை மக்களுக்காகப் பொது விநியோகத் திட்டம்மூலம் நாம் செய்து கொண்டிருக்கிற எல்லா சிறப்பு ஏற்பாடுகளையும் விஞ்சி, பொதுவான விலையேற்றம் தொடர்ந்த வண்ணமிருக்கிறது. இதற்கும் மத்திய அரசாங்கம்தான் எல்லா அளவிலும் பெரிய பங்கு ஆற்றிக் கொண்டிருக்கிறது. பண வீக்கம், உணவுப் பொருட்களின் பண வீக்கம், இவற்றைக் கட்டுப்படுத்த முடியவில்லை என்று திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். முன்பேர வர்த்தகம்



போன்றவற்றைக்கூட, அத்தியாவசியப் பண்டங்களை அதிலிருந்து வெளியேற்றுவது என்ற நடவடிக்கையைக்கூட எடுக்க அவர்கள் தயாராக இல்லாத காரணத்தினால் எல்லாம் ஏறிக் கொண்டிருக்கிறது. பெட்ரோல் விலையை ஏற்றுகிறார்கள். டீசல் விலையை ஏற்றுகிறார்கள். சிலிண்டர் விலையை ஏற்றுகிறார்கள். நம்மைப் போன்ற மாநில அரசு இந்த சிலிண்டர் விலை ஏற்றத்திலிருந்து மக்களைக் காப்பாற்றுவதற்கு அதனுடைய குறைந்த வருமானத்திலிருந்து கொஞ்சத்தைக் கொடுக்கிறது. நம்முடைய அரசும் அப்படிக் கொடுத்திருக்கிறது. அப்படிக் கொடுக்கிற கட்டாயத்தை நமக்கு அவர்கள் உண்டாக்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மத்திய அரசாங்கத்தின் இந்தப் போக்குகளுக்கு ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் சொன்னதைப்போல எல்லா வகைகளிலும் இந்த மாநிலம் மட்டும் அல்ல; அநேகமாக எல்லா மாநிலங்களும் மத்திய அரசின் இந்தவோர் எதேச்சதிகாரப் போக்கால் பாதிக்கப்படுகின்றன என்பதை நாம் சுட்டிக்காட்ட வேண்டியிருக்கிறது. அதில் பாதிக்கப்படுபவர்கள் மக்கள்தான் என்ற காரணத்தால்தான் நான் இதைச் சொல்கிறேன்.

அடுத்து, இந்த விலையேற்றம் என்பது இவ்வளவுக்குப் பிறகும்கூட ஏறிக் கொண்டே இருப்பது புதிராக இருக்கிறது. நம்முடைய ஓட்டல் போன்ற விடுதிகளிலே ஏராளமான விலை வித்தியாசங்கள். ஒரு இட்லி *4* ரூபாய், *5* ரூபாய்; ஒரு ஓட்டலில் *11* ரூபாய்; ஒரு வடை *24* ரூபாய்; இரண்டு சாம்பார் வடை *48* ரூபாய் என்றெல்லாம் விற்கப்படுகிறது. இதிலே ஓர் ஒழுங்குபடுத்துதலை நாம் கொண்டு வராவிட்டால், அது மிக மோசமான பாதிப்புகளை சாதாரண மக்களுக்கு, அதுவும் வேலையிலே இருக்கிற மக்களுக்கு ஏற்படுத்தும் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அவர்கள் நிர்ணயிக்கிற அந்த விலைகளிலே எந்த நியாயமும் கிடையாது. *1966* ஆம் ஆண்டிலே அண்ணா அவர்கள் உயிரோடு இருந்த காலத்திலேயே ஓட்டல் பண்டங்களின் விலையைக் குறைக்க வேண்டும் என்று "முரளி கபே" எதிரில் ஆர்ப்பாட்டம் நடத்தி இருக்கிறோம். ஆர்ப்பாட்டம் நடத்தியவர்களில் நானும் ஒருவன். அப்படி ஓட்டல்களில் இந்த எல்லா விலை ஏற்றத்தையும் அவர்கள் இஷ்டத்திற்குத் தீர்மானித்துக்கொள்ளலாம், திரையரங்கங்களிலே தீர்மானித்துக்கொள்ளலாம், மற்றதிலே தீர்மானித்துக்கொள்ளலாம் என்று இருக்கிற அந்த நிலைமையில் நாம் ஓர் ஒழுங்குபடுத்துதலைச் செய்ய வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

விலை ஏற்றங்களால் விவசாயிகளும் பயனடையவில்லை என்பதுதான் இதிலே இருக்கிற துரதிருஷ்டம். ஆகவேதான் நெல்லுக்கு குவிண்டாலுக்கு 1,500 ரூபாயும், கரும்புக்கு டன்னுக்கு 3,000 ரூபாயும் வேண்டும் என்று நாம் மாண்புமிகு முதலமைச்சரிடம் கோரிக்கை வைக்க நேருகிறது.

பொது விநியோக முறையை மேலும் நாம் பலப்படுத்த வேண்டும் என்று நான் வேண்டுகிறேன். 500 கார்டுகளுக்கு ஒரு கடை என்பதை நாம் உறுதிப்படுத்துவதும், மக்கள் எளிதில் அதிக நேரம் செலவு பிடிக்காமல் பொருட்களைப் பெறுவதில் நடவடிக்கை எடுப்பதும் அவசியம் என்று நான் கருதுகிறேன். Packing மூலமாகப் பொருட்களைக் கொடுத்தால் அங்கு எந்த எடை குறைவுப் பிரச்சினையும் இருக்காது, விரைவாக அந்தப் பொருட்களை வழங்குகிற நிலைமையும் இருக்கும். ரேஷன் கடைகளிலே போதுமான ஊழியர்கள் இல்லை என்கிற அந்த நிலைமையையும் சமாளிக்க இது பயன்படும் என்று நான் கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏறத்தாழ தமிழகத்திலே இருக்கின்ற ரேஷன் கடைகளில் 4,233 பணியாளர்கள் பற்றாக்குறை இருக்கிறது. இது மாண்புமிகு அம்மாவினுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்கள் அதற்கான அனுமதி வழங்கி இருக்கிறார்கள். கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியிலே ஏற்பட்டிருந்த குளறுபடிகளையெல்லாம் களைந்து, அதி விரைவிலே மாண்புமிகு அம்மா அவர்கள் இந்தப் பணியாளர்கள் நியமனத்தைச் செய்யச் சொல்லியிருக்கிறார்கள். அதற்கான பணி நடந்து கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக இந்தச் சபைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மிக்க நன்றி. ரேஷன் கார்டுகளில் இருக்கிற போலிகளை அகற்ற வேண்டும் என்பதிலே மாற்றுக் கருத்து இருக்க முடியாது. கடந்த ஆட்சியிலே அப்படி 13 இலட்சம் கார்டுகள் கண்டுபிடிக்கப்பட்டு அதை அகற்றுவோம் என்று



அறிவித்து, தேர்தல் நெருங்கிவிட்ட காரணத்தினால் அப்படியே விட்டுவிட்டுப் போய் விட்டார்கள். தேர்தல் நடக்கிற வரையிலும்கூட அவர்களுக்குப் பொருட்கள் கிடைத்துக்கொண்டிருந்தன. தேர்தல் முடிந்து இந்த ஆட்சி பொறுப்பேற்றவுடனேயே அந்தக் கார்டுகளுக்குப் பொருட்கள் இல்லை என்று சொல்கிற ஒரு நிலைமை ஏற்பட்டு, அதை இன்றைக்கு மற்றவர்கள் அரசியலுக்குப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். போலிக் கார்டுகளை கண்டுபிடிப்பதற்காக அவர்கள் கையாண்ட முறைகளும் சரியற்றவை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அவர்கள் போய் வீட்டிலே ஆள் இல்லையென்றால்,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11–20

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மைனாரிட்டி கருணாநிதி அரசு எந்தெந்த ரேஷன் கார்டுகளுக்குப் பொருள் வழங்கிக் கொண்டிருந்ததோ, அதே வழக்கத்தை இப்போது மாண்புமிகு அம்மாவினுடைய அரசும் கருணை உள்ளத்தோடு வழங்கிக்கொண்டிருக்கிறது. இந்த போலிக் கார்டுகளைக் களைய வேண்டும் என்பது எல்லோருக்கும் உரியது. இந்தச் சபையில் இருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள், அவர்களுடைய கருத்தை அறிந்து அதிவிரைவிலேயே அதற்கான நடவடிக்கையை மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** நன்றி. புதிய கார்டுகளை வழங்குவதில் வேகம் காட்ட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, போலி கார்டு பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஒரே வழி ஸ்மார்ட் கார்டு, பயோமெட்ரிக் கார்டு; அதற்கு நம்முடைய அரசு சற்று நிதி ஒதுக்கி வேகமாக அதைச் செய்தால், ஏகப்பட்ட பிரச்சினைகள் நமக்குத் தீரும்; அரசுக்கு வருவாய் மிச்சப்படும் என்பதை என்னுடைய ஆலோசனையாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, மின்சாரம். மின்சாரத்தைப்பற்றி ஏராளமான திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. அவை அனைத்தும் நிறைவேற வேண்டும். அந்தத் திட்டத்தை அறிவிக்கிறபோது, நம்முடைய நிதிநிலை அறிக்கையிலே நான் பார்க்கிறபோது, ஏற்கெனவே இருக்கிற பற்றாக்குறையைப் போக்குவதற்கு ஏற்ற வகையில் புதிய மின் உற்பத்தி ஏற்பாடுகள் இருக்கின்றன என அதில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. 2012 டிசம்பருக்கு இடையிலே, புதிய மின் தேவைகள் வருகின்றன. மின் தேவை என்பது ஏராளமாக இருக்கிறது. அந்தப் புதிய மின் தேவையைப் பூர்த்தி செய்வதற்கேற்ப, நான் பார்த்தவரையிலே புதிய மின் திட்டங்கள் அதில் இல்லையோ என்று எனக்குப் படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மா அவர்களுடைய ஆட்சியில் ஏற்கெனவே இருக்கின்ற மின்சாரப் பற்றாக்குறையைப் போக்குவதோடு மட்டுமல்லாமல், வருங்காலத்திலே தேவை அதிகரிக்கும்போது, ஆண்டுக்கு 7 சதவீதம் அளவிற்கு மின் உற்பத்திப் பயன்பாடு கூடும் என்பதைக் கண்டறிந்து, அந்த 7 சதவீத தேவைக்கும், உற்பத்தித் திட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. அந்த விளக்கத்தையெல்லாம் ஏற்கெனவே அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இன்னும் விரிவான விளக்கங்களை மானியக் கோரிக்கையிலே உங்களுக்கு எடுத்துச் சொல்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** இருந்த ஓர் ஐயப்பாட்டைதான் கேட்டேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஐந்தாண்டுக் காலமாக மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் தமிழ்நாடு கேட்பாரற்ற நிலையில் கிடந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த ஐந்தாண்டுக் காலமாக நடந்த



தவறுகளையெல்லாம் பட்டியலிட்டு, நாங்கள் வந்து இப்போது 3 மாதங்கள்கூட ஆகவில்லை, இதை இன்னும் சரிசெய்யவில்லையே என்று கேட்டால், அதற்கு இன்னும் நேரம் போதவில்லை. அடுத்த ஆண்டு, இதே நேரத்தில் என்ன செய்திருக்கிறோம் என்பதைப் பார்த்துவிட்டு (மேசையைத் தட்டும் ஒலி) அப்போது நீங்கள் கேள்வி கேளுங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அப்போது நீங்கள் ஒரு மதிப்பீடு செய்யுங்கள். மின்சாரத்தைப் பொறுத்தவரையில், பற்றாக்குறையைச் சரி செய்வது மட்டுமல்ல; அடுத்த ஐந்தாண்டுக் காலத்தில் 23 ஆயிரம் மெகா வாட் மின்சாரத்தை உற்பத்தித் திறனில் சேர்க்கக்கூடிய திட்டங்களை தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு மிக்க நன்றி. நான் கடந்த ஆட்சியைப் பற்றிதான் சொல்லிக்கொண்டிருக்கிறேன். இந்த ஆட்சி, இந்த மின் பற்றாக்குறைக்கு எந்தவகையிலும் பொறுப்பு என்று நான் சொல்லவில்லை என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மின்சார உற்பத்தித் திட்டம். குந்தா ஆற்றுக்குக் குறுக்கே நீரேற்று மின் நிலையத்தைக் கட்டுவதற்கான ஒரு திட்டம் மத்திய அரசாங்கத்தினுடைய தடையால், சுற்றுச்சூழல் தடையால் தடைபட்டிருக்கிறது. அது மிக மிக அவசியமான நமக்குத் தேவையான ஒரு திட்டம் என்பதால், அதுகுறித்து குறிப்பான சில நடவடிக்கைகளை நாம் எடுக்கவேண்டும் என்று . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குந்தா நீரேற்று மின் உற்பத்தித் திட்டத்தைப் பொறுத்தவரையில், காவிரி ஆற்று நீரைப் பயன்படுத்தி அந்தத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும் என்ற காரணத்தினால், காவிரி நீரைப் பயன்படுத்துவதாக இருந்தால், கர்நாடக மற்றும் கேரள மாநிலங்களுடைய அனுமதியையும் நாம்

பெறவேண்டும் என்று தேவையில்லாத ஒரு கட்டுப்பாட்டை மத்திய அரசு விதித்திருக்கிறது. ஏனென்று சொன்னால், மின்சார உற்பத்திக்கென்று கூடுதலாக நாம் நீரைப் பயன்படுத்தப்போவது இல்லை. ஏற்கெனவே, கர்நாடக மாநிலத்திலிருந்து நீர் உள்ளே வந்த பிறகு, நமது மாநில எல்லைக்குள் வருகின்ற அந்த நீரைத்தான் அதற்குப் பயன்படுத்துகிறோம். அப்படி இருக்கிறபோது, தேவையில்லாமல் இங்கே மத்திய அரசு முட்டுக்கட்டைப் போட்டுக்கொண்டிருக்கிறது. நாங்கள் ஏற்கெனவே சொன்னதுபோல், மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் பைக்காரா நீர் மின் உற்பத்தித் திட்டத்திற்கு எப்படி முட்டுக்கட்டைப் போட்டார்களோ, அதை மாண்புமிகு அம்மா அவர்கள் வெற்றிகரமாக உச்ச நீதிமன்றம் சென்று செயல்படுத்தினார்கள்; அதைப்போல, இந்தப் பிரச்சினைக்கும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தொடர் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். நிச்சயமாக இதற்கு அனுமதி தேவையே இல்லை. மாநில அரசு அங்கேயிருந்து கூடுதல் நீரைப் பயன்படுத்தினால்தான், அதற்கு நாம் அனுமதி பெறவேண்டும். ஆனால், தேவையில்லாமல் இந்த அனுமதியைப் பெறவேண்டும் என்று கொண்டுவந்திருப்பதை நம் மாநில அரசு, மத்திய அரசுக்கு வலியுறுத்தி வருகிறது. இருந்தாலும், அவர்கள் மாநில அரசுகளினுடைய அனுமதியைப் பெற வேண்டும்; பெற வேண்டும் என்று மீண்டும் மீண்டும் வற்புறுத்திக் கொண்டிருக்கிறார்கள். அம்மா அவர்கள் அதற்குத் தொடர் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். மிக விரைவிலேயே குந்தா நீரேற்று மின் உற்பத்தித் திட்டத்திற்கான தடைகளை நீக்கி, அதைத் தொடங்குவதற்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள் என்பதை உங்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11–25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு மிக்க நன்றி. போக்குவரத்தில் ஒப்பந்த முறையிலே ஓட்டவேண்டிய ஊர்திகளை regular service—ஆக ஓட்டிக்கொண்டிருக்கிறார்கள். ஏதோ பெர்மிட் எடுத்த வண்டிகளைப்போல் ஓட்டிக்கொண்டிருக்கிறார்கள். அதிலே மிகப் பெரிய வருமான இழப்பு அரசுக்கு ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது,



அதேபோல், அரசுப் பேருந்துகளைப் புதுப்பிப்பதற்கு எடுத்துக் கொண்டிருக்கக்கூடிய நடவடிக்கைகளை நான் வரவேற்றுப் பாராட்டுகிறேன். அரசுப் பேருந்துகள் அப்படிப்பட்ட நிலையில் அமைந்தால்தான் தனியார் பேருந்துகளோடு போட்டியிட்டு நாம் அரசின் வருமானத்தைப் பெருக்கமுடியும். இல்லாவிட்டால் அரசுக்கு வருமானம் சுருங்கிக்கொண்டே இருக்கும் என்பதால் அதை நான் வரவேற்கிறேன்; வேகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த ஆட்சியிலே அரசுப் பேருந்துகளின் நேரங்கள் விட்டுத்தரப்பட்டன. அரசுப் பேருந்துகளின் வழித் தடங்கள் விட்டுத்தரப்பட்டன. மற்றவர்களுக்கு, புதிய வழித் தடங்களை அரசுப் பேருந்துகளின் வழித் தடங்கள் பாதிக்கின்ற அளவுக்கு அவர்கள் விட்டுக்கொடுத்தார்கள். இவற்றையெல்லாம் மோட்டார் வாகனச் சட்டத்திற்கு உட்பட்டு, மீண்டும் வருமானமுள்ள வழித்தடங்களைப் பெறுவதற்கு இந்தப் புதிய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் நான் இந்தத் தருணத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

தொழிலாளர்களுக்குள்ள பிரச்சினைகளை நான் மானியக் கோரிக்கையிலே சொல்லலாம் என்று கருதுகிறேன்.

கல்வி. கல்வியிலே ஒரு மாவட்டத்திற்கு ஓர் அரசு மருத்துவக் கல்லூரி என்ற இலக்கை அடைவதற்கு நம்முடைய அரசு முயற்சிக்க வேண்டும். நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று நான் எதிர்பார்க்கிறேன். அதேபோல், பொறியியல் கல்லூரிகளும் மாவட்டத்திற்கு ஒன்று என்று வரவேண்டும். மத்திய அரசாங்கம் U.G.C. கிராண்டிலே கொடுக்கக்கூடிய பொறியியல் கல்லூரிகளைப் பெற்று, பின்தங்கிய மாவட்டங்களுக்கு ஒதுக்குவதை நாம் உறுதி செய்ய வேண்டும்.

சற்று முன்பு மாண்புமிகு முதல்வர் அவர்கள் பள்ளிகளைத் தரம் உயர்த்துவது குறித்து அறிவித்துவிட்டார்கள். ஆகவே, அதை நான் பேச விரும்பவில்லை. ஏராளமான கல்விக்கூடங்கள் அப்படித் தரம் உயர்த்தப்படவேண்டியவையாக இருக்கின்றன. சமச்சீர் கல்வியையும் நாம் அமல்படுத்தத் தொடங்கிவிட்ட பிறகு, இந்தக் கல்விக்கூடங்களிலே செய்ய வேண்டிய கட்டுமானப் பணிகள் ஏராளம் இருக்கின்றன. இந்த நிதிநிலை அறிக்கையிலேகூட நாம் சற்று கூடுதலான நிதியை ஒதுக்கியாவது அந்த வேலையை வேகமாகச் செய்யவேண்டும் என்று நான் பணிவோடு

கேட்டுக்கொள்கிறேன். அரசுப் பள்ளிக் கூடங்கள்; உயர்நிலைப் பள்ளியாகட்டும், மேல்நிலைப் பள்ளியாகட்டும். . .(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையில் பள்ளிக் கட்டமைப்பு வசதிக்காக 498.24 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** சமச்சீர் கல்வியெல்லாம் வந்திருக்கின்ற சூழ்நிலையிலே, இன்னும் சற்றுக் கூடுதலாக வேண்டும் என்ற அர்த்தத்தில்தான் கேட்டேன். இருந்தாலும் நிதிநிலை அறிக்கையினுடைய இந்த அறிவிப்பை நான் வரவேற்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வித் துறையில் மட்டுமல்ல, உள்ளாட்சித் துறையிலும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பள்ளிகளைச் சீரமைப்பு செய்வதற்காக 100 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** உள்ளாட்சித் துறையிலும் ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதை நினைவுபடுத்தினார்கள். நான் இந்த இரண்டையுமே அதிகப்படுத்தவேண்டுமென்கின்ற அர்த்தத்தில்தான் கேட்டேன். காரணம், சென்னை, திரு.வி.க. நகர் தொகுதியிலே, மாதவரம் ஹை ரோடிலே இருக்கக்கூடிய பள்ளிக் கூடத்தில், +1 வகுப்பில் 108 பிள்ளைகள் படிக்கக்கூடிய ஒரு வகுப்பறைதான் உள்ளது. அப்படிச் சென்னை நகரத்தில் மட்டுமே என்னுடைய



கண்ணுக்குத் தெரிந்திருக்கிறது. ஆகவே, வகுப்பறைகள் உட்பட நாம் கூடுதலாகக் கட்டுவதற்கு இந்தப் பணம் போதுமென்றால் மிக்க மகிழ்ச்சி. புதிதாக ஒதுக்கவேண்டும் என்றெல்லாம் நான் வற்புறுத்தவில்லை. நான் என்னுடைய ஆதங்கத்தை அதிலே வெளிப்படுத்தினேன், அவ்வளவுதான்.

அதேபோல், அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்குச் சமமாகக் கிட்டத்தட்ட தனியார் பள்ளிகள் இருக்கின்றன. மேல்நிலைப் பள்ளிகளுக்குச் சமமாகக் கிட்டத்தட்ட தனியார் பள்ளிகள் இருக்கின்றன. கொஞ்சம் குறைவாக இருந்தாலும்கூட, இந்த எண்ணிக்கையில் அரசுப் பொறியியல் கல்லூரிகளின் எண்ணிக்கையைத் தாண்டி தனியார் கல்லூரிகளும், அரசுப் பள்ளிகளைத் தாண்டி அல்லது அதற்கு நெருக்கமாக தனியார் பள்ளிகளும் இருக்கின்றன என்ற ஒரு நிலைமை இருக்கிறது. இந்த விகிதத்தை நாம் சற்று மாற்றியாக வேண்டும். அரசின் புதிய பள்ளிக் கூடங்களை அதிகப்படுத்துவதன்மூலமாக தனியார் பள்ளிகளைவிடக் கூடுதலான எண்ணிக்கையிலே அரசுப் பள்ளிகள் இருந்தால்தான் தனியார் பள்ளிக் கூடங்களை நாம் கட்டுப்படுத்த முடியும். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி மானியக் கோரிக்கையிலே அதை அறிவிக்கலாம் என்றிருக்கின்றோம். கூடுதலாக உயர்நிலைப் பள்ளிகள் அறிவிக்கப்படவிருக்கின்றன. எத்தனை பள்ளிகள் என்பதை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அனுமதி பெற்று அறிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மிக்க நன்றி. நாம் இல்லாமல் அரசு என்ன செய்துவிட முடியும் என்று கருதுகின்ற வலுவான நிலையில் தனியார் பள்ளிகளும், பொறியியல் கல்லூரி போன்றவைகளும் இருக்கக்கூடாது என்பதுதான் என்னுடைய கருத்து. அமைச்சர் அவர்கள் சொல்லியிருப்பது மிகவும் ஆறுதலான ஒரு கருத்து என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, நமது காவல் துறை— அதற்கு உயர் முன்அழுத்தம் கொடுத்து நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கின்றது. சென்னையில் கூட்டம் நடத்துவதற்கான இடம் என்பது ஒரு பெரிய பிரச்சினையாக இருக்கிறது. பெரிய கூட்டம் நடத்துவதற்கான இடம், காவல் துறை அதற்கு விதிக்கின்ற கட்டுப்பாடுகளும், மற்றும் சற்றுத் தளர்த்தப்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். எல்லா மாநகராட்சிப் பகுதிகளிலுமே இந்தப் பிரச்சினை இருக்கிறது. ஏற்கெனவே புதிய தலைமைச் செயலகம் கட்டுவதற்கு முன்னால் மன்றோ சிலையிலிருந்து, கெஸ்ட் ஹவுஸ் வரை ஊர்வலமாகச் சென்று அங்கே கூட்டம் நடத்துவதற்கு உரிமை இருந்தது. இப்போது தலைமைச் செயலகம் அங்கே செயல்படாத காரணத்தினால், ஏற்கெனவே இருந்த அந்த உரிமையை வழங்குவது சென்னை நகர ஜனநாயக இயக்கங்களுக்கு அவசியம் என்று நான் கருதுகிறேன்.

*முற்பகல் 11–30*

ஏற்கெனவே இங்கே தி.நகர் தொகுதியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. கலைராஜன் அவர்கள் Club-களைப் பற்றிச் சொன்னார்கள். சென்னை முழுவதும் இருக்கிறது. அவர் பேசிய அடுத்த நாள், 350-க்கும் மேற்பட்டவர்கள் அங்கே கைது செய்யப்பட்டார்கள் என்கிற தகவலைப் பத்திரிகையிலே பார்த்தேன். மிகத் துரிதமான நடவடிக்கை என்று நான் அதனைக் குறிப்பிட விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* அந்த வகையிலே செய்ய வேண்டும். ஆனால், இதில் எந்தக் Club-உம் போலீசுக்குத் தெரியாமல் நடக்கவில்லை என்பதையும் நான் இங்கே பதிவு செய்து, அதற்குக் காரணமானவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரைச் செயல்பட்டுவந்த சூதாட்டக் Club-கள் காவல் துறையினருக்குத் தெரிந்து நடந்ததோ, தெரியாமல் நடந்ததோ, இனிமேல் நடக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.



**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு மிக்க நன்றி. நில அபகரிப்புப் பிரச்சினைகளில் காவல் துறைக்குப் புகார் கொடுத்து, காவல் துறை, வருவாய்த் துறைக்கு அந்தப் புகார்களில் உள்நில விவரங்களைச் சரிபார்த்துக் கொடுங்கள் என்று கேட்டால், வருவாய்த் துறை அதைச் சரிபார்த்துக் கொடுப்பதிலே நிறைய தாமதப்படுத்துகிறது என்று சொல்கிறார்கள். வருவாய்த் துறையிலே விசாரித்தால், ஆட்கள் போதவில்லை என்று சொல்கிறார்கள். ஆகவே, இந்த வழக்குகளை வேகப்படுத்துவதற்கு, வருவாய்த் துறையினுடைய உதவி தேவைப்படுவதாக அவர்கள் சொல்கிறார்கள். முன்னாள் முதல்வர் அவர்கள் இதுகுறித்துப் பேசியது, எனக்கு ஆச்சரியமாக இருந்தது. இந்தக் குற்றச்சாட்டுக்கள் பொய் என்று நிரூபிக்கப்பட்டால் குற்றம் சாட்டியவர்கள்மீது நடவடிக்கை எடுக்க சட்டம் தேவை என்று அவர் பேசியிருக்கிறார். இதனுடைய பொருள் என்னவென்றால், யாரும் குற்றம் சொல்வதற்கே அச்சப்பட்டு, புகாரே வராமல் போய்விட வேண்டுமென்பதுதான் அவருடைய நோக்கம். இப்படியொரு சட்டம் இயற்ற இயலாது. குறிப்பாக, சாதாரண மக்கள் தொடர்பான விஷயத்திலே உண்மை, உண்மையாக இருந்தாலும்கூட போதுமான சான்றுகள் இல்லாததால் இது தோற்றுக்கூடப் போகலாம். அதனுடைய பொருள் அவர் புகாரே சொல்லக் கூடாது என்பதல்ல. ஆனால், இவர் கேட்பது மிகுந்த உள்நோக்கம் கொண்டது என்பதை நான் இந்தச் சபையிலே சொல்லி, அவருடைய அந்த எண்ணமே தவறு என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

உள்ளாட்சி அமைப்புகளினுடைய செயல்திறனை அதிகப்படுத்துவதற்கு நிதியாதாரத்தையும் சற்று உயர்த்த வேண்டும். நம்முடைய மாநிலத்தில் கல்வி, சுகாதாரம், சாலை வசதி போன்ற ஏராளமான விஷயங்களை மாநில அரசே பொறுப்பேற்றுச் செயல்படுத்துவது என்பது சிறப்புக்குரிய விஷயம். இருந்தாலும், இன்னும் சற்று நிதி அங்கே கூடுதலாகத் தேவைப்படுகிறது. ஏனென்றால், ஊதியப் பிரச்சினை உட்பட அங்கே இருக்கிறது என்று சொல்கிறார்கள். அதை மாநில அரசு, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கனிவோடு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்து, குடிநீர். இதுபற்றி ஏற்கெனவே நிறைய சொல்லிவிட்டார்கள். இப்போதும் இருக்கின்ற அந்தப் பிரச்சினையைச் சற்று விரைவாக கவனிக்க வேண்டும் என்பதோடு,

நான் குறிப்பாகச் சொல்ல விரும்புவது, லாரிகளில் தண்ணீர் வழங்குவது என்கிற அந்த முறை எங்கெங்கு இருக்கிறதோ, அங்கெல்லாம் கடுமையான தவறு நடக்கிறது. லாரிகளில் தண்ணீர் என்பதை நிறுத்தத்தக்க அளவிலே, அந்தந்தப் பகுதிகளுக்குக் கூடுதலாக அழுத்தம் செலுத்தி வேகமாகக் குழாய்களைப் பதித்து, குழாய் மூலமாகத் தண்ணீர் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். நமக்கும் மிகப் பெரிய அளவுக்குச் செலவும் மிச்சமாகும். மிகப் பெரிய செலவு அந்த லாரிகளிலே தண்ணீர் வழங்குவதால் ஏற்படுகிறது என்பதையும், சென்னையிலேயே அது இன்னும் இருக்கிறது என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சாலைகளைப் பொறுத்தவரையில் ஊரகப் பகுதிகளிலே போடப்படக்கூடிய சாலைகள், சற்று நகரப் பகுதியிலே போடப்படுகிற சாலைகள், சென்னையிலே போடப்படுகிற சாலைகள் என அந்தச் சாலைகளின் thickness–இலே அவ்வளவு பெரிய வேறுபாடு ஏன் என்று எனக்குத் தெரியவில்லை. கிராமப் பகுதியிலே போடப்படுகிற சாலை வெறும் ஏடுகள்போல, ஓடுகள்போல இருக்கிற ஒரு நிலைமை இருக்கிறது. அந்த அளவுகளை நாம் அங்கே சற்றுக் கூடுதலாகக் கொடுக்க வேண்டும்.

அடுத்து, பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதைப்பற்றி நேற்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிச்சயமாக இந்த அரசு வழங்கும் என்று அறிவித்த அறிவிப்பு, மிக வரவேற்கத்தக்க, பாராட்டத்தக்க அறிவிப்பு என்பதை அவருக்குச் சொல்லிக்கொள்கிறேன்.

பாதாளச் சாக்கடைத் திட்டங்கள் பல ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கி பணமும் பெருமளவுக்குச் செலவழித்தும் முடியாமல், அந்தத் திட்டமும் முடியாமல், மக்களும் அந்தச் சாலைகளில் நடக்க முடியாமல், பயன்படுத்த முடியாமல் இருக்கிற நகராட்சிகள் நிறைய இருக்கின்றன. ஆகவே, அவற்றுக்குச் சற்று கூடுதலாகக் கவனம் செலுத்த வேண்டியதிருக்கிறது.

துப்புரவுப் பணியைத் தனியாருக்குக் கொடுப்பது, தனியார் முறையில் contract, casual முறையிலே அமர்த்துவது என்பதையும் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

3 ஆண்டுகள் ஒரு மனையிலே குடியிருந்தவர்களுக்கு அந்த இடத்தைப் பட்டா செய்வதற்கான நடவடிக்கையை அரசு எடுக்க



வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். 25 இலட்சம் விண்ணப்பங்கள் இருக்கின்றன. ஏற்கெனவே அவர்கள் அங்கே குடியிருக்கிறார்கள். காலங் காலமாக அங்கே குடியிருக்கிறார்கள். அதற்கு வகை மாற்றங்கள், காரணமாகச் சொல்லப்படுகிறது. தேவையான வகை மாற்றங்களைச் செய்து, அவர்களுக்குப் பட்டா வழங்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

கோயில் நிலத்திலே விவசாயம் செய்கின்றவர்களுக்கு அவர்களுடைய நிலையைப் பொறுத்து, ஏழ்மையைப் பொறுத்து, இலவசமாகவோ அல்லது சற்றுப் பணம் பெற்றோ, அந்த நிலங்களை அவர்களுக்குத் தருவதும், கோயில் மனைகளிலே குடியிருப்போருக்கும் வீடுகள் கிடைக்கச் செய்வதும் அவசியம் என்று நான் கருதுகிறேன். இவையெல்லாம் தமிழக மக்களில் ஒரு பெரும் பிரிவினர் மத்தியிலே பெருமகிழ்ச்சியைக் கொண்டுவரும் என்று நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, தொழில். தடையில்லா மின்சாரம், தட்டுப்பாடில்லாத தண்ணீர், விற்பனை வரியைத் தள்ளி வாங்கிக்கொள்வது, கிட்டத்தட்ட இலவச விலையில் நிலம் என்கிற முறையில் தொழிற்சாலைகளுக்கு வழங்குகிறோம். அப்படித்தான் அவர்களை ஈர்க்க முடியும் என்று ஏற்கெனவே அவை செய்யப்பட்டிருக்கின்றன. ஆனால், அவர்களிடம் போடப்படக்கூடிய Memorandum of Understanding–இல் என்ன இருக்கிறது என்று எங்களுக்குப் புரியவில்லை என்கிற ஒரு நிலைமை இருக்கிறது. ஆகவே, அது தொடர்பாக ஒரு வெள்ளை அறிக்கையை நாம் வெளியிட வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன். இவர்கள் இவ்வளவு பெற்றுக்கொண்ட பிறகும்கூட, நமது தொழிலாளர்களுக்கு உரிய சட்ட உரிமைகளை— நான் கூடுதலாக எதையும் கேட்கவில்லை; சட்ட உரிமைகளை—பணி நிரந்தரச் சட்டம், ஒப்பந்த முறை ஒழிப்புச் சட்டம், வேலை நேரச் சட்டம் போன்றவற்றைக்கூட அமல்படுத்துவதற்கு அவர்கள் மறுக்கிறார்கள். தொழிற்சங்கம் என்று அமைத்தால், நமது சட்டப்படி தொழிற்சங்கம் அமைத்தால், அவர்களோடு பேச மறுக்கிறார்கள். அங்கீகரிக்க மறுக்கிறார்கள். ஆகவே, அங்கே தொழில் அமைதி நிரந்தரமாக நிலவ, சிறப்புப் பொருளாதார மண்டலம் உட்பட ஒரு தொழிற்சங்க அங்கீகாரச் சட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தத் தொடரிலேயே நிறைவேற்றிக் கொடுத்தால், அது நம்முடைய

[திரு. அ. சவுந்தரராசன்] [2011 ஆகஸ்ட் 12

தொழிலாளர் சமூகத்திற்கு மிகப் பெரிய உதவியாக அமையுமென்று நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

*முற்பகல் 11–35*

அங்கன்வாடி என்பது இன்றைக்கு நம்முடைய தமிழகத்தினுடைய மனித வள மேம்பாட்டில் மிகப் பெரிய பங்காற்றிக் கொண்டிருக்கிற ஒரு துறையாக இருக்கிறது. 15,000–க்கு மேற்பட்ட மையங்களிலே புதுக் கட்டடங்கள் கட்டித் தரப்படுமென்று இந்த அறிக்கையிலே அறிவிக்கப்பட்டு இருப்பது மிகுந்த வரவேற்புக்குரியது.

அந்தப் பெண்கள்தான், கர்ப்பிணிப் பெண்களை, வளரிளம் பெண்களை, பிறந்த குழந்தைகளை அத்தனை பேரையும் பார்த்துக்கொள்பவர்களாக இருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு மீதம் இருக்கிற இடங்களிலேயும்—இந்த சென்டர் முழுவதும் வசதி குறைவாக இருக்கின்றன; தண்ணீர் கிடையாது; உடைந்த அல்லது விரிசல் நிலையிலே கட்டடங்கள் இருக்கின்றன; குழந்தைகளுக்கு ஆபத்து என்கிற நிலையிலே இருக்கின்றன. இப்போது அறிவித்திருப்பதை நான் மிகுந்த மனநிறைவுடன் வரவேற்கிறேன். எல்லா மையங்களையும் சீர்படுத்த வேண்டும். அதற்காக நீங்கள் படிப்படியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அங்கன்வாடியிலும், சத்துணவிலும், டாஸ்மாக்கிலும் கூட்டுறவிலும், உள்ளாட்சி மன்ற அமைப்புகளிலும் பணியாற்றக்கூடியவர்கள் தொகுப்பூதிய முறையிலே, மதிப்பூதிய முறையிலே இருக்கிறார்கள். அவர்களுக்கு ஊதிய விஷயத்திலே ஒரு காலமுறை ஊதியத்தைக் கொண்டுவருவதற்கு அரசு உதவி செய்ய வேண்டும். கடந்த ஆட்சியிலே எவ்வளவோ மன்றாடிப் பார்த்தோம்; நடக்கவில்லை. இந்த ஆட்சியிலே கனிவோடு அதைச் செயல்படுத்த வேண்டுமென்று நான் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். அரசுப் பணிகளிலே பணி நியமனம் செய்யப்படும் என்று இந்த நிதிநிலை அறிக்கையிலே தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. 1,800 கோடி ரூபாய் மீதம் வரும் பழைய ஊதியக் குழுவினுடைய arrears; அதனுடைய தொகை போக, இப்போது இனிமேல் அதைக் கொடுக்க நேராது. ஆகவே, அது வருமென்று சொல்லி, அந்த அடிப்படையிலே பணி நியமனம் என்று அறிவித்திருக்கிறீர்கள். பணி நியமனம் இப்படிச் செய்கிறபோது, தேவையான 2 இலட்சம் பணியாளர்களையும் நியமனம் செய்ய இயலாது என்று எனக்குத் தோன்றுகிறது. சற்றுக் கூடுதல் நிதி ஒதுக்கினாலும் நம்முடைய இந்த நிதிநிலை அறிக்கையிலே ...



2011 ஆகஸ்ட் 12]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் பேச்சில் குறுக்கிட வேண்டாமென்றிருந்தேன். ஆனால் என்னைப் பேச வைத்து விட்டார். திரும்பத் திரும்பக் கொஞ்சம் கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்தால் நன்றாக இருக்கும், கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று திரும்பத் திரும்பச் சொல்லுகிறார். பல்வேறு இனங்களில் இப்படிக் குறிப்பிட்டுவிட்டார். எத்தனையோ குறைபாடுகள் இருக்கின்றன; எத்தனையோ தேவைகள் இருக்கின்றன. எல்லாவற்றிற்குமே அடிப்படைத் தேவை நிதி. மத்திய அரசு, நிதி வரக்கூடிய ஒவ்வொரு இனமாகப் பறித்துப் பறித்து மாநில அரசுகளிடமிருந்த அந்த அதிகாரங்களை எல்லாம் பறித்து, வருவாய் வரக்கூடிய அத்தனை இனங்களையும் இன்று மத்திய அரசுதான் வைத்துக் கொண்டிருக்கிறது. மாநில அரசுக்கு வருவாய் வரக்கூடிய ஒரே வழி VAT-Value Added Tax, Commercial Taxes. இந்த ஒரு இனத்தில்தான் மாநில அரசுக்கு வருவாய் வருகிறது. அதை வைத்துக்கொண்டுதான் இத்தனை செலவுகளையும் நாங்கள் மேற்கொண்டு வருகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) இத்தனை நிருவாகப் பணிகளையும் செயல்படுத்தி வருகிறோம். ஆகவே, செய்ய வேண்டும் என்ற மனம் எங்களுக்கு இருக்கிறது. செய்ய வேண்டுமென்ற ஆசை எங்களுக்கு இருக்கிறது. நீங்கள் என்னென்ன கோரிக்கைகளை இங்கே முன்வைக்கிறீர்களோ, அதைவிட நூறு மடங்கு, ஆயிரம் மடங்கு செய்ய வேண்டுமென்ற ஆசை எனக்கும் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் நிதிப் பற்றாக்குறைதான் எங்கள் கைகளைக் கட்டிப்போட்டு இருக்கிறது. இருந்தாலும், அந்தக் கட்டுப்பாடுகளை எல்லாம் நாங்கள் தகர்த்தெறிந்து (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக மக்களுக்கு எப்படியும் நன்மை செய்தே தீருவோம் என்ற ஒரு வைராக்கியத்துடன் பகீரத முயற்சி செய்து ஒவ்வொரு மக்கள் நலத் திட்டமாக நாங்கள் எடுத்துக்கொண்டு வெற்றிகரமாகச் செயல்படுத்தி வருகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) எப்படியும் மத்திய அரசு எத்தனை தடைகள் விதித்தாலும் அவற்றைத் தகர்த்தெறிந்து தமிழக மக்களுக்கு நன்மைகள் செய்வோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்றைய காலக்கட்டத்தில் சூழ்நிலை எப்படியிருக்கிறதென்றால், சொல்வதற்கே வருத்தமாக இருக்கிறது. ஆனால், தமிழ்நாட்டை

வாழ விடுவதில்லை என்ற ஒரு எண்ணத்துடன்தான் மத்திய அரசு செயல்படுகிறது. ஆகவே, அதையும் மீறி ஜனநாயகக் கட்டமைப்புக்கு, ஜனநாயக முறைக்கு உட்பட்டு தமிழக மக்களுக்கு எங்களால் முடிந்த நன்மைகளைச் செய்தே தீருவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

*முற்பகல் 11–40*

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய சத்திய ஆவேசம், நியாயமான கோபம், இயல்பான ஆத்திரம் அத்தனைக்கும் நாங்களும் துணை நிற்கிறோம்; பங்குபெறுகிறோம். மத்திய அரசின் வல்லான் போக்கிற்கு எதிராக மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலைமையில் இந்த மாநிலத்தில் எடுக்கப்படுகிற எல்லா நடவடிக்கைகளிலும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி துணையாக, உறுதுணையாக, இருக்கும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசு, மத்திய அரசாங்கத்திற்கு எதிராக, மாநிலத்தினுடைய நன்மையைக் கருதி, இந்த மாநிலத்தினுடைய வளர்ச்சிக்காக எடுக்கக்கூடிய அத்துணை நடவடிக்கைகளிலும் இந்திய கம்யூனிஸ்டு கட்சியும் பங்குபெறும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவுடன், மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய இதே கோபத்தை அன்றைக்கு அவர்கள் வெளிப்படுத்தினார்கள். அதை வரலாற்றில் படிக்க முடிகிறது. அவருடைய கோபத்தை இன்றைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள்மூலமாக நாம் பார்க்கிறபொழுது உண்மையிலேயே பெருமைப்படுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மத்திய அரசு,



நிதி அதிகாரத்தில் மட்டுமல்ல; பல்வேறு பிரச்சினைகளில் மாநில அரசின்மீது ஒடுக்கு முறையைக் கையாளுகிறது.

எழும்பூரில் இருக்கக்கூடிய Railway Terminal–ஐ தாம்பரத்திற்குக் கொண்டு போவதற்காக மத்திய அரசு முயற்சி செய்கிறது. இது மாநில அரசினுடைய கவனத்திற்கு வந்ததா, இல்லையா என்பதுகூட தெரியவில்லை. அந்த Railway அதிகாரி பேசுகிறார். ஆனால், மாநில அரசின் கவனத்திற்கு வரவேண்டுமா? இல்லையா? ஆகவே, இதுபோன்ற பிரச்சினைகள் எல்லாம் இன்றைக்கு மத்திய அரசு செய்து கொண்டேயிருக்கிறது. மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய இந்தக் கோபம் குறித்து தமிழக மக்கள் மத்தியில் நாங்களும் எடுத்துச் செல்வோம்; நம்முடைய உரிமையை மீட்போம் என்பதனைத் தெரிவித்து அவர்களுக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

***முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆட்சி ஊதாரித்தனமான செலவுகளைச் செய்து, கஜானாவை காலி செய்துவிட்டு செல்லக்கூடிய நிலையிலே, பல்வேறு நலத் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக நிச்சயமாக ஏராளமாக நிதி தேவைப்படுகிறது. அந்த நிதியைப் பெறுவதற்காக நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் டெல்லிக்குச் சென்று பிரதமரைச் சந்தித்து, திட்டக் குழு துணைத் தலைவரையும் சந்தித்து கேட்ட பிறகும்கூட, மத்திய அரசு தமிழக மக்களினுடைய கோரிக்கைக்குச் செவி சாய்க்கவில்லை. எனவே, அனைவரும் ஒன்று சேர்ந்து மத்திய அரசைப் பணிய வைக்க வேண்டும். நமக்குத் தேவையான நிதியைப் பெறுவதற்கு ஆவன செய்ய வேண்டும். அதற்காக மாண்புமிகு முதலமைச்சர் செய்யக்கூடிய அனைத்து காரியங்களிலும் மனிதநேய மக்கள் கட்சி உறுதியாக அவர்களுக்குப் பின்னால் இருக்கும் என்பதைத் தெரிவித்து அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள்.

***திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நியாயமான மனத்தாங்கலை முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே நிதிநிலை அறிக்கையிலே

அவர்கள் பேசும்பொழுது நாங்கள் கேட்ட நிதியை அவர்கள் வழங்கவில்லை, போராடிப் பார்த்திருக்கின்றோம்; கொடுத்த அளவு *2,000* கோடி ரூபாய் அளவிலேதான் தந்திருக்கிறார்கள் என்று சிறப்பாக எடுத்துரைத்திருக்கிறார்கள். ஆகவே, ஒவ்வொரு காலக் கட்டத்திலும் மத்திய அரசு, மாநில அரசைப் புறக்கணித்துத்தான் செயல்பட்டு இருக்கிறது. சென்ற ஆட்சியைத் தவிர, காரணம் அவர்கள் ஒத்துப் போயிருக்கிறார்கள். பலவிதங்களிலே ஒத்துப் போயிருக்கின்ற காரணத்தினால் அவர்கள் உரிமைகளைக்கூட தட்டிக்கேட்காத நிலையில்தான் அவர்கள் ஆட்சிக்கு வந்திருக்கிறார்கள். ஆனால், நமது மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் ஒவ்வொரு காரியத்திலும் அக்கறையோடும், மக்களை மனதில் வைத்துக்கொண்டு தொலைநோக்குப் பார்வையோடும், தொலைநோக்குச் சிந்தனையோடும் *(மேசையைத் தட்டும் ஒலி)* எடுத்துக்கொண்ட பணியில் நாம் சிறப்பாகவும், நம் மக்களுக்குக் கடமைகளை நாம் சிறப்பாகச் செய்யவேண்டுமென்ற உறுதியான எண்ணத்தில், நான் இங்கு ஆங்கிலத்தில் சொல்ல வேண்டுமென்றால், I see the Chief Minister as a Chief Minister with great Administrative quality who gives more importance to governance than politics. ஆக, ஒவ்வொன்றையும் அரசியலாக்க வேண்டுமென்ற எண்ணத்திலே அவர்கள் செயல்படவில்லை. ஆகவே, அவர்கள் கோபத்திற்கும், மனத்தாங்கலுக்கும் சமத்துவ மக்கள் கட்சி, நீங்கள் மத்திய அரசை எதிர்த்து, எப்போது குரல் கொடுத்தாலும் உங்களுக்கு என்றுமே உறுதுணையாக இருப்போம் என்று கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.*

***திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்றையதினம் சட்டமன்றத்திலே இந்த மக்களுக்கு என்னென்ன தேவையோ அத்தனையும் செய்யக் காத்திருக்கிறேன் என்பதை அடித்தளத்திலிருந்து ஒலித்திருக்கிறார். ஆனால், மத்திய அரசு மாநிலத்திற்கு எவ்வளவு இடையூறுகள் செய்கிறது; நிதியாதாரங்களை, அதிகாரங்களைப் பறிக்கிறது என்பதை அழுத்தம் திருத்தமாக இங்கே சொல்லியிருக்கின்றார்கள். அதனடிப்படையில், தமிழகத்திற்காக என்ன முடிவெடுத்தாலும் அகில இந்திய ஃபார்வர்டு பிளாக்



இயக்கம் அவர்களுக்கு உறுதுணையாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.*

*முற்பகல் 11-45*

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு காலத்தில், ‘தெற்கு தேய்கிறது; வடக்கு வாழ்கிறது’ என்ற அடிப்படையில் காங்கிரஸ் கட்சி வடக்கு மாநிலங்களுக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுத்து, தென் மாநிலங்களைப் புறக்கணித்த நேரத்தில்தான் திராவிட இயக்கங்கள் தோன்றி *1967*–க்குப் பிறகு தமிழகத்திலே ஒரு மிகப் பெரிய ஆட்சி மாற்றத்தைக் கொண்டு வந்தோம். இன்று தமிழக முதல்வர் அவர்களுடைய ஆதங்கம், அதாவது இங்கிருந்து டெல்லி சென்று தமிழக மக்களுடைய வாழ்வாதாரங்களைப் பெருக்குவதற்காக, தான் வாதாடியும், போராடியும்கூட போதிய நிதி ஒதுக்கவில்லை. குறைந்தபட்சம் ஏழையெளிய மக்கள் பயன்படுத்தக்கூடிய மண்ணெண்ணெயைக்கூட தேவையான அளவுக்கு மத்திய அரசு கொடுப்பதற்குத் தயாராக இல்லை. எனவே, அப்படிப்பட்ட மத்திய அரசிடத்திலே தமிழக மக்கள் சார்பாக இன்றைய அரசு என்ன கோரிக்கை வைத்தாலும், எத்தகையப் போராட்டத்தை நடத்துவதற்குத் தயாராக இருந்தாலும், புதிய தமிழகம் கட்சி தமிழக முதல்வர் அவர்களுடைய கரத்தை வலுப்படுத்துவதற்கு உற்ற துணையாக நிற்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.*

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மத்திய நிதி ஒதுக்கீட்டில் தமிழகத்திற்குச் சரியான பங்கு கிடைக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி இந்த மாமன்றத்திலே எடுத்து வைத்த கருத்துகளை நாங்கள் வரவேற்கிறோம்; பாராட்டுகிறோம். நம்முடைய முதலமைச்சர் டெல்லிக்குச் செல்லுகிறார் என்றாலே இந்தியத் துணைக் கண்டமே உற்றுப் பார்க்கிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

உலகப் பத்திரிகையாளர்கள் எல்லாம் இந்தியத் தலைநகரிலே குழுமுகிறார்கள். தமிழகத்துக்கு மட்டுமல்ல; இந்தியாவிலே இருக்கிற அனைத்து முதலமைச்சர்களுக்கும் உரிமைகளைப் பெற்றுத் தருகிற போர்க் குரலாக, *(மேசையைத் தட்டும் ஒலி)* நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய குரல்தான் இந்தியத் துணைக் கண்டத்திலேயே எதிரொலிக்கிறது. 69 சதவிகித இட ஒதுக்கீடு இன்றைக்குப் பல்வேறு மாநிலங்களிலும் பேசப்படுகிறதென்றால், அதற்கான ஒரு அடித்தளத்தை அமைத்தவர், அதற்கான உரிமையை நிலைநாட்டியவர் நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்.

அதைப்போலவே, மத்திய நிதி ஒதுக்கீட்டில் மாநிலங்களுக்குத் தகுந்த அளவிற்கு நிதி ஒதுக்கீடு தரவேண்டும் என்பதிலும் இன்றைக்கு அவர்தான் மற்ற முதலமைச்சர்களுக்கும் சேர்த்து உரிமைகளைப் பெற்றுத் தருகிற முதலமைச்சராக விளங்கப் போகிறார். "உறவுக்குக் கை கொடுப்போம், உரிமைக்குக் குரல் கொடுப்போம்" என்பதற்கு இலக்கணமாக நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் திகழ்கிறார். மாநில சுயாட்சி உரிமையை நிலைநாட்டப் போகிற புரட்சித் தலைவி அவர்களுடைய அனைத்து நடவடிக்கைகளுக்கும் நாங்கள் துணை நிற்போம், துணை நிற்போம் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே உறுதிகூறி வரவேற்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்கள். *(குறுக்கீடு)* திரு. தனியரசு அவர்கள். திரு. கலை அரசு அல்ல.

**திரு. உ. தனியரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களுக்கு மிக நெருக்கமாக இருக்கிற அரசு மாநில அரசு. மனிதனுடைய தனிப்பட்ட ஒவ்வொரு தேவையையும் பார்த்துப் பார்த்து, அவர்கள் வேண்டுவதையெல்லாம் தரவேண்டும் என்று நம்முடைய மாண்புமிகு முதல்வர், புரட்சித் தலைவி அம்மா அவர்கள், உறுப்பினர்கள் மாமன்றத்திலே கேட்கின்ற, உறுப்பினர்கள் வேண்டுகிற கோரிக்கைகளை, வைக்கிற கோரிக்கைகளை விட 100 மடங்கு, 1,000 மடங்கு நான் செய்ய விரும்புகிறேன், காத்திருக்கிறேன், ஆசைப்படுகிறேன் என்று அழுத்தம் திருத்தமாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார். மக்களுடைய உணர்வுகளை, ஒரு தாயைவிட 100 மடங்கு மேலாக மக்களை நேசிக்கிற உத்தமத் தலைவி, நம்முடைய தமிழ்நாடு சட்டமன்றத்திற்கு மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு, மாமன்றத்திலே எந்த மானிடனும் மறுதலித்து நிராகரிக்க முடியாத ஒரு நிதிநிலை அறிக்கையை,



அரசினுடைய செயல் திட்டங்களாக மக்களுக்குத் தந்திருக்கிறார். அப்படி உலகம் வியந்து பார்க்கிற அந்த உத்தமத் தலைவியினுடைய உணர்வுகளைப் புரிந்துகொள்ளாமல், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியினுடைய தோழர்கள் கூடுதலாக நிதி வேண்டும், கூடுதலாக நிதி வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதுவும் அம்மா அவர்கள் திரும்பத் திரும்பச் சொன்னார்கள்; நாங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்து இரண்டே மாதங்கள்தான் ஆகிறது; இரண்டு மாதங்களில், அத்தனை துறைகளிலும் கருணாநிதியினுடைய குடும்ப சர்வாதிகார ஆட்சியினுடைய பாசிச முனை மழுங்கி, முடங்கிக் கிடந்த அரசு இயந்திரத்தைச் சரி செய்து, இரண்டு மாதங்களில் அரசு இயந்திரத்தைத் தூய்மைப்படுத்தி, நலத்திட்டங்கள் எல்லாம் மக்களின் வீடு தேடிச் செல்ல இரண்டே மாதங்களில் ஆணை பிறப்பித்து, அமைச்சர் பெருமக்களெல்லாம் உண்ணாமல், உறங்காமல், மாமன்றத்தினுடைய உறுப்பினர் பெருமக்கள் எல்லாம் மக்களுக்கு மிக அருகிலேயே இருந்து நலத் திட்டங்களைக் கொண்டு சேர்க்கின்ற இந்த வேளையிலே மீண்டும் கூடுதலான நிதியை மத்திய அரசு தரவேண்டும்; அப்படித் தந்தால் இன்னும் மக்களினுடைய தேவைகளையெல்லாம் பூர்த்தி செய்ய முடியுமென்று அம்மா அவர்கள் மிகுந்த ஆதங்கத்தோடு சொன்னார்கள்.

*முற்பகல் 11–50*

இந்தியாவிலேயே கூடுதலான வருவாயைத் தருகிற நம்முடைய மாநிலத்தில், வாட் என்கின்ற வரி மட்டும்தான் நமக்குக் கிடைக்கிறது. இதை வைத்துக்கொண்டு இவ்வளவுத் திட்டங்களை, மக்களினுடைய இவ்வளவு கோரிக்கைகளையெல்லாம் எப்படி நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்கள் தயாரித்தார்கள் என்பதே இன்னும் சமூக, அரசியல், நிதித் துறை ஆய்வாளர்களெல்லாம் வியந்து வியந்து ஆய்வு நடத்திக் கொண்டிருக்கின்ற இந்தச் சூழ்நிலையிலே *(மேசையைத் தட்டும் ஒலி)* இன்னமும் மத்திய அரசு, இந்தியாவிலே இருக்கிற மத்திய அரசு, தற்போது நடக்கிற இந்த மன்மோகன் சிங் அரசு, சோனியாவினுடைய அரசு, ராகுலினுடைய அரசு, பிரியங்கா அரசு; அது ஒரு அரசே அல்ல; மக்களுக்கான கட்சியும் அல்ல, காங்கிரஸ் கட்சி. இந்தக் கட்சி ஆட்சி நடத்துகின்ற நிலையை மிக விரைவிலே தமிழ்நாட்டு மக்கள் முற்றிலுமாக நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலிலே நிராகரித்துவிட்ட பிறகும்கூட, மாநில அரசினுடைய 7 கோடி மக்களினுடைய உணர்வுகளை மறுதலிக்கிற காங்கிரஸ் கட்சி, அதனுடைய அரசு, தமிழகத்தினுடைய மக்களினுடைய தேவைகளை, உணர்வுகளைப் புரிந்து கூடுதல் நிதியை ஒதுக்கித் தந்து . . . *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இருங்கள், அவர் சொல்லி முடிக்கட்டும். *(குறுக்கீடுகள்)*

**திரு. உ. தனியரசு:** தமிழ்நாட்டு மக்களினுடைய நல்வாழ்வுத் திட்டங்களுக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் கேட்கின்ற அளவு தொகையைத் தந்து, உதவுவதற்கு தமிழ்நாடு கொங்கு இளைஞர் பேரவை ஒட்டுமொத்த 7 கோடி தமிழ் மக்களும் கரம் கோர்த்து, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பின்பாகக் கரம் கோர்த்து வருவார்கள் *(குறுக்கீடு)* என்பதைப் பதிவு செய்து அமர்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** காங்கிரஸ் கட்சியின் சார்பில் எழுந்து நிற்கிறீர்கள். உங்களில் யார் பேசுகிறீர்கள்? *(குறுக்கீடு)* யாராவது ஒருவர் மட்டும்தான் பேச முடியும். யார் பேசுகீறீர்கள்? *(குறுக்கீடு)* திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.

**திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசைப் பொறுத்தவரையிலே, நமது மரியாதைக்குரிய மாண்புமிகு முதல்வர் அவர்கள் திட்டக் குழுக் கூட்டத்திற்குச் சென்றிருந்தபோது, 23 ஆயிரம் கோடி அளவிற்குக் கடன் கொடுத்தபோதும்கூட, நிதி ஒதுக்கீடு செய்து கொடுத்தபோதும்கூட, அப்பொழுது நம் மரியாதைக்குரிய முதல்வர் அவர்கள் பத்திரிகையாளர்களிடம் தெரிவிக்கும்போது திருப்தியளிப்பதாகத்தான் கூறியிருந்தார்கள். ஆனால், குறைபாடுகள் இருக்கலாம், இல்லையென்று சொல்லவில்லை.

நமது தமிழகத்தைப் பொறுத்தவரையிலே, மத்திய அரசிடம் கேட்பதற்கு முழுமையான உரிமை இருக்கின்றது, நாங்கள் மறுக்கவில்லை. ஆனால், மத்திய அரசு ஏதோ தமிழகத்திற்கு மிகப் பெரிய ஒரு துரோகத்தைச் செய்வதுபோல இங்கு பல்வேறு கட்சி இயக்கத்தைச் சார்ந்த நண்பர்களெல்லாம் பேசிக் கொண்டிருந்தார்கள். இறுதியிலே பேசிய மரியாதைக்குரிய கொங்கு இளைஞர் பேரவையைச் சேர்ந்த நண்பர் அவர்கள், காங்கிரஸ் கட்சி என்பது ஒரு கட்சியே அல்ல என்ற ஒரு வார்த்தையைப் பயன்படுத்தி புண்படுத்துவது என்பது மிகவும் வருத்தத்திற்குரியது.

இந்தியாவிற்காக, சுதந்திரத்திற்காகப் போராடிய இந்த இயக்கத்தைப் பற்றி அவதூறாகப் பேசியதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.



**திரு. உ. தனியரசு:** நான் சுதந்திரத்திற்காகப் போராடிய காங்கிரஸ் கட்சியைச் சொல்லவில்லை. ராகுல் காந்தியினுடைய காங்கிரஸ் கட்சியைச் சொல்கிறேன்.

**திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** தயவுசெய்து, இதுபோன்ற தனிப்பட்ட நபர்களினுடைய விமர்சனத்தைத் தவிர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, நீங்கள் தயவுசெய்து அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது என்ன, அவைக்கு மாறான சொல் இல்லையே, அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்குவதற்கு?

**திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** அதை எதிர்த்து நாங்கள் வெளிநடப்புச் செய்கின்றோம்.

*(பின்னர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் அனைவரும் வெளிநடப்புச் செய்தனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் இவ்வளவு செலவுகள் செய்தபிறகும், நம்முடைய நிதிநிலை அறிக்கையிலே நிதி பொறுப்புடைமைச் சட்டத்திற்கு உட்பட்டுதான் நம்முடைய கடன் இருக்கிறது என்கிற தகவலும் அதற்குள்ளேயிருக்கிறது. இன்றைக்குப் பல மாநிலங்கள் அதைக் கடந்திருக்கின்றன. ஆகவே, நமது கடன் அளவு, பொறுப்புடைமைச் சட்டத்திற்குக் கீழேயிருக்கிற காரணத்தினால், சற்றுக் கடனைக்கூட நாம் கூடுதலாக வாங்கிக் கொள்ளலாம். G.D.P–இல் 3 சதவீதத்திற்குக் கீழேதான் கடன் இருக்கிறது. கடன் வாங்கி கள்தான் குடிக்கக் கூடாது; கடன் வாங்கித் தொழில் நடத்தலாம்; கடன் வாங்கி வேறு காரியங்கள் செய்யலாம்.

நம்முடைய அரசைப் பொறுத்தவரையிலே, அதைச் செய்தால் பொறுப்பாகச் செய்ய முடியும் என்கிற முறையிலே நான் எதையும் இப்பொழுது வலியுறுத்தவில்லை. முதல்வர் அவர்கள் பேசியபிறகு, இன்னும் சில விஷயங்கள் இருக்கின்றன. இன்னும் கொஞ்சம் கொடுத்தால் பரவாயில்லை என்று நினைத்தேன். கேட்கலாமா, வேண்டாமா என்று யோசிக்கிற நிலையிலேதான் இப்பொழுது முதல்வர் பேசியிருக்கிறார். மத்திய அரசாங்கத்தின் அணுகுமுறைப் போக்கும் அப்படித்தான் இருக்கிறது. நான் சொல்ல வேண்டிய சில விஷயங்களைச் சொல்லி விடைபெற விரும்புகிறேன்.

ஆயிரம் ரூபாய் பென்ஷன் வழங்கக்கூடிய அத்தனை இனத்தவர்களுக்கும் இப்பொழுது வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ளவர்களுக்கு மட்டும்தான் என்கிற ஒரு விதி அமல் செய்யப்படுவதாக, அதன் மூலமாக நிராகரிக்கப்படுவதாகச் சொல்கிறார்கள். நம்முடைய நிதிநிலை அறிக்கையிலே பத்தி 107இல் வறுமைக்கோடு என்கிற ஒரு வகை, புது வாழ்வுத் திட்டம், சுவர்ண ஜெயந்தி திட்டம், இவற்றால் பயனடையக்கூடிய வறுமைக் கோட்டிற்குக்கீழ் இருப்பவர்கள் இத்தனை இலட்சம் பேர் என்றெல்லாம் விவரம் இருக்கிறது. ஒருவேளை அந்த விவரப்படி, வறுமைக் கோட்டுக்குக்கீழே இருப்பவர்கள் என்கிற முறையிலே, அதிகாரிகள் ஏதாவது தவறாக அதைப் பயன்படுத்துகிறார்களா என்று பார்த்து, தெளிவான அரசாணையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டால் இந்த pension என்பது புதியவர்களுக்கு உரிய வகையிலே கிடைப்பதற்கு வழி இருக்கும் என்று நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். பட்டியல்...

*முற்பகல் 11–55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைக்கு முன்தினமே, மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தெளிவாக வறுமைக்கோடு என்பது மத்திய அரசால் நிர்ணயிக்கப்பட்டது; தமிழக அரசால் எடுக்கப்பட்டதில்லை என்று சொல்லியிருக்கின்றார்கள். அதுமட்டுமல்லாமல், ஓய்வூதியத் திட்டத்தைப் பொறுத்தவரை, மத்திய அரசு கொடுப்பது வெறும் 200 ரூபாய்தான்; மாநில அரசு மேலும் 800 ரூபாயைச் சேர்த்து, ரூ.1,000/– ஆகக் கொடுக்கின்றது என்று மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டு இருக்கிறார்கள் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். இப்பொழுது இருக்கிற நிதிநிலைக்கேற்ப மாண்புமிகு அம்மா அவர்கள் ரூ.1,000/– அறிவித்து, அதில் தகுதியான நபர்கள் யார், யார் விடுபட்டிருக்கின்றார்களோ, அவர்களுக்கு நிச்சயமாக வழங்க வேண்டுமென்று ஆணையிட்டிருக்கின்றார்கள்.*

*இப்பொழுது, மத்திய அரசு ஓய்வூதியம் பெறும் வயதை 65இலிருந்து 60ஆகக் குறைத்திருக்கிறது. தமிழகத்தில் 60 வயதிற்குள் 5,36,000 பேர் வருகின்றார்கள். ஒருவருக்கு ரூ.800/– என்று வருகின்றபோது, ரூ.541 கோடி கூடுதல் நிதிச் சுமை ஏற்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.*

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட எந்த விஷயத்தையும் சொல்லவில்லை; எந்தக் குறையையும் சொல்லவில்லை; நீங்கள் நிதி ஒதுக்கவில்லை என்றும் நான் சொல்லவில்லை. நம்முடைய நிதிநிலை அறிக்கையிலே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் வறுமைக்கோடு குறித்த கணக்கெடுப்பை மத்திய அரசாங்கம்தான் செய்திருக்கிறது என்கிற தகவலையும் சொன்னார்கள். அது மிகுந்த மகிழ்ச்சியை எங்களுக்கு அளித்தது. நம்முடைய நிதிநிலை அறிக்கையிலே பத்தி 107–லே இருக்கக்கூடிய அடிப்படையிலே, அதை யாராவது தவறாகப் பயன்படுத்திவிடக் கூடாது என்கிற அடிப்படையிலே, தெளிவான ஒரு ஆணையைப் பிறப்பித்து, அனைவருக்கும் உதவி கிடைக்கச் செய்ய வேண்டுமென்ற ஒன்றைத்தான் நான் குறிப்பிட்டேன்.

என்னுடைய தொகுதி குறித்த இரண்டு விஷயங்களை மட்டும் நான் சுருக்கமாகச் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர், உரையை முடியுங்கள்.*

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டியல் இனத்தவர்களுக்கு நாம் ஒதுக்கியிருக்கக்கூடிய சிறப்பு உட்கூறு நிதி ரூ.5,007 கோடி ஆகும். ஏற்கெனவே இருந்த அரசு 'உழக்கில் எண்ணெய் அளிக்கிற மாதிரி', அது விளிம்பைத் தாண்டி அதற்கு மேலே வராது. அப்படி 19 சதவிகிதம் என்ற அளவுக்குக்கூட கடைசி நேரத்தில்தான் சென்ற ஆண்டுதான் கொடுத்தார்கள். இந்த ஆண்டு நாம் 'படியிலே அரிசியை அளப்பதைப்போல' குவித்துக் குவித்து அளந்து அந்தப் பணத்தைக் கொடுத்திருக்கிறோம்.

அந்தப் பகுதியிலே இருக்கிற மக்கள் எங்களுக்குத் தனியாக, குறிப்பாக செயல்படுத்தக்கூடிய திட்டங்களுக்கு இந்தப் பணம் செலவு ஆகவேண்டுமென்று கேட்கிறார்கள். அவர்களுக்கு அப்படி அது செலவழிக்கப்படுமானால் மிக உதவியாக இருக்கும். பொதுவான திட்டங்களிலே அவர்களுக்காக இவ்வளவு ஆகியிருக்கும் என்கிற வகையிலே கணக்கிடப்படுவதாக எல்லாம் அவர்கள் சொல்கிறார்கள். எனக்கு உண்மை நிலை தெரியவில்லை. Divisible, indivisible என்றெல்லாம் சொல்கிறார்கள். ஆகவே அதை நாம் சற்றுச் சரியாகப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு அணு வல்லரசெல்லாம், கடன் வல்லரசாக மாறி இருக்கிற இந்தக் காலத்தில், நிதி பொறுப்புடைமைச் சட்டத்திற்கு உள்ளிட்டு, இந்த நிதித் திட்டத்தைத் தீட்டி, சிறப்பான பல்வேறு திட்டங்களையும் நாம் அறிவித்திருக்கிறோம். இவையெல்லாம் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட அரசு ஊழியர்கள், அதிகாரிகள், அரசுக்கு ஒத்துழைத்து, இத்திட்டங்கள் மக்களைச் சென்றடைய உதவ வேண்டுமென்ற என் வேண்டுகோளை வைக்கின்றேன்.

எனது தொகுதிக்கு உள்ளிட்ட பகுதிகளிலே இரண்டு விஷயங்கள். ஒன்று திடக்கழிவு மேலாண்மை. மாண்புமிகு முதல்வர் அவர்கள் பெருங்குடி மற்றும் கொடுங்கையூர் பகுதிகளிலே இருக்கக்கூடிய திடக்கழிவுப் பிரிவுகளுக்கு நேரடியாகச் சென்று பார்த்து, இந்த அவையிலே ஒரு அறிக்கையையும் சமர்ப்பித்திருக்கிறார்கள். அதற்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அங்கிருக்கக்கூடிய மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள நிலையிலேயிருந்து நாம் மீண்டுவிட்டோம் என்று இப்பொழுது மகிழ்ச்சி அடைந்திருக்கிறார்கள் என்பதையும் நான் நன்றியுடன் அவர்களுக்குத் தெரிவித்து, அவற்றைச் செயல்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அங்கு இருக்கிற கால்வாய்களைத் தூர்வாரி அங்கு இருக்கிற ஆகாயத் தாமரையை அகற்றி, desilting வேலையை முறையாகச் செய்து முடித்தால்தான் மழைக் காலத்திலே என் தொகுதியிலே இருக்கிற மக்கள் நிம்மதியாக இருக்கமுடியும். அதை செய்யாவிட்டால், அடுத்த இரண்டு மாதத்திற்குள் முத்தமிழ் நகர், கொடுங்கையூர் போன்ற பகுதிகளில் 2 இலட்சம் மக்கள் இடுப்புத் தண்ணீரில் வாழ்கிற நிலைமை ஏற்பட்டுவிடும் என்ற ஓர் அபாயம் இருக்கிறது. ஆகவே, அரசு உடனடியாகத் தலையிட்டு, அந்த கேப்டன் காட்டன் கால்வாய், வியாசர்பாடி கால்வாய், கொடுங்கையூர் கால்வாய் ஆகிய கால்வாய்களில் இருக்கும் சிறு வேலைகளை



நிறைவேற்றுவதற்கு உதவவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த அரிய வாய்ப்பைத் தந்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைக் கூறி முடிக்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்வாய்களைத் தூர் வாருவதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டு, அதற்கான ஆயத்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

***திரு. விஜயகாந்த்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011–2012 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை விவாதத்தில் பங்குபெறுவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். ஏழை, நடுத்தர மக்களை வாழ வைக்கிற பல செயல் திட்டங்களை இந்த நிதிநிலை அறிக்கை உள்ளடக்கியுள்ளது. உதாரணத்திற்கு, ஏழைகளுக்கு இலவச அரிசி வழங்குவது, ஏழைப் பெண்களுக்குத் திருமண உதவி, முதியோர் உதவித் தொகை அதிகரிப்பு... இலவச கறவை மாடுகள், ஆடுகள் வழங்கும் திட்டம், மாணவர்களுக்கு இலவச மடிக் கணினி வழங்கும் திட்டம், இலவச வேட்டி-சேலை வழங்கும் திட்டம், ஏழைக் குடும்பங்களுக்கு மின் விசிறி, மிக்சி, கிரைண்டர் வழங்கும் திட்டம் போன்றவை உட்பட இந்த அரசின்மூலம் பலவகை மக்களுக்கும் சுமார் 50 இலவசத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நண்பகல் 12–00

சமுதாயத்தில் நலிந்த பிரிவினருக்கு இலவசத் திட்டங்கள் அவசியம். குறிப்பாக வயோதிகர்களாக உள்ளவர்கள், நோய்வாய்ப்பட்டவர்கள், உழைக்க இயலாத மாற்றுத் திறனாளிகள், பிறக்கின்ற குழந்தைகள், பேறுகாலத் தாய்மார்கள் என்று பலவகையினர் இயற்கையாக உழைக்க முடியாத சூழ்நிலையில் உள்ளனர். ஓர் அரசு அவர்களைக் கருத்தில் கொண்டு உதவி செய்ய வேண்டியது அவசியமாகும். இந்த அரசு அத்தகையோருக்குப் புதிய உதவிகளைத் தந்தும், ஏற்கெனவே வழங்கப்பட்ட உதவித்

தொகையினை அதிகரித்தும் இந்த நிதிநிலை அறிக்கையில் திட்டம் தீட்டியுள்ளது. இந்த நிதிநிலை அறிக்கையில் திட்டங்கள் எதுவும் இல்லை என்று கூறுவோர், கண்ணிருந்தும் பார்க்க மறுக்கும் கருத்துக் குருடர்களே ஆவர். (மேசையைத் தட்டும் ஒலி) கலைஞர் மொழியில் சொல்லப்போனால் கண்ணை மூடிக்கொண்டு இந்த நிதிநிலை அறிக்கையைப் பாராட்டி மகிழலாம். அந்த அளவிற்கு ஏராளமான சலுகைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

ஏழைகளை வாழ்விக்க இரண்டு வகையில் திட்டங்களைத் தீட்டலாம். ஒன்று, அவர்கள் வருமானத்தைப் பெருக்குவது; மற்றொன்று அரசு மானியத் தொகை வழங்குவதன்மூலம் அவர்கள் செய்யும் செலவுகளைக் குறைப்பது. இந்த அரசு அளித்துள்ள சலுகைகள் ஏழை, நடுத்தர மக்களின் வாழ்க்கைச் செலவைக் குறைக்கும் வகையிலும், அதே நேரத்தில் வருமானத்தைப் பெருக்கும் வகையிலும் அமைந்துள்ளது. விலைவாசி உயர்ந்துவரும் இந்தக் காலக்கட்டத்தில் ஏழை, நடுத்தர மக்களை விலைவாசி உயர்வின் தாக்கத்தில் இருந்து வெகுவாக மீட்பதற்கு இந்தத் திட்டங்கள் உதவும். சுமார் 8,900 கோடி ரூபாய் அளவிற்குப் புதிய திட்டங்களும், புதிய சலுகைகளும் அளிக்கப்பட்டுள்ளன என்றால், அது சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள மக்களின் வாழ்கைத் தரத்தை உயர்த்துவதற்காகவே.

வறுமை ஒழிப்புத் திட்டங்களைச் செயல்படுத்தும்போது, பொதுவாக அவற்றில் மூன்று குறைபாடுகள் காணப்படுகின்றன. ஒன்று, போதுமான அளவு நிதியொதுக்கம் இல்லாதது. முதியோர்கள், ஏழைத் தாய்மார்கள், விதவைகள், கணவரால் கைவிடப்பட்ட பெண்கள், மாற்றுத் திறனாளிகள் போன்றோர் ஓய்வூதிய மனுக்களை வருவாய்த் துறையினரிடம் தருகிறபொழுது போதுமான நிதியொதுக்கம் செய்யப்படவில்லையென்று சொல்லப்படுகிறது. இது உண்மையாய் இருப்பின், கடந்தகால ஆட்சியில் இந்த நிலைமை ஏற்பட்டிருந்தால், அதை மாற்றியமைத்து இத்தகைய ஒதுக்கீட்டிற்கு முன்னுரிமை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டாவது, ஏழைகளை அடையாளம் காண்பதில் ஏற்படும் குறைபாடுகள் களையப்பட வேண்டும். பயனாளிகளைக் கண்டறிவதற்கு அங்க அடையாள அடிப்படையில் அட்டையை வழங்கி அதன் அடிப்படையிலான 'ஆதார்' திட்டத்தை இந்த அரசு செயல்படுத்தும் முயற்சி வரவேற்கத்தக்கது. இந்தத் திட்டத்தின் செயல்பாடு, இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் கடந்தகால ஆட்சியின் காரணமாக மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கிறது. ஒவ்வொரு நாளும் இந்தியா முழுவதும் 5 இலட்சம் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன. தமிழகத்தில் 'ஆதார்' திட்டத்திற்கான அடையாள அட்டைகள் வழங்குதல் துவக்கப்படவே இல்லை. இந்தக் குறைபாட்டை இந்த அரசு நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



மூன்றாவது, இத்திட்டங்களை நிறைவேற்றுகிறபோது அதிகார வர்க்கத்தினர் இலஞ்ச ஊழலில் ஈடுபடுவது தவிர்க்கப்பட வேண்டும். "ஒரு ரூபாய் ஏழைகளுக்கு உதவி" என்று திட்டம் வகுத்தால், உண்மையில் ஏழைகளுக்குச் சென்று சேர்வது 15 காசுகள்தான் என்று முன்னாள் பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தியே வேதனைப்பட்டுள்ளார். ஆகவே, தவறு செய்யும் அதிகாரிகள்மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதன் மூலமே ஏழைகளுக்காக வகுக்கப்பட்ட திட்டங்களின் நன்மை ஏழைகளைச் சென்றடையும்.

ஏழைகள் நலம் பெற வேண்டுமென எண்ணுகின்ற இந்த அரசு, இந்த மூன்று குறைபாடுகளும் இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டைப் பொறுத்தவரை வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள பயனாளிகளின் பட்டியல் இதுவரை தயாரிக்கப்படவில்லை என்று இந்த மன்றத்தில் அறிவித்தார். பல நலத் திட்டங்கள் வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ளவர்களுக்குச் சென்றடைய வேண்டியுள்ளதால் அதற்கான பட்டியலையும் தமிழ்நாடு அரசு விரைவில் தயாரித்திடக் கேட்டுக்கொள்கிறேன்.

ஏழைகளே இல்லாத மாநிலம் தமிழ்நாடு என்ற நிலையை எய்துவதுதான் நமது குறிக்கோளாக இருக்க வேண்டும். அந்த அடிப்படையில் உண்மையான ஏழைகளின் குடும்பங்களைக் கணக்கெடுக்கவும், இந்த வரவு-செலவுத் திட்டத்தில் குறிப்பிட்டுள்ளதைப்போல வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள ஒவ்வொரு குடும்பமும் நேரடியாகப் பயன்பெறும் வகையில் வறுமை ஒழிப்புத் திட்டத்தைச் செயல்படுத்தவும், அக்குடும்பங்களின் சமூகப் பொருளாதார முன்னேற்றங்கள் கண்காணிக்கப்பட்டு, அவர்கள் வறுமையில் இருந்து விடுபடும்வரை அவர்களுக்குத் தேவையான உதவிகள் செய்வதையும் இந்த அரசு முன்னுரிமையாகக் கொண்டுள்ளதை வரவேற்கிறேன். உழைக்கத் தகுதியுள்ளவர்களுக்கு உழைப்பதற்கேற்ற வாய்ப்பு உருவாக்குவதன்

மூலமே வறுமையை நிரந்தரமாகப் போக்கமுடியும். தமிழ்நாட்டில் 68 இலட்சம் இளைஞர்கள் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் வேலைக்காகப் பதிவு செய்துள்ளார்கள் என்று நிதிநிலை அறிக்கை கூறுகிறது.

*பிற்பகல் 12–05*

2015 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் 130 இலட்சம் முதல் 150 இலட்சம் வரை திறமைமிக்க பணியாளர்களுக்கான கூடுதல் தேவைகள் ஏற்படுமென்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தத் தேவையை ஈடுசெய்யும்வகையில் இளைஞர்களுக்குத் தொழில் திறனை அளிக்க வேண்டியது அவசியமாகும். பல்வேறு துறைகளிலும் திறமைகளை வளர்ப்பதற்கு 'தமிழ்நாடு திறன் மேம்பாட்டு இயக்கம்' மூலமாக உகந்த பயிற்சியை மேற்கொள்ளும் முயற்சி வரவேற்கத்தக்கதாகும். தற்போது தமிழ்நாட்டில் அரசு மற்றும் அரசு உதவிபெறும் கலை, அறிவியல் கல்லூரிகள் ஏராளமாக உள்ளன. இந்தக் கல்லூரிகளில் தொழிற்பயிற்சி வழங்குவதற்கான வாய்ப்புகளை உருவாக்குவதன்மூலம் இளைஞர்களே தொழில் திறனை வளர்த்துக்கொள்ள முடியும். இந்த ஆண்டு ஒன்றரை இலட்சம் பணியாளர்கள் பயன்பெறத்தக்க வகையில் இந்த முயற்சி மேற்கொள்ளப்படுமென்று நிதிநிலை அறிக்கை கூறுகிறது. வருங்காலத் தேவையை எண்ணுகிறபொழுது, இது மிகவும் குறைவாகும். இதில் பெருமளவிற்கு முதலீடு செய்து வேலைவாய்ப்பைப் பெற தகுதியுடையவர்களாக அனைத்து இளைஞர்களையும் உருவாக்க ஒரு சிறப்புத் திட்டம் வகுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆண்டொன்றுக்கு தமிழகத்தில் குறைந்தது 7 இலட்சம் இளைஞர்கள் புதிதாக வேலைவாய்ப்பைத் தேடி வருகிறார்கள். இதில் பட்டப் படிப்பு பெற்றவர்களின் எண்ணிக்கை 2 இலட்சத்திற்கும் மேல் இருக்கும். ஆகவே, வேலை தேடுவோர் எண்ணிக்கை நாள்தோறும் வளர்ந்து வருகிறது. ஆனால், வேலைவாய்ப்போ குறைந்து வருகிறது. கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில் தொழிற் கொள்கை அறிவித்து, நான்காண்டுகளில் 20 இலட்சம் பேருக்கு வேலை கிடைக்கும் என்றார்கள். ஆனால், கடந்த ஆட்சிக் காலத்தில் ஏற்கெனவே தொகுப்பூதியம் பெற்ற 3 இலட்சம் அரசு ஊழியர்களைக் காலமுறை ஊதியம்பெறும் அரசு ஊழியர்களாக்கியும், தற்காலிகமாகப் பணியாற்றியவர்களை அரசின் நிரந்தரப் பணியாளர்களாக மாற்றியும், 4 இலட்சத்து 60 ஆயிரம் பேருக்கு மட்டுமே வேலை தந்ததாக விளம்பரப்படுத்தினார்கள்.



தமிழ்நாட்டில் மொத்த உற்பத்தி மதிப்பில் ஒரு சதவிகிதம் அதிகரித்தால் 35,000 பேர் கூடுதலாக வேலை பெறுவார்கள் என்று பொருளாதார நிபுணர்கள் கணக்கிடுகின்றனர். கடந்த தி.மு.க. ஆட்சியில் 9 சதவிகிதம் பொருளாதார வளர்ச்சி என்று திட்டமிட்டு, 7.8 சதவிகிதம்தான் வளர்ச்சி கண்டனர். ஆகவே, வேலைவாய்ப்புப் பெருகுவதற்கு பதில், குறைந்தது என்பதே உண்மை. இதை உணர்ந்து இந்த அரசு பொருளாதார வளர்ச்சியை 10 சதவிகிதத்திற்கும் மேலாகக் கொண்டுவர திட்டமிட்டிருப்பது, வேலைவாய்ப்பு பெருக வழிவகை செய்யும். ஆகவே, எக்காரணத்தைக் கொண்டும் வளர்ச்சி விகிதம் குறையாமல் இருக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொருளாதார வளர்ச்சியில் மிகவும் அக்கறை செலுத்தவேண்டிய பகுதி வேளாண்மைத் துறையாகும். விவசாயிகளை ஊக்குவிப்பதன்மூலமே வேளாண்மை உற்பத்தியைப் பெருக்க முடியும். இன்றைய நிலையில் விவசாயம் ஒரு நலிந்த தொழிலாக ஆகிவிட்டது. இதுவரை விவசாயம் செய்துவந்த வீட்டுப் பிள்ளைகள்கூட வேலை தேடி நகர்ப்புறங்களை நாடுகின்றனர். அதேபோன்று, விவசாயத் தொழிலாளர்களாக உள்ளவர்கள் வேறு வழியில்லாமல் நகர்ப்புறங்களில் கட்டடத் தொழிலாளர்களாகவும், அமைப்புச்சாரா தொழிலாளர்களாகவும் மாறிவருகின்றனர்.

தமிழ்நாட்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்தியாவிலேயே நகர்ப்புற வளர்ச்சி விகிதம் தமிழ்நாட்டில் அதிகரித்திருப்பதற்கு முக்கியமான காரணம், கிராமப்புறங்களிலுள்ள வறுமையும், விவசாயத் தொழிலில் ஏற்பட்டுவரும் தொடர் இழப்பும்தான். இதை உணர்ந்து விவசாயிகளுக்கு விதை மானியம், உரம், பூச்சிக்கொல்லி மருந்து ஆகியவற்றிற்கு விற்பனை வரி விலக்கு, வட்டியில்லாத பயிர்க் கடன், நுண்ணீர் பாசனத்திற்கு சலுகை, வேளாண் எந்திரங்கள் மற்றும் கருவிகள் வாங்க நிதியுதவி, உணவைப் பதப்படுத்தும் தொழிலுக்கு மூலதனப் பங்கு என்பவை போன்ற பல திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. இவற்றை வரவேற்கின்ற அதேநேரத்தில், விவசாயிகள் தாங்கள் பயிரிடும் விளைபொருட்களுக்கு ஓர் உத்தரவாதமான விலை கிடைக்கச் செய்வது, அரசின் முக்கிய கடமையாகும். அப்பொழுதுதான் விவசாயிகள் நம்பிக்கையோடு பயிரிட முற்படுவார்கள். முக்கியமான விளைபொருள்களுக்கு உத்தரவாதமான விலை கிடைக்கச் செய்ய, மத்திய அரசின் உதவியோடு, விலை உத்தரவாதக் கொள்கை

வகுப்பதற்கு மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றும்கூட மிகவும் முன்னேறிய அமெரிக்கா, ஜப்பான், பிரான்ஸ், ஜெர்மனி, இங்கிலாந்து போன்ற நாடுகளில்கூட விவசாயிகளுக்குத் தரப்படும் மானியத்தைக் குறைக்க உலக வணிக நிறுவனம் வற்புறுத்தியும்கூட அவர்கள் மறுக்கின்றனர் என்பது கவனிக்கத்தக்கதாகும். வேறு எந்தப் பொருள்கள் உற்பத்தி செய்யாவிட்டாலும் சகித்துக்கொள்ள முடியும். ஆனால், உணவு உற்பத்தியில் தன்னிறைவு எட்டாத நாடு தனது பாதுகாப்பை இழக்க வேண்டிவரும் என்பதுதான் வரலாறு.

*பிற்பகல் 12–10*

சமுதாயத்தில் சரி பாதி தொகையினர் மகளிர் ஆவர். அவர்களுடைய பங்களிப்பு சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கு மிகவும் முக்கியமானது. இதைக் கருதி, மகளிர் மேம்பாட்டிற்கெனப் பல திட்டங்கள் இந்த நிதிநிலை அறிக்கையில் உருவாக்கப்பட்டுள்ளன.

ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த பெண்களுக்கு தாலிக்கு அரை பவுன் தங்கமும், திருமண உதவித் தொகையாக *25,000* ரூபாயும் தரப்படுகிறது. அவர்கள் டிப்ளமோ அல்லது டிகிரி முடித்திருந்தால், இந்த உதவித் தொகை *50,000* ரூபாயாக வழங்கப்படுகிறது. இது ஒருவகையில் பெண்கள் மேலும் படிப்பதற்கு ஊக்குவிக்கும் திட்டமாக உள்ளது.

*2011* ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்குப்படி ஆயிரம் ஆண் குழந்தைகளுக்கு *946* பெண்கள் என்று பாலின விகிதம் குறைந்து வருகிறது. ஆண், பெண் குழந்தைகள் விகிதத்தில், பெண் குழந்தைகள் பிறப்பு குறைந்து வருவதைத் தடுக்க வேண்டியது ஓர் அரசின் கடமையாகும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

தற்பொழுது ஒரு பெண் குழந்தையோடு பெற்றோர் கருத்தடை செய்துகொண்டால் அந்தப் பெண் குழந்தைக்கு *50,000* ரூபாயும், இரண்டு பெண் குழந்தைகளோடு பெற்றோர் கருத்தடை செய்துகொண்டால், தலா ஒரு பெண் குழந்தைக்கு *25,000* ரூபாய் வைப்புத் தொகையாக முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் உதவி அளிக்கப்படுகிறது.

*2009* ஆம் ஆண்டு, 'பெண்கள் நாட்டின் கண்கள்' என்ற ஒரு திட்டத்தை நான் என் சொந்த செலவில் செயல்படுத்தினேன்.



அதன்படி, ஒரு பெண் குழந்தை பிறந்தால், ரூ.*10,000* வைப்புத் தொகையாக எல்.ஐ.சி. நடத்திய Market Plus என்ற திட்டத்தில் முதலீடு செய்ததால், அப்பெண் குழந்தைகள் வளர்ந்து திருமண வயதை எட்டுகின்றபோது சுமார் இரண்டு இலட்சம் ரூபாய் அளவுக்கு உதவி கிடைக்கும். அதைக் கொண்டு திருமணச் செலவுக்கோ அல்லது மேல் படிப்புக்கோ அந்த உதவித் தொகையைப் பயன்படுத்திக்கொள்ள முடியும். தற்பொழுது அந்தத் திட்டம் எல்.ஐ.சி.–யில் இல்லை என்றாலும், புதிதாக Endowment Plus என்ற ஒரு திட்டம் உள்ளது. அதில் காப்பீட்டுத் தொகையாக ரூ.*30,000* போட்டால் *18* ஆண்டுகளில் *3* இலட்சம் ரூபாய் கிடைக்கும். இந்தத் திட்டத்தையும் மேற்கூறிய திட்டத்தோடு அரசு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

தற்போதைய சமுதாய அமைப்பு, பெண்கள், ஆண்கள் இனத்தைச் சார்ந்தே வாழவேண்டிய நிலையில் உள்ளது. அவர்களுடைய அறிவு, ஆற்றல், உழைப்பு, உணர்வு ஆகியவற்றுக்குப் போதுமான வடிவம் கிடைப்பதில்லை. இந்நிலையை மாற்றி பெண்களும் சம உரிமைகளோடு வாழ வேண்டும் என்கின்ற உயர்ந்த குறிக்கோளோடு கொண்டுவரப்பட்ட திட்டங்களில் சுய உதவிக் குழுக்கள் முக்கியமான பங்கு வகிக்கின்றன. *1992* ஆம் ஆண்டு இன்றைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சுய உதவிக் குழுக்களை மேம்படுத்த ஒரு சிறப்புப் பயிற்சி முகாம் நடத்தினார்கள். மூன்று நாட்கள் நடந்த அந்தப் பயிற்சி முகாமில் அரசுச் செயலாளர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள், மாவட்ட திட்ட அலுவலர்கள், மாநில அளவிலான இந்தியன் வங்கி அதிகாரிகள் மற்றும் தொண்டு நிறுவன இயக்குநர்கள் கலந்துகொண்டு சில முக்கிய முடிவுகளை மேற்கொண்டனர்.

அதில் ஒன்று, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின் பணிகளாக, திட்டத்தை மேலாண்மை செய்வது, திட்டத்திற்கான நிதியுதவி அளிப்பது, பல்வேறு வளர்ச்சித் துறைகளைச் சேர்ந்த வல்லுநர்களைக் கொண்டு தொழில்நுட்பப் பயிற்சி அளிப்பது ஆகிய பணிகளாகும். இந்தியன் வங்கியின் பணிகளாக, கடனுதவி வழங்குவது, வழங்கிய கடன் சரியாகப் பயன்படுத்தப்படுகிறதா என்பதைக் கண்காணிப்பது, தொண்டு நிறுவனங்களின் பணிகளாக, கிராமப்புறத்தில் சரியான பயனாளிகளைத் தேர்வு செய்வது, மகளிர் குழுக்களாக உருவாக்குவது, குழுக்களுக்கு மூன்று வகையான பயிற்சிகளான மனநிலை மாற்றத்திற்கான பயிற்சி, திட்டத்தை முறைப்படுத்துவதற்கான பயிற்சி மற்றும் தொழில் மேலாண் திறன்

பயிற்சி ஆகிய பயிற்சிகளை அளிப்பது, வங்கிகளில் குழுக்களுக்குக் கடன் வசதிக்கு ஏற்பாடு செய்வது, குழுக்களின் செயல்பாடுகளைக் கண்காணிப்பது ஆகிய பணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

இந்தத் தெளிவான அணுகுமுறையால், மகளிர் சுய உதவிக் குழுக்கள் பெண்களிடையே புதிய எழுச்சியையும், வங்கிக் கடனை முழுமையாகத் திரும்பச் செலுத்தும் மனநிலையையும் உருவாக்கி சிறப்பாகச் செயல்பட்டது. தொண்டு நிறுவனங்களை ஈடுபடுத்தியும், பயனாளிகளுக்குத் தொடர் பயிற்சி தந்தும், நிருவாகத்தில் சிக்கனமாகவும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் செயல்பட்டன. எவ்வித அரசியல் கலப்படமும் அப்பொழுது இல்லை. பெண்கள் ஆற்றல் பெற்றவர்களாக மாறவேண்டும் என்ற நோக்கத்தோடு ஆரம்பிக்கப்பட்ட இந்த மகளிர் குழுக்கள் தி.மு.க. அரசால் கடந்த ஐந்து ஆண்டுகளில் சீர்குலைந்துள்ளன.

*பிற்பகல் 12–15*

குழுக்களைக் கண்காணிக்கும் பணி, தொண்டு நிறுவனங்களிடமிருந்து பறிக்கப்பட்டு, சமூக நலத் துறையிலிருந்து ஊரக வளர்ச்சித் துறைக்கு மாறி, வட்டார வளர்ச்சி அலுவலர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதால், இன்றையதினம் எதற்கெடுத்தாலும் வட்டார வளர்ச்சி அலுவலர்களிடம் குழுக்கள் சென்று நிற்கவேண்டிய நிலையில் உள்ளன. குழுக்கள்மூலம் கொடுக்கப்படும் கடன், அனைத்து உறுப்பினர்களுக்கும் கிடைப்பதில்லை. குழுக்களின் கணக்குகளும் தணிக்கை செய்யப்படுவதில்லை. ஏற்கெனவே அறிமுகப்படுத்திய தொழில் முனைவோர் பயிற்சியை நிறுத்தியதோடு, பயனாளிகளையே பயிற்சியாளர்களாகக் கொண்டு தரமற்ற பயிற்சிகளை, கடந்த தி.மு.க. ஆட்சியில் தருவதற்கு ஏற்பாடு செய்தனர்.

பஞ்சாயத்து அளவிலான கூட்டமைப்புகளில் மறைமுகமாக அரசியலைப் புகுத்தி மகளிர் சுய உதவிக் குழுக்களை அரசியல் நோக்கத்திற்குப் பயன்படுத்தினர். இடைஞ்சலாக இருந்த தொண்டு நிறுவனங்களை நிதி உதவியைக் குறைத்து மறைமுகமாக ஓரங்கட்டிவிட்டனர். இதன்மூலம் தொண்டு நிறுவனங்களின் மூலமாகப் பணியாற்றி வந்த 15,000-க்கும் மேற்பட்ட பணியாளர்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர். மகளிர் குழுக்களின் நோக்கமான சமூக முன்னேற்றத்தையே மறக்கடிக்கச் செய்ததோடு, நிருவாகச் சீர்கேடும், நிதி முறைகேடுகளும், அரசியலில் தலையீடுகளும் என்று பல பிரச்சினைகளால் இன்று ஒரு குழப்பமான நிலை ஏற்பட்டுள்ளது.



சுமார் ஒரு கோடி பெண்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களை உள்ளடக்கிய ஐந்து இலட்சம் மகளிர் குழுக்கள் இன்று நிலை தடுமாறிக் கொண்டிருக்கின்றன. மகளிர் நலனை முன்னுரிமையாகக் கருதும் இந்த அரசுக்கு, பெண்களின் சக்தியை வலுப்படுத்தவும், வறுமையை ஒழித்திடவும், சீரமைப்புப் பணிகளை மேற்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

ஆகவே, மகளிர் சுய உதவிக் குழுக்கள் பற்றிய சரியான கணக்கெடுப்பு நடத்தப்பட்டு புள்ளிவிவரங்கள் சேகரிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், கடந்த ஆட்சியில் வேண்டுமென்றே அரசியல் காரணங்களுக்காக, அன்றைய துணை முதலமைச்சராக இருந்த மு.க. ஸ்டாலின் அவர்களின் உள்ளாட்சித் துறைக்கு, சமூக நலத் துறையில் இருந்து வந்த சுய உதவிக் குழுக்கள் பிரித்து தரப்பட்டன என்பதை நாடறியும். ஆகவே, மீண்டும் பழையபடி சமூக நலத் துறைக்கே மாற்றுவதற்கும், இந்த அரசு பரிசீலிக்க வேண்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அரசு அதிகாரிகள், தொண்டு நிறுவனப் பிரதிநிதிகள், வங்கி அதிகாரிகள் ஆகியோர்களைக் கொண்ட குழு அமைத்து ஏற்கெனவே சிறப்பாகச் செயல்பட வழிவகுத்ததுபோல் இந்த அரசு மீண்டும் நடவடிக்கை எடுக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த வரவு-செலவுத் திட்டத்தில் 8,900 கோடி ரூபாய் அளவிற்குச் சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. ஆனால், அதேநேரத்தில் வரிகள் எதுவும் விதிக்கப்படவில்லை. இந்த நிதிநிலை அறிக்கை தருவதற்கு முன்னால், மதுபானங்களின் விலை உயர்த்தப்பட்டுள்ளது என்பதையும், சில பொருட்களின்மீது விற்பனை வரிகள் உயர்த்தப்பட்டுள்ளது என்றும், பத்திரப் பதிவுக் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது என்றும் தி.மு.க. தலைவர் குறை கூறியுள்ளார். ஆனால், இந்த வகையில் விதிக்கப்பட்டுள்ள வரி உயர்வின்மூலம் கூடுதலாக 3,618 கோடி ரூபாய்தான் கிடைக்கும் என்று நிதிநிலை அறிக்கை தெளிவுபடுத்துகிறது.

"வசதி உள்ளவர்களுக்கு வரி விதித்து, வறியவர்களுக்கு வசதி தேடி தருவதுதான் ஒரு நிதிநிலை அறிக்கையின் நோக்கமாக இருக்க வேண்டும்" என்று அறிஞர் அண்ணா கூறியுள்ளார். (மேசையைத் தட்டும் ஒலி) அதையொட்டி விதிக்கப்பட்ட வரிகள் ஏழை, நடுத்தர மக்களைப் பாதிக்கக்கூடியவை அல்ல. மேலும், ஜவுளி சம்பந்தமான வரி விதிப்பை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தபோது அதன்மீது விதிக்கப்பட்ட வரி உயர்வு நீக்கப்பட்டது. அதேபோல

[திரு. விஜயகாந்த்] [2011 ஆகஸ்ட் 12

பெட்ரோலியப் பொருட்களின் வரி உயர்வு மத்திய அரசால் அறிவிக்கப்பட்டபொழுது, சமையல் எரிவாயு வரி உயர்வைக் குறைத்து அரசாணை வெளியிட்டது. இவற்றிலிருந்தே அரசின் நோக்கம் நன்கு புலனாகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

ஆனால், அதேநேரத்தில் தமிழக அரசு இந்திய அரசிடம் கோரிய ரூபாய் இரண்டு லட்சத்து 52 ஆயிரம் கோடி சிறப்பு நிதியுதவியில், ரூபாய் 10 ஆயிரம் கோடியாவது கிடைத்திருக்குமானால் இந்த வரி உயர்வுகூட தேவைப்பட்டிருக்காது. எந்த வரி உயர்வால் தமிழ்நாட்டு மக்கள் நொந்து போவார்கள் என்று கலைஞர் கருதுகிறாரோ, அந்த மக்களின் நலன் கருதியாவது தனது கூட்டணிக் கட்சியான காங்கிரசிடம் எடுத்துச்சொல்லி தமிழ்நாடு அரசு கேட்ட சிறப்பு உதவி நிதியை ஏன் பெற்றுத்தரவில்லை? இன்னும் சொல்லப்போனால், பெட்ரோலியப் பொருட்களின் விலை உயர்ந்தபொழுது மாநில அரசுகளினுடைய விற்பனை வரியைக் குறைக்கச் சொல்லி மத்திய அரசு வற்புறுத்தியதே தவிர, மத்திய அரசு விதித்த வரியைக் குறைக்க முன்வரவில்லை. இதிலிருந்தே இவர்களின் மக்கள் விரோதப் போக்கைப் புரிந்துகொள்ள முடிகிறது.

பிற்பகல் 12–20

இந்த நிதிநிலை அறிக்கையில் 17,261 கோடி ரூபாய் கூடுதலாகக் கடன் பெற்றிருப்பதை முன்னாள் முதலமைச்சர் கலைஞர் குறை கூறியுள்ளார். ஓர் அரசு கடன் வாங்குவது தவறு அல்ல; அந்தக் கடன் தொகையை, சம்பளம் போன்ற அன்றாடச் செலவுகளுக்குச் செலவழிக்காமல், முதலீடு செய்வதற்குப் பயன்படுத்துவது தவறு அல்ல. முதலீடு செய்கிறபோது, அதன்மூலம் வருகின்ற வருமானத்தை வைத்துக் கடனுக்கான வட்டியையும் செலுத்தலாம்; கடனையும் அடைக்கலாம்.

முந்தைய தி.மு.க. ஆட்சிக் காலத்தில், 2010–2011 ஆம் ஆண்டில் 3,129 கோடி ரூபாய் வருவாய்ப் பற்றாக்குறையாக இருந்தது. ஆகவே, அன்றைக்கு வாங்கிய கடன்கள், சம்பளங்கள், ஊதியங்கள் போன்றவற்றிக்குச் செலவிடப்பட்டன; முதலீடு வெகுவாகக் குறைந்திருந்தது. ஆனால், தற்போது அரசு வாங்கியுள்ள கடன், முதலீடு செய்வதற்கே வழிவகுக்கும். வருவாய்ப் பற்றாக்குறை இந்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இல்லை. வருவாய் உபரிதான் உள்ளது; வருங்காலத்தில் வருவாய் உபரி அதிகரிக்கும் என்றே கணக்கிடப்பட்டுள்ளது.



2011 ஆகஸ்ட் 12] [திரு. விஜயகாந்த்]

அறிஞர் அண்ணா அவர்களின் மொழியிலே சொல்லப் போனால், கடன் வாங்குவது தவறு அல்ல; கடன் வாங்கி, அதன்மூலம் காராம் பசு ஒன்றை வாங்கி, பால் கறந்து, தாங்களும் உண்டு, பிறருக்கும் விற்று, அதன்மூலம் வரும் வருமானத்தில் வட்டியையும் கட்டி, கடனையும் நாளாவட்டத்தில் அடைப்பது ஒரு வகை. இன்னொரு வகை; கடன் வாங்கி, அதன்மூலம் அல்சேஷன் நாய் வாங்கி, அதற்கு நாள்தோறும் பிஸ்கட்டுகள் வாங்கிப் போடுவதற்கு, மேலும் கடன் வாங்குவது ஒரு வகை. (மேசையைத் தட்டும் ஒலி) முதல் வகையைச் சார்ந்தது இந்த அரசு வாங்கும் கடன். இரண்டாவது வகையைச் சார்ந்தது கடந்தகால அரசின் கடன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த வேறுபாடு கலைஞருக்குத் தெரியாதது அல்ல; வேறு எந்தக் குறையும் சொல்ல முடியாததால், வேண்டுமென்றே இந்தக் குறையைச் சொல்கின்றனர்.

கடந்த ஆட்சிக் காலத்தில் தி.மு.க.-வினர் சட்டவிரோதமான முறையில் மக்களைப் பயமுறுத்தி, பலருடைய சொத்துக்களைப் பறித்தனர். இத்தகைய சொத்துக்களை மீட்டு உரியவர்களுக்குத் தர முன்வந்திருப்பது, இன்றைக்குத் தமிழ்நாட்டு மக்கள் அனைவராலும் வரவேற்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், முன்னாள் முதலமைச்சர் கலைஞர் மட்டும், “இது பழிவாங்கும் நடவடிக்கை” என்கிறார். அவரது ஆட்சிக் காலத்திலே ஈரோடு மாவட்டத்தைச் சார்ந்த முன்னாள் அமைச்சர் என்.கே.கே.பி. ராஜா மீது நில அபகரிப்புக் குற்றம் சாட்டப்பட்டு, உயர் நீதிமன்றம் வரை வழக்கு சென்றது. அவர் அமைச்சர் பதவியிலிருந்து கலைஞராலேயே அப்போது நீக்கப்பட்டார்; மாவட்டச் செயலாளர் என்ற கட்சிப் பொறுப்பிலிருந்தும் நீக்கப்பட்டு, சிறையிலும் அடைக்கப்பட்டார். பின்னர், என்ன காரணத்தினாலோ, மீண்டும் கட்சியில் முக்கியப் பொறுப்பு அவருக்கு அளித்து, கடந்த தேர்தலிலும் அவர் போட்டியிட வாய்ப்பளிக்கப்பட்டது. அது அவர் நிரபராதி என்பதால் அல்ல; கலைஞரின் இயலாமையே காரணம். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆகவே, தி.மு.க-வினர் கலைஞரது ஆட்சிக் காலத்திலேயே பொது மக்களின் நிலங்களைக் கொள்ளையடித்தது ஊரறிந்த உண்மை. இன்றும் பாதிக்கப்பட்ட பொது மக்கள் தாங்களாகவே முன்வந்து தரும் புகார்களின் அடிப்படையில்தான், காவல் துறை சட்டப்படி நடவடிக்கை எடுக்கிறதே தவிர, வேறல்ல. “பொய் வழக்குப்

போடுகிறார்கள்" என்று குற்றம் சொல்கிறார்கள். அப்படியானால், நீதிமன்றத்திற்குச் சென்று தங்களை விடுவித்துக் கொள்வதுதான் முறையே தவிர, (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காக தி.மு.க. சார்பில் ஆர்ப்பாட்டம், அமளி என்று நடத்துவது எந்தவகையில் நியாயமாகும்? இதிலிருந்தே போடப்பட்டவை பொய் வழக்குகள் அல்ல என்பது வெட்ட வெளிச்சமாகிறது.

இன்னும் சொல்லப் போனால், கடந்த ஆட்சிக் காலத்தில் தங்களது வீடுகளையோ, நிலங்களையோ விட்டுவிட்டு, தங்களது பிள்ளைகளையோ, பேரப் பிள்ளைகளையோ பார்க்க வெளிநாடுகளுக்குக்கூட செல்ல முடியவில்லை. ஏனென்றால், அந்த நேரத்தைப் பயன்படுத்தி தி.மு.க.–வினர் சொத்தை அபகரித்துக் கொள்வார்கள் என்ற பயம்தான். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அரசின் நில மீட்பு நடவடிக்கையால் மக்கள் இன்றைக்கு நிம்மதியோடு இருக்கிறார்கள்.

காவல் துறை அதிகாரிகள் என்றால், நேர்மையாக இருக்க வேண்டும். ஆனால், எல்லா நெறிமுறைகளுக்கும் புறம்பாக தி.மு.க.-வைச் சேர்ந்த ஒரு அரசியல்வாதியைப் போல, கடந்தகால ஆட்சியில் உளவுத் துறைத் தலைமை அதிகாரியாக இருந்த ஜாபர் சேட் செயல்பட்டுள்ளார். பொதுவாக, நாட்டிற்கோ, மக்களுக்கோ ஆபத்து விளைவிக்கக்கூடிய தீவிரவாதிகளின் நடவடிக்கைகள் குறித்து அவர்கள் தொலைபேசியை ஒட்டுக் கேட்பதுதான் வாடிக்கை. ஆனால், எதிர்க்கட்சித் தலைவர்களின் அல்லது முக்கியஸ்தர்களின் தொலைபேசிகளை ஒட்டுக் கேட்பதும், அதை வைத்து தி.மு.க.-விற்குச் சாதகமான அரசியல் கூட்டணிகளை உருவாக்குவதையும், தி.மு.க.-விற்கு எதிராக உள்ளவர்களை ஒன்றுசேர விடாமல் தடுப்பதையும் தன்னுடைய முக்கியக் கடமையாகக் கொண்டு செயலாற்றினார். பொது மக்கள் தாங்கள் விரும்பியதை, விரும்பியவர்களிடம் பேசும் அடிப்படை உரிமையான பேச்சுரிமையைத் தடுக்கும் வகையில் செயல்பட்ட அதிகாரிதான் முன்னாள் உளவுத் துறை தலைமை அதிகாரி. (குறுக்கீடு) அவருக்கு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தொலைபேசி ஒட்டுக் கேட்பு குறித்த பட்டியலைப் படித்தார்.



அவர் ஒட்டுக் கேட்ட தொலைபேசியில், முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அவர்களின் தொலைபேசியும் இருக்கிறது என்பது latest தகவல்; பத்திரிகையிலேயே வந்தது. அவர் வீட்டிலே சேகரிக்கப்பட்ட சி.டி.-யிலே அது இருக்கிறதாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

*பிற்பகல் 12–25*

**திரு. விஜயகாந்த்:** சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதில் ஒரு சின்ன திருத்தம். கலைஞருடைய தொலைபேசி மட்டுமல்ல, கலைஞருடன் சேர்த்து கலைஞருடைய குடும்பத்திலுள்ள அனைவருடைய தொலைபேசியையும் ஒட்டுக் கேட்டிருக்கிறார் என்பதுதான் என்னுடைய கருத்து. அவர் எந்த அளவுக்கு கலைஞரின் விசுவாசியாக இருந்தார் என்றால், ஜாபர் சேட் குடும்பத்தினருக்கு கலைஞர் அரசு, வீட்டு வசதி வாரிய விதிகளைப் பொருட்படுத்தாமல் அதன் வீட்டு மனைகளைச் சமூக சேவகர் என்ற பெயரில் தாராளமாக வழங்கியதில் இருந்தே நன்கு புலனாகும். நேர்மை தவறிய இவர்மீது நடவடிக்கை இந்த அரசு எடுத்தால், உடனே அவர் ஒரு இஸ்லாமியர் என்று மதத்தை இழுக்கிறார். முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் அவர்கள் இரண்டாவது முறை ஜனாதிபதியாக வருவதை வேண்டுமென்றே தடுத்தவர் கலைஞர்தான். தனது சட்டமன்றப் பணிக்கான பொன் விழாவிற்கு அன்றையதினம் ஜனாதிபதியாக இருந்த அப்துல் கலாம் அவர்கள் கலந்துகொள்ளவில்லை என்பதை மனதில் வைத்துதான் கலைஞர் அவ்வாறு நடந்து கொண்டார். உண்மையிலேயே, அவருக்கு இஸ்லாம் மதத்தைச் சேர்ந்தவர்கள்மீது பற்று இருந்திருக்குமேயானால், அவரை இரண்டாவது முறையும் ஜனாதிபதி ஆக்கியிருக்கலாமே!

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் ஒரு நிமிடத்தில் முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. விஜயகாந்த்:** நகர்ப்புறத்தில் உள்ள பெரும் பணக்கார வீட்டுப் பிள்ளைகளுக்குக் கிடைக்கின்ற கல்வி, கிராமப்புறத்தில் குடிசை வீட்டுக் குழந்தைகளுக்கும் கிடைக்கச் செய்வதுதான் சமச்சீர் கல்வியாகும். இத்தகைய சம வாய்ப்பு தமிழ்நாட்டில் இன்னும் உருவாக்கப்படவில்லை. சமச்சீர் கல்வி என்ற பெயரால் கடந்தகால தி.மு.க. ஆட்சி, பொதுப் பாடத் திட்டம் மட்டுமே கொண்டு

வந்தது. இன்றைய உச்ச நீதிமன்றத் தீர்ப்பும் கல்வியாண்டு தொடங்கிவிட்ட நிலையில் பள்ளிக்கூடம் போகும் பிள்ளைகளுக்குப் பாடப் புத்தகங்கள் கிடைக்கச் செய்வதை அடிப்படையாகக் கொண்டு, இந்தப் பொதுப் பாடத் திட்டத்தின்படி அச்சடிக்கப்பட்ட பாடப் புத்தகங்களை மாணவர்களுக்குத் தர தீர்ப்பளித்துள்ளது.

உச்ச நீதிமன்ற தீர்ப்பு இந்தக் காலக்கட்டத்தில் வரவேற்கக்கூடியது என்றாலும், அது உண்மையில் தமிழ்நாட்டில் சமச்சீர் கல்வி உருவாக வழிவகுக்குமா என்பதே என் கேள்வி. உதாரணத்திற்கு, நகர்ப்புறங்களில் அதிக வசதிகள் கொண்ட பள்ளிகளில் படித்த பிள்ளைகள் என்னிடம் பேசுகிறபோது, எங்களுக்கு நான்காம் வகுப்பில் சொல்லிக் கொடுத்ததுதான், இன்று எட்டாம் வகுப்பில் பாடமாக உள்ளது. ஆகவே, அதில் புதிதாக என்ன படிக்கப் போகிறோம். ஏற்கெனவே படித்ததை ஒரு முறை திரும்பப் படிப்பது போல்தான் உள்ளது என்கின்றனர்.

ஆனால், அதேநேரத்தில் எந்த வசதியும் இல்லாத கிராமப்புற மாணவர்களுக்கு, இதே எட்டாம் வகுப்பு பாடப் புத்தகம் படிப்பதற்குக் கடினமாக இருக்கிறது. இதிலிருந்து ஒன்றை நாம் தெரிந்துகொள்ள வேண்டும். பொதுப் பாடத் திட்டத்தின்படி, பொதுத் தேர்வு நடத்தினால் நகர்ப்புற பணக்காரப் பிள்ளைகள் எளிதாக அதிக மார்க்குகள் வாங்கி மேல் படிப்புக்குச் செல்ல முடியும். ஆனால், கிராமப்புற பிள்ளைகளுக்கு அதிக வாய்ப்பு கிட்டாது. ஆகவே, உண்மையில் ஏழையெளிய, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட கிராமப்புற மாணவர்களுக்கு இது எந்த வகையில் சமூக நீதியாக அமையும் என்பது எனக்குத் தெரியவில்லை. உண்மையில், கிராமப்புறங்களில் உள்ள பள்ளிக்கூடங்களுக்கு சகல வசதிகளையும் செய்து கொடுத்து, தகுதியான ஆசிரியர்களை நியமித்து, பிள்ளைகளை ஆரம்பம் முதலே கவனமாகப் படிக்க வைக்க வேண்டும். அப்பொழுதுதான் பொதுப் பாடத் திட்டம் என்று வருகிறபோது, அவர்களும் நகர்ப்புறத்தைச் சேர்ந்த மாணவர்களோடு போட்டியிட முடியும். எதை முதலில் செய்ய வேண்டுமோ, அதைச் செய்யாமல், பொதுப் பாடத் திட்டத்தை அமல்படுத்துவதே சமச்சீர் கல்வி என்ற பொய்யை விலை கூறி விற்றால், நாம் என்ன செய்ய முடியும்?

தற்பொழுதுள்ள பாடத் திட்டத்தை எல்லோரையும் படிக்கச் செய்வதால் அதன்மூலம், கிளார்க்குகளை வேண்டுமானால் உருவாக்கலாமே தவிர, விஞ்ஞானி அப்துல் கலாம்



போன்றவர்களையோ, அரசியல் சட்ட மேதை டாக்டர் அம்பேத்கர் போன்றவர்களையோ உருவாக்க முடியாது. *(மேசையைத் தட்டும் ஒலி)* ஆகவே, இந்த அரசைப் பொறுத்தவரை, உண்மையான சமச்சீர் கல்வியைக் கொண்டுவர முதலில் அடிப்படை வசதிகளைக் கல்விக் கூடங்களில் செய்ய வேண்டும். அதற்கான திட்டங்களை வகுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வண்டிக்கு முன்புதான் குதிரையை மாட்ட வேண்டுமே தவிர, குதிரையைப் பின்னால் கட்டி இழுத்துக் கொண்டு ஓடுவது சரியாக வராது. தற்போதைய பொதுப் பாடத் திட்டம் முன்னுக்குப்பின் முரணானது என்றே கருதுகிறேன். மொத்தத்தில் இந்த நிதிநிலை அறிக்கை, இருப்பதைக் கொண்டு சிறப்பாக நடத்துவதற்கு இலக்கணமாக அமைந்துள்ளது. இதில் கூறப்பட்டுள்ள திட்டங்கள் நிறைவேற்றப்படுமானால், தமிழ்நாட்டில் பொருளாதாரத்தில் ஒரு புதிய மறுமலர்ச்சி ஏற்படும்.

தேர்தல்களில் அரசியல் கட்சிகள் போட்டியிடுகிறபோது வெற்றி பெற்றவர்கள் ஆளும் கட்சியாகவும், தோல்வியுற்றவர்கள் எதிர்க்கட்சியாகவும் அமருவதுதான் வாடிக்கை. ஆனால், இந்த ஆட்சி வர வேண்டுமென்று உழைத்த எங்களுக்கு இன்று பிரதான எதிர்க்கட்சியாக அமருகின்ற வாய்ப்பை இந்த நாட்டு மக்கள் தந்துள்ளார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* இந்த விசித்திரமான சூழ்நிலையில், இந்த ஆட்சி நல்ல ஆட்சியாக நடைபெற வேண்டுமென்றும், இந்த நிதிநிலை அறிக்கையில் கண்டுள்ள நல்ல திட்டங்கள் மக்களை வாழ வைக்க வேண்டுமென்றும், அதற்கு உறுதுணையாக தே.மு.தி.க. இருக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

இன்று தமிழ்நாட்டு மக்கள் ஆதரித்து வெற்றி பெறச் செய்துள்ள இந்தக் கூட்டணியைச் சார்ந்த தே.மு.தி.க. சார்பாக, ஒரு புதிய சமுதாயத்தை, வறுமை இல்லாத, வேலைவாய்ப்பு பெருகக்கூடிய, அனைவருக்கும் சம வாய்ப்பளிக்கும் சமுதாயத்தை உருவாக்கும் வகையில் இந்த நிதிநிலை அறிக்கை ஒரு திருப்புமுனையாக அமைந்துள்ளது என வாழ்த்தி என் உரையை நிறைவு செய்கிறேன். நன்றி. *(மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 12–30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். தமிழக மக்களின் நலன் காக்க வாராது வந்த மாமணி, வரலாறு போற்றித் துதிக்கும் தமிழ் அன்னையின் தலைமகள், தமிழினத்தின் எதிரிகளைத் தடுத்து நிறுத்தும் காவல் அரண், இழந்த தமிழகத்தின் பெருமையை மீட்டெடுக்க வந்திருக்கும் வீரத்தின் விளைநிலம், *(மேசையைத் தட்டும் ஒலி)* நாடே எதிர்பார்க்கும், இந்தியத் திருநாடே எதிர்பார்க்கும் நாளைய இந்தியாவின் நம்பிக்கை நட்சத்திரம், *(மேசையைத் தட்டும் ஒலி)* தமிழகத்தின் முன்னேற்றத்தைத் தடுக்கின்ற இடர்ப்பாடுகளை தவிடு பொடியாக்கும் இடி முழக்கம், மக்கள் சக்தியை தன் சக்தியாய்க் கொண்டு மாநிலத்தை ஆளுகின்ற மகா சக்தி, *(மேசையைத் தட்டும் ஒலி)* வாக்குப் புரட்சிக்குத் தலைமை ஏற்று வாகை சூடிய மக்கள் தலைவர், வாக்களித்த மக்களுக்கு நன்றி செய்ய ஓய்வின்றி கடமையாற்றும் உயர் தலைவி, *(மேசையைத் தட்டும் ஒலி)*, நினைத்ததை நினைத்தபடி முடிக்கும் வேகமும், மக்கள் மனம் மகிழும்படி செயலாற்றும் விவேகமும், கடமைகள் யாவற்றையும் காலத்தே முடிக்கின்ற ஆற்றலும் கொண்டு தமிழகத்தை ஆட்சி செய்துகொண்டிருக்கும் மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருப்பாதங்களுக்கு எனது முதல் வணக்கத்தை உரித்தாக்குகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்மீது அளப்பரிய விசுவாசமும், அசைக்க முடியாத நம்பிக்கையும் கொண்டுள்ள ஒன்றரைக் கோடி தொண்டர்களில் ஒருவனான என்னை, பெருமைமிகு இந்தப் பேரவையில் தமிழகத்தின் நிதி அமைச்சராக, நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்திடவும், தொடர்ந்து நடைபெற்ற விவாதத்தில் பங்கேற்று 2011–2012 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்து வைத்த கருத்துகளுக்கு பதில் அளிக்கவும் வாய்ப்பு அளித்த வாய்மையின் வடிவம், மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது கோடானு கோடி நன்றியினைக் காணிக்கையாக்கி எனது பதிலுரையைத் தொடங்குகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

தரணி போற்றும் தன்னிகரில்லா தமிழினத் தலைவர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக தமிழகத்தின் முதலமைச்சராகப் பொறுப்பேற்று, தமிழகத்தில் மீண்டும் ஒரு பொற்கால ஆட்சியை



நிலைநிறுத்த, தொலைநோக்குப் பார்வையுடன் அளித்த தேர்தல் வாக்குறுதிகளை செயல்முறைக்குக் கொண்டுவர, வளர்ச்சித் திட்டங்களையும், மக்கள் நலத் திட்டங்களையும் சீரிய முறையில் வகுத்து, அதன் அடிப்படையில் 2011-2012 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு மாண்புமிகு அம்மா அவர்களால் தீட்டப்பட்டு, இந்த மாதம் 4 ஆம் நாள் இந்த மாமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

"அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தர்க் கியல்பு"

என்று அரசரின் இயல்புகள் குறித்து இலக்கணம் சொல்கிறது திருக்குறள்.

நாடாளும் அரசருக்கு இருக்க வேண்டிய குணநலன்கள் என்று திருவள்ளுவர் கூறுகின்ற எதிரிகளுக்கு அஞ்சாத துணிவு, வள்ளல் தன்மை, அறிவாற்றல், எண்ணிய செயலை முடிக்கின்ற ஊக்கம் இந்த நான்கு இயல்புகளையும் குறையறக் கொண்டவர் தமிழகத்தை ஆட்சி செய்யும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள்! *(மேசையைத் தட்டும் ஒலி)* இதனை நாடறியக் காட்டுகின்ற மற்றும் ஓர் உதாரணம்தான் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் வடிவமைக்கப்பட்டுள்ள இந்த நிதிநிலை அறிக்கை.

பிற்பகல் 12–35

மாண்புமிகு அம்மா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்று கடந்த மூன்று மாதங்களில் துறைதோறும் ஆய்வுகளை நடத்தி, தமிழ்நாடு எத்தகைய வளர்ச்சியைப் பெறவேண்டும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் கனவு கண்டாரோ, அந்தக் கனவை நனவாக்கக்கூடிய வகையில் திட்டங்களைச் செதுக்கி, சிற்பமாக்கி செயல்முறைக்குக் கொண்டுவரும் வகையில், பலதரப்பட்ட மக்களும் மனமுவந்து பாராட்டுகின்ற இந்த வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டை மாண்புமிகு அம்மா அவர்கள்தான் உருவாக்கினார்கள் என்பதை இங்கே பெருமையுடன் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

இந்தத் திட்ட மதிப்பீட்டின்மீது கடந்த ஐந்து நாட்களாகப் பல்வேறு கட்சிகளைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள், இங்கே தங்களது சீரிய கருத்துகளைத் தெரிவித்திருக்கின்றார்கள்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக கட்சியின் சார்பாக 12 மாண்புமிகு உறுப்பினர்களும், தேசிய முற்போக்கு திராவிட கழகத்தைச் சார்ந்த 7 மாண்புமிகு உறுப்பினர்களும், இந்திய கம்யூனிஸ்டு கட்சியைச் (மார்க்சிஸ்ட்) சார்ந்த 4 மாண்புமிகு உறுப்பினர்களும், இந்திய கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்த 4 மாண்புமிகு உறுப்பினர்களும், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த 2 உறுப்பினர்களும், பாட்டாளி மக்கள் கட்சியைச் சார்ந்த 2 உறுப்பினர்களும், மனித நேய மக்கள் கட்சியைச் சார்ந்த ஓர் உறுப்பினரும், புதிய தமிழக கட்சியைச் சார்ந்த ஓர் உறுப்பினரும், அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியைச் சார்ந்த ஓர் உறுப்பினரும், அகில இந்திய பார்வார்டு பிளாக் கட்சியைச் சார்ந்த ஓர் உறுப்பினரும், கொங்கு இளைஞர் பேரவை இயக்கத்தைச் சார்ந்த ஒருவரும், இந்திய குடியரசு கட்சியைச் சார்ந்த ஒருவரும், நியமன உறுப்பினர் ஒருவரும், ஆக 38 மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே தங்களுடைய அரிய கருத்துகளை எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள். குறிப்பாக, மாண்புமிகு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர், மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. அ. சவுந்தரராசன், திரு. எம். ஆறுமுகம், முனைவர். எம்.எச். ஜவாஹிருல்லா, டாக்டர் க. கிருஷ்ணசாமி, திரு. ரா. சரத்குமார்,திரு. பி.வி. கதிரவன், முனைவர். செ.கு. தமிழரசன், திரு. உ. தனியரசு, திரு. சு. குணசேகரன் போன்றோர் விவாதத்தில் கலந்துகொண்டு தங்களின் பொன்னான கருத்துகளை விரிவாக எடுத்துரைத்துள்ளனர். அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டின்மீது பல்வேறு கட்சிகளின் தலைவர்களும், தொழில் கூட்டமைப்புகளும், பத்திரிகைகளும் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர். அவர்களுக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுவுடைமைக் கட்சிகளின் தலைவர்களான திரு. ஜி. ராமகிருஷ்ணன், திரு. தா. பாண்டியன் ஆகியோரும் மற்றும் பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டை வரவேற்று, மனதாரப் பாராட்டியுள்ளார்கள். அதேபோன்று, பல்வேறு பத்திரிகைகளிலும் மாண்புமிகு அம்மா அவர்களின் வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு மற்றும் திட்ட வாரியாக செய்திகளை வெளிட்டதோடு, வரவு–செலவுத் திட்டம் குறித்து கருத்துகளை தெரிவித்துள்ளனர். அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.



தமிழக மக்களின் நலனையே கருத்தில்கொண்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியின்போது தி.மு.க. ஆட்சியாளர்களின் அராஜகத்தாலும், அவர்களது நிருவாகச் சீர்கேட்டாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயம் கிடைத்திடவும், மாநிலத்தில் பல்வேறு பகுதிகளில் பல்வேறு பிரச்சினைகளால் துன்பத்திற்கு ஆளான மக்களுக்குத் தீர்வு கிடைத்திடவும், இடைவிடாது அறப்போராட்டங்களை நடத்தி மைனாரிட்டி தி.மு.க. அரசை ஆட்டம் காணச் செய்தார். இதனால்தான், கடந்த சட்டமன்றத் தேர்தலில் மக்கள் வாக்குப்புரட்சிமூலம் பணநாயகத்தைத் தோற்கடித்து ஜனநாயகத்தை நிலைநிறுத்தினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழக மக்கள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்மீது கொண்ட பாசத்தால் மாண்புமிகு அம்மா அவர்கள் நல்லாட்சி தருவார் என்ற நம்பிகையோடு மாண்புமிகு அம்மா அவர்களை மூன்றாவது முறையாக முதலமைச்சராகத் தேர்ந்தெடுத்தார்கள். மேசையைத் தட்டும் ஒலி) தி.மு.க. மீது கொண்ட வெறுப்பால் எதிர்க்கட்சி அந்தஸ்துகூட வழங்காமல் இன்றைக்கு மூன்றாவது இடத்திற்கு அதனைத் தள்ளினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) பதவி தந்த போதையால், அதிகார மமதை கொண்டு பாதை மாறிய கொடுங்கோல் ஆட்சியாளர்களிடமிருந்து தமிழக மக்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றைக்கு விடுதலை பெற்றுத் தந்துள்ளார்கள் என்பதை நான் இங்கே குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–40

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு கிடைத்த வெற்றி பொன்னெழுத்துக்களால், வைர வரிகளால் பொறிக்கப்பட வேண்டிய சாதனை சரித்திரமாகும். (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த 5 ஆண்டுக் காலம் ஒரு மைனாரிட்டி அரசின் முதலமைச்சர் பொறுப்பிலே இருந்த கருணாநிதி, தனது கட்சியினரையும், வாரிசுகளையும் உலக மகா ஊழல் புரியச் செய்து, உலக அரங்கில் தமிழகத்திற்கு தீராத தலைக்குனிவை ஏற்படுத்திவிட்டார். 2ஜி அலைக்கற்றை ஊழல்மூலம் ஒரு இலட்சத்து 80 ஆயிரம் கோடி

ரூபாய் இந்திய அரசுக்கு இழப்பு ஏற்படுத்தி அமெரிக்காவின் வாட்டர் கேட் ஊழலுக்கு அடுத்தபடியாக உலகத்தின் மகா ஊழல்வாதிகளின் பட்டியலில் முன்னாள் மத்திய தொலை தொடர்புத் துறை அமைச்சர், தி.மு.க.வின் கொள்கை பரப்புச் செயலாளர் ஆண்டிமுத்து ராசாவின் பெயர் இடம் பெற்றுள்ளதாகவும், அந்தப் பட்டியலில் லிபியா அதிபர் கடாபியை இந்த ராசா மூன்றாவது இடத்திற்குத் தள்ளிவிட்டதாகவும் அமெரிக்காவின் டைம்ஸ் பத்திரிகை தெரிவித்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலம் தமிழகத்தின் பெருமையை இழக்கச் செய்து 7 கோடி தமிழர்களின் மானத்தைக் காற்றிலே பறக்க வைத்துவிட்டார் கருணாநிதி. தேனுக்கு ஆசைப்பட்ட பேராசைக்கார மூடன் தேன் கூட்டையே தன் வீட்டிற்குள் கொண்டு வந்ததைப்போல, தேனீக்களின் தாக்குதலுக்கு ஆளான கதையைப்போல, (மேசையைத் தட்டும் ஒலி) தி.மு.க.வினரும், வாரிசுகளும் செய்த ஊழலால் கருணாநிதியின் நிலை இன்று சந்தி சிரித்துக்கொண்டிருக்கிறது.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையில் மக்களுக்கு அளித்த தேர்தல் வாக்குறுதிகள் அனைத்தையும் ஒன்றரை ஆண்டுக் காலத்திற்குள் முடித்திட வேண்டுமென்ற ஒரே சிந்தனையுடன் இரவு-பகல் பாராமல் ஓய்வின்றிப் பாடுபட்டு வருகிறார் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சிந்தனையாலும், அறிவாற்றலாலும் உருவாக்கப்பட்ட இந்த வரவு–செலவுத் திட்டம் எத்தகைய சூழ்நிலையில் உருவாக்கப்பட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். 2001-2006 ஆம் ஆண்டு வரை நடைபெற்ற மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையிலான அரசு, ஒரு பொற்கால ஆட்சியை நாட்டிற்குத் தந்தது. (மேசையைத் தட்டும் ஒலி)

2001 ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றபோது அதற்கு முன்பிருந்த தி.மு.க. ஆட்சி ஏற்படுத்தித் தந்த கடும் நிதி நெருக்கடியைச் சமாளித்து 2000-2001 ஆம் ஆண்டு இறுதியில் 3,435 கோடி ரூபாயாக இருந்த வருவாய்ப் பற்றாக்குறையை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி



அம்மா அவர்கள் தங்களுடைய திறமையான நிதி நிருவாகத்தால் முழுமையாக நீக்கி, 2005–2006 ஆம் ஆண்டில் 1,951 கோடி ரூபாய் அளவிற்கு வருவாய் உபரியை ஏற்படுத்தினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அரசின் பல்வேறு திட்டங்கள் சிறப்பாகச் செயல்பட்டு, பொதுத் துறை நிறுவனங்களின் செயல்பாடுகள் சீரமைக்கப்பட்டன. ஆனால், 2006 ஆம் ஆண்டில் பொறுப்பேற்ற மைனாரிட்டி தி.மு.க. அரசு பல துறைகளிலும் சீர்கேடுகளை ஏற்படுத்தியதால், தமிழகம் ஓர் இருள் சூழ்ந்த நிலைக்குத் தள்ளப்பட்டது. அந்த 5 ஆண்டுகளுக்குப் பிறகு மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மே மாதம் 2011 ஆம் ஆண்டில் மீண்டும் பொறுப்பேற்றுள்ள நிலையில் மைனாரிட்டி தி.மு.க. அரசு 2010–2011 ஆம் ஆண்டுக்கு 3,128 கோடி ரூபாய் வருவாய்ப் பற்றாக்குறையை மீண்டும் ஏற்படுத்திச் சென்றுள்ளதை எதிர்கொண்டிடும் சூழ்நிலையும் நமக்கிருக்கின்றது என்பதை நான் இங்கே கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அத்துடன் மைனாரிட்டி தி.மு.க. அரசு ஒரு இலட்சத்து ஓராயிரத்து 349 கோடி ரூபாய் கடன் சுமையினையும், தமிழக மக்கள்மீது சுமத்திச் சென்றுள்ளது. தமிழ்நாட்டிலுள்ள 49 பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் 9 வாரியங்களின் ஒட்டுமொத்த நட்டம் 2005–2006 ஆம் ஆண்டு வரை 8,023 கோடியாக இருந்தது. அதற்குப் பிறகு வந்த மைனாரிட்டி தி.மு.க. அரசு ஐந்தே ஆண்டுகளில் தனது நிருவாகத் திறமையின்மையால், ரூபாய் 32,273 கோடி ரூபாயாக நட்டத்தை ஏற்படுத்திவிட்டுச் சென்றிருக்கிறது. தமிழ்நாடு மின்சார வாரியத்திலிருந்து புதிதாகப் பிரிக்கப்பட்ட மின் உற்பத்தி–பகிர்மானக் கழகமும், அரசுப் போக்குவரத்துக் கழகங்களும் மிகுந்த கடன் சுமையால் முடங்கிவிடும் அபாய சூழ்நிலைக்கு ஆளாகி இருக்கிறது.

பிற்பகல் 12–45

"A pessimist sees the difficulty in every opportunity, an optimist sees the opportunity in every difficulty" என்ற சர் வின்ஸ்டன் சர்ச்சில் அவர்களின் கூற்றுக்கேற்ப, எத்தகைய மோசமான சூழ்நிலையையும் துணிவுடன் எதிர்கொண்டு, ஒரு சாதகமான சூழ்நிலையாக மாற்றிக் காட்டும் வல்லமை பெற்ற மாண்புமிகு முதலமைச்சர் (மேசையைத் தட்டும் ஒலி) இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இந்த மோசமான சூழ்நிலையையும் கண்டு கலக்கமடையவில்லை. மாறாக, உறுதியோடு இந்த நிலையிலும் நிதியாதாரங்களைத் திரட்டி, ஏற்கெனவே ஏற்பட்ட வருவாய்ப் பற்றாக்குறையை முழுமையாக

நீக்கி, சுமார் 8,900 கோடி ரூபாய்க்கான புதிய திட்டங்களையும் மக்களுக்கு வழங்கி, நிதிநிலைக் குறியீடுகளிலும், நிதி மேலாண்மையிலும் எந்தப் பிறழ்வும் ஏற்படாமல், மிக கவனமாக இந்த நிதிநிலை அறிக்கையைப் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு வகுத்துள்ளது என்பதைப் பெருமிதத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

சட்டசபைத் தேர்தலில் அளித்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படுமா என்றும், அதற்கான நிதி எங்கே என்றும் கேள்விக் கணைகளைத் தொடுத்தவர்களுக்கு இந்த நிதிநிலை அறிக்கை ஒரு பதிலாக அமைந்துள்ளது. நிறைவான திட்டங்களையும், அதற்கான ஏகோபித்த பாராட்டுக்களையும் பெற்ற நிதிநிலை அறிக்கை இதுவாகத்தான் இருக்கும் என்பதை என்னால் அறுதியிட்டுக் கூற முடியும். இந்த நிதிநிலை அறிக்கை குறித்து அனைத்துத் தரப்பு மக்களும் மனதார வரவேற்றுப் பாராட்டி இருக்கின்றார்கள். வரவு-செலவுத் திட்டங்களில் அள்ளிக் கொடுப்பதாக கேள்விப்பட்டோம். இங்கே பேசிய நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. குணசேகரன் அவர்களும், திரு. ராமமூர்த்தி அவர்களும் ஒரு கருத்தைச் சொன்னார்கள். வரவு-செலவுத் திட்டங்களில் அள்ளிக் கொடுப்பதாகக் கேள்விப்பட்டுள்ளோம். ஆனால் அப்படி அள்ளிக் கொடுத்துள்ளது உண்மைதான் என்பதை நாங்கள் பக்கத்தில் இருப்பவர்களைக் கிள்ளிப் பார்த்துத் தெரிந்துகொண்டோம் (மேசையைத் தட்டும் ஒலி) என்று மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. குணசேகரன் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. ராமமூர்த்தி அவர்களும் இங்கே தெரிவித்தார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின்மீது நம்பிக்கை வைத்தவர்கள் யாரும் கிள்ளிப் பார்த்து சோதித்துப் பார்த்துக்கொள்ள வேண்டிய அவசியமே இல்லை என்பதைப் பணிவுடன் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) பொதுவுடைமைக் கட்சி நண்பர்கள் குறிப்பிடும்போது, அவர்கள் தெரிவித்த ஒருசில விமர்சனங்கள், ஆக்கப்பூர்வமான கருத்துகள் என்ற அடிப்படையில் ஏற்றுக் கொள்வதில் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசுக்கு எந்தத் தயக்கமும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

விவசாய விளைபொருட்களுக்குக் கொள்முதல் விலையை உயர்த்துவது பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். விவசாய விளைபொருட்களுக்கு நியாயமான விலை வழங்க வேண்டும் என்பதில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசுக்கு எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. ஆனால், ஒருபுறம்





விவசாயிகளுக்குக் கட்டுப்படியான விலையாகவும் இருக்க வேண்டும்; அதேசமயம் நுகர்வோரைப் பாதிக்காதவண்ணம் விலைவாசியையும் கட்டுக்குள் வைக்க வேண்டும். இதைக் கருத்தில்கொண்டு தேவைக்கேற்ப விவசாய விளைபொருட்களுக்கு உரிய விலையை, மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு வழங்கும் என்ற உறுதியையும் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தற்போது சன்ன ரக நெல்லுக்கு, குவிண்டாலுக்கு 1,110 ரூபாயாகவும், சாதாரண நெல்லுக்கு 1,080 ரூபாயும் வழங்கப்படுகிறது. கரும்புக்கு டன்னுக்கு 2,000 ரூபாய் வழங்கப்படுகிறது. பயறு வகைகளுக்கும், மத்திய அரசு நிர்ணயித்தபடி பச்சைப் பயறுக்கு குவிண்டாலுக்கு 3,500 ரூபாயும், உளுத்தம் பயறுக்கு 3,300 ரூபாயும், துவரைக்கு 3,200 ரூபாயும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நுகர்பொருள் வாணிபக் கழகம்மூலம் நெல் கொள்முதல் செய்யப்படுவதுபோல் இந்த அடிப்படை ஆதார விலையில் பயறு வகைப் பொருட்களையும் கூட்டுறவுச் சங்கங்கள், நுகர்பொருள் வாணிபக் கழகங்கள் மூலமாகக் கொள்முதல் செய்ய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு கவனமாகப் பரிசீலிக்கும் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 12—50

மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள் பேசும்பொழுது, சிறப்புக் கூறுகள் திட்டத்தில் ஆதி திராவிடர் நலனுக்கு 21.27 விழுக்காடு ஒதுக்கப்பட்டதையும், சென்ற ஆட்சியில் இந்தத் தொகை தவறாகப் பயன்படுத்தப்பட்டதாகவும் இங்கே தெரிவித்தார். உண்மைதான். கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் ஆதி திராவிடப் பெருமக்களுக்கும், பழங்குடிப் பெருமக்களுக்கும் ஒதுக்கப்பட்ட நிதி, பல்வேறு பயன்பாட்டிற்கு ஒதுக்கப்பட்டதாகக் கடுங் குற்றச்சாட்டு கடந்த தி.மு.க. மைனாரிட்டி அரசுமேல் இருந்தது. அதிலும் குறிப்பாக, அவர்கள் நடத்தினார்களே செம்மொழி மாநாடு கோவையில், அந்த மாநாட்டுக்கு நம்முடைய ஆதி திராவிட மக்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதி திருப்பி விடப்பட்டதாகக் குற்றச்சாட்டு எழுந்தது. அந்தச் செம்மொழி மாநாடுபற்றி உங்களுக்கெல்லாம் நன்றாகவே தெரியும்.

தமிழ் வளர்ச்சிக்காக, தமிழ் இனத்தினுடைய வளர்ச்சிக்காகப் பேரறிஞர் அண்ணா அவர்கள் உலகத் தமிழ் மாநாட்டைச்

சிறப்பான முறையில் நடத்தினார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும் உலகத் தமிழ் மாநாட்டை நடத்தினார்கள். அம்மாநாடு, தமிழ் இன வளர்ச்சிக்காகவும், தமிழ் மொழியின் வளர்ச்சிக்காகவும் சிறப்பான முறையில் நடைபெற்றது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களும் உலகத் தமிழ் மாநாட்டை நடத்தினார்கள். நான்காம் தமிழும், அறிவியல் தமிழும் வேண்டுமென்ற எண்ணத்தோடு மாண்புமிகு அம்மா அவர்களும் உலகத் தமிழ் மாநாட்டை நடத்தினார்கள். கருணாநிதிக்கும் ஆசை வந்தது, இந்த உலகத் தமிழ் மாநாட்டை நாமும் நடத்த வேண்டும் என்று. அவராகவே செம்மொழி மாநாட்டை— அவராகவே உலகத் தமிழ் மாநாடு நடத்தப்படும் என்று ஓர் அறிவிக்கை செய்தார். ஆனால், உலகத் தமிழ் மாநாடு நடத்துவதற்கு உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்திடம் அனுமதி பெறவேண்டும். கருணாநிதி அவர்கள் அனுமதி பெறாமல் அவராகவே சுயமாக அறிவித்தார். உடனே, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தில் இருக்கின்ற பொறுப்பாளர்கள், நிருவாகஸ்தர்கள் கருணாநிதிக்குக் கடும் கண்டனம் தெரிவித்தார்கள். “கருணாநிதி அவர்களே! இன்றைக்கு இலங்கையில் ஒரு இலட்சம் தமிழர்கள் கொல்லப்பட்டிருக்கின்றார்கள்; மூன்று இலட்சம் இலங்கைத் தமிழர்கள் முள்வேலிக்குள்ளே அடைக்கப்பட்டு சித்ரவதைக்கு உள்ளாக்கப்பட்டிருக்கின்றார்கள்; கைகள் இழந்து, காலிழந்து, வெயிலும், மழையிலும் நனைந்துகொண்டு அங்கே அவதிப்பட்டு கொண்டிருக்கின்றார்கள்; இலங்கை அரசு, தமிழர்கள்மீது போர் தொடுக்கப்படுகின்ற விவரம் மத்திய அரசுக்கும் தெரியும்; மாநில அரசில் முதலமைச்சராக இருக்கின்ற உங்களுக்கும் தெரியும்; அந்தப் போரைத் தடுத்து நிறுத்துவதற்கு நீங்கள் எந்த முயற்சியும் செய்யவில்லை. ஆகவே, உங்களுக்கு உலகத் தமிழ் மாநாடு நடத்துவதற்கு அருகதை இல்லை; (மேசையைத் தட்டும் ஒலி) அனுமதிக்க முடியாது” என்று அன்றைக்கு உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தினுடைய பொறுப்பாளர்கள் அனுமதி மறுத்தார்கள். உடனே, கருணாநிதி நினைத்தார்; ‘செம்மொழி மாநாடு’ என்று அறிவித்தார்.

அந்தச் செம்மொழி மாநாடு எப்படி நடக்கும் என்று எங்களுடைய தலைவி, புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் தீர்க்கதரிசனமாகச் சொன்னார்கள். இந்தச் செம்மொழி மாநாடு, தமிழர்களுக்காகவோ, தமிழ் மொழிக்காகவோ பயன்படாது. இது முழுக்க, முழுக்க கருணாநிதியினுடைய குடும்பத்தின் தன்னல,



தம்பட்ட மாநாடாகத்தான் அந்த மாநாடு நடக்கும் என்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சொன்னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). அதுபோலத்தானே அந்த மாநாடு நடந்தது? கருணாநிதி குடும்பத்தில் எத்தனை பேர்? 165 பேர். லஞ்சம், குஞ்சம் பூரா முன் வரிசையில் உட்கார்ந்திருந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) பாவம், அந்தக் கருணாநிதி பேச்சைக் கேட்க தமிழறிஞர்கள் வெளிநாட்டிலிருந்து சிலபேர் வந்தார்கள். பாவம், அந்தக் கருணாநிதி குடும்பத்துக்காரர்களெல்லாம் முன் வரிசை சீட்டில் உட்கார, அவர்கள் பூராவும் பின்னால் நின்று கொண்டிருந்தார்கள். இதுமாதிரி ஒரு நிலைதான் அந்தச் செம்மொழி மாநாட்டில் ஏற்பட்டது. ஆக, ஆதி திராவிடப் பெருமக்களுக்கு வழங்கப்பட்ட நிதி, உபயோகமற்ற வழியில் செம்மொழி மாநாடு என்ற போர்வையில் அங்கே செலவழிக்கப்பட்டது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள் இன்றைக்கு—நேற்றுகூட முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள் சொன்னார்கள், 19 சதவிகிதம்தானே கொடுக்க வேண்டும்; 21.27 சதவிகிதம் அம்மா அவர்கள் உயர்த்திக் கொடுத்திருக்கின்றார்களே, அதற்கு எங்களுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன் என்று முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள் சொன்னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், அதற்கு ஒருபடிக்கும் மேலாக மாண்புமிகு அம்மா அவர்கள் இன்றைக்கு இலவச கறவை மாடுகள், ஆடுகள் வழங்கும் திட்டத்திற்கு 30 விழுக்காடுகள் ஆதி திராவிடப் பெருமக்களுக்காக (மேசையைத் தட்டும் ஒலி) ஒதுக்கப்படும் என்ற செய்தியினையும் சட்டமன்றத்திலே அறிவித்து இருக்கின்றார்கள்.

பிற்பகல் 12–55

இன்றைக்கு ஆதி திராவிடப் பயனாளிகளுக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் வழங்குகின்ற அந்த 30 சதவிகித ஒதுக்கீடு காரணமாக ஆதி திராவிடப் பெருமக்களும், பழங்குடியினரும் மிகுந்த சந்தோஷத்தில், மகிழ்ச்சியோடு இருக்கின்றார்கள் என்பதை நான் இந்தச் சபைக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அத்துடன், ஆதி திராவிடர்களுக்குக் கடன் உதவி உச்சவரம்பு உயர்வு, மாணவ மாணவியருக்கு உணவு உதவித் தொகை அதிகரிப்பு, வாடகைக் கட்டடத்தில் இயங்கும் விடுதிகள் அனைத்திற்கும் புதிய கட்டடம், ஏற்கெனவே உள்ள விடுதிகளுக்கு இதுவரை இல்லாத

அளவிற்குப் பராமரிப்பிற்காக 83 கோடி ரூபாய் ஒதுக்கீடு, எனப் பல உதவிகளை மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு வழங்கியுள்ளதை ஆதி திராவிடர் மற்றும் பல தரப்பு மக்களும் மனதாரப் பாராட்டுகின்றார்கள்.

விவாதத்தில் கலந்துகொண்ட உறுப்பினர்கள் சிலர் அரசுக்கு ஏற்பட்டுள்ள கடன் சுமை பற்றிச் சுட்டிக்காட்டினர். நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளபடி, ஏற்கெனவே 1,01,349 கோடி ரூபாய் கடன் ஏற்பட்டுள்ள நிலையில், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பொறுப்பேற்ற மூன்று மாதத்திற்குள் இந்தக் கடன் சுமையைக் குறைக்க இயலாது என்பதைத் தெளிவுபடுத்தி இருக்கிறோம். வளர்ச்சித் திட்டங்களை முன்நோக்கி எடுத்துச் செல்ல இந்த ஆண்டு முழுமைக்கும் தேவைப்படும் மூலதனச் செலவுக்காக, மேலும் 17,261 கோடி ரூபாய் கடன் பெறுவது தவிர்க்க இயலாதது என்றும், வருங்காலத்தில் சிறப்பான வளர்ச்சித் திட்ட செயலாக்கத்தால் கூடுதல் வரி வருவாய் பெற வாய்ப்புள்ளது என்றும், திறமையான வரி நிருவாகம், நிதி மேலாண்மைமூலம் கடன் சுமையைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், ஏற்கெனவே நிதிநிலை அறிக்கையில் தெளிவுபடுத்தியுள்ளோம். வாங்கப்படுகின்ற கடன் அளவோடு இருக்கவேண்டும். தவிர்க்க இயலுமானால் தவிர்க்கப்படவேண்டும் என்பதையும், அது பயனுள்ள திட்டங்களுக்குச் செலவிடப்படுகிறதா என்பதையும், ஒரு நல்ல அரசு கருத்தில் கொள்ளவேண்டும். இந்த அடிப்படையில்தான் மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்ல அரசு, கடன் குறித்து மிக கவனமாக செயல்படும் என்ற உறுதிமொழியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

"தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்" எனும் ஆங்கில நாளிதழ், "Tamil Nadu Budget puts State back on track" என்னும் தலைப்பில் வெளியிட்டுள்ள 6-8-2011 நாளிட்ட தனது தலையங்கத்தில், "மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களது புதிய ஆட்சியின் முதல் நிதிநிலை அறிக்கை, மாநிலத்தின் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சியில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டுள்ள அளவுகடந்த அக்கறையை வெளிப்படுத்துவதாக அமைந்திருக்கிறது" என்று குறிப்பிட்டுள்ளது. *(மேசையைத் தட்டும் ஒலி)*



மேலும், அந்த நிதிநிலை அறிக்கையில் உள்ள திட்டங்கள் குறித்து, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை எதிர்க்கும் கட்சியில் இருப்பவர்கள்கூட குறைகூற முடியாதபடி அவர்களை வாய் அடைக்கச் செய்துள்ளது என்றும், *(மேசையைத் தட்டும் ஒலி)* இந்த நிதிநிலை அறிக்கையில் மாநிலத்தை வளர்ச்சிப் பாதைக்குக் கொண்டுசெல்லும் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களும், மக்கள் நலத் திட்டங்களும் நிறைந்துள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், இந்த நிதிநிலை அறிக்கை எதிர்காலத் தலைமுறையினரின் நலனைச் சிந்தித்து வகுக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ள அந்தத் தலையங்கம், முத்தாய்ப்பாக "அரசியல்வாதிகள் அடுத்த தேர்தலைப் பற்றி யோசிப்பார்கள். ஆனால், மக்கள் நலனில் அக்கறை கொண்ட தொலைநோக்குச் சிந்தனையாளர்கள் அடுத்த தலைமுறையின் நலனைக் கருத்தில்கொண்டு செயல்படுவார்கள்" என்று தெரிவித்து, எதிர்காலத் தலைமுறையினரின் நலனுக்காகச் சிந்தித்துச் செயல்படும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தொலைநோக்குச் சிந்தனையை வெகுவாகப் பாராட்டியுள்ளது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

இந்திய தொழில் கூட்டமைப்பு (CII) மற்றும் தென்னிந்திய வர்த்தகத் தொழில் நிறுவனம் (SICCI), மாண்புமிகு அம்மா அவர்களுடைய நிதிநிலை அறிக்கையை, "an inclusive, sustainable and growth oriented budget" என்று கருத்து தெரிவித்து வரவேற்றுள்ளது. மேலும், மின் ஆளுமை நடைமுறைகள்மூலம் தூய நிர்வாகத்தைத் தர இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு எடுத்துவரும் முயற்சிகளையும், *(மேசையைத் தட்டும் ஒலி)* புதிய மின் திட்டங்களையும், அரசு மேற்கொள்ளும் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளையும் வெகுவாகப் பாராட்டியுள்ளது.

திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் அமைப்பின் தலைவர், மாண்புமிகு அம்மா அவர்களுடைய நிதிநிலை அறிக்கை மாநில வளர்ச்சிக்கு வழிவகுக்கும் நிதிநிலை அறிக்கை எனப் பாராட்டு தெரிவித்து, "மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு மேற்கொண்டுள்ள 2011 ஆம் ஆண்டுக்கான புதிய தொழில் கொள்கையை உருவாக்குவதற்கான முயற்சியும், மாண்புமிகு அம்மா அவர்களின் தலைமையில் அமைக்கப்பட உள்ள தமிழ்நாடு கட்டமைப்பு மேம்பாட்டு நிறுவனமும் தொழில் வளர்ச்சியை ஊக்கப்படுத்தும்" எனத் தெரிவித்துள்ளார். அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1–00*

விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. குரு அவர்கள், திட்டங்களின் பல்வேறு அம்சங்களைப் பாராட்டிப் பேசி அதுவும் குறிப்பாகப் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் இட ஒதுக்கீட்டில் அரசு எடுத்த நடவடிக்கையைப் பாராட்டிப் பேசினார். விவசாயத்திற்குத் தனி பட்ஜெட் போட வேண்டும் என்று குறிப்பிட்டார். இந்த நிதிநிலை அறிக்கையில் விவசாயம் மற்றும் அதைச் சார்ந்த துறைகளுக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளதை அனைவரும் அறிவர். ஆனால், தனி பட்ஜெட் என்பதைவிட செயலாக்கத்தில் சிறப்புக் கவனம் என்ற நிலையே விவசாய வளர்ச்சிக்கு உதவும் என்று கருதுகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், அரசு அறிவித்துள்ள நில வங்கித் திட்டம் போன்றவற்றை மறுபரிசீலனை செய்யவும் அவர் கோரினார். தொழில் வளர்ச்சியைப் பரவலாக்கி வேலைவாய்ப்பை உருவாக்க வேண்டுமெனில் விவசாயமும், நில உரிமையாளர்களும் பாதிக்காத வகையில் தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் இத்தகைய நில வங்கிகளை ஏற்படுத்தி, தொழில் வளர்ச்சியை ஊக்கப்படுத்துவது அவசியம். இதற்கான புதிய கொள்கையை வகுக்கும்போது, மிகுந்த கவனமுடன் வகுக்கப்படும் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வளவு சிறப்பான வரவு-செலவுத் திட்டத்தின்மீது அனைவரும் மனதாரப் பாராட்டும்போது விமர்சனம் செய்யவேண்டும் என்பதற்காகவே ஒரே ஒருவர் மட்டும் குறை கூறி அறிக்கை வெளியிட்டுள்ளார். அவர் தெரிவித்துள்ள கருத்துகளை நாம் பொருட்படுத்த வேண்டியதில்லை என்றாலும், அதற்கான சில விளக்கங்களை, கருத்துகளை நான் இங்கே தெரிவிக்க விரும்புகின்றேன். நிதிநிலை அறிக்கையை விமர்சனம் செய்துள்ள கருணாநிதி, வேறு எந்தக் குறையும் சொல்ல முடியாத காரணத்தால் பக்கங்கள்தான் நிறைந்திருக்கின்றன; நோக்கங்களும், திட்டங்களும் இல்லை என்று கூறியிருக்கிறார். உண்மைதான். மக்கள் மாண்புமிகு அம்மா அவர்களின் பக்கம், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்கள் மக்களின் பக்கம் (மேசையைத் தட்டும் ஒலி) நியாயம் மாண்புமிகு அம்மா அவர்களின் பக்கம் (மேசையைத் தட்டும் ஒலி), மாண்புமிகு அம்மா அவர்கள் நீதியின் பக்கம். (மேசையைத் தட்டும் ஒலி), தூய்மை மாண்புமிகு அம்மா அவர்களின் பக்கம். (மேசையைத் தட்டும் ஒலி), மாண்புமிகு அம்மா அவர்கள் நேர்மையின் பக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)



தமிழக அரசின் நிதிநிலை அறிக்கை இப்படி பக்கம் பக்கமாக நிறைந்திருக்கிறது என்பதால் (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்குத் தமிழக மக்களின் நெஞ்சமெல்லாம் மாண்புமிகு அம்மா அவர்கள் நிறைந்திருக்கிறார்கள். ஆகவே, இது எங்களுக்கெல்லாம் பெருமைதான் என இந்த மாமன்றத்திற்குத் தெரிவிப்பதில் நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். தமிழக மக்களின் இதயங்களில் மகிழ்ச்சியை விதைத்து, தமிழகமே போற்றிக் கொண்டாடுகின்ற இந்த நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு தங்களது கருத்துகளை எடுத்துக் கூறுகின்ற வாய்ப்பை மறுதலித்து, புறக்கணிப்பு என்ற பெயரால் தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் வீட்டுக்குச் சென்று இன்றைக்கு நல்ல ஓய்வு எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஒரே பகுதியில் தங்களுக்கு இட ஒதுக்கீடு வேண்டும் என்ற சிறு பிள்ளைத்தனமான காரணத்தைச் சொல்லி, இந்த அவைக்கு வராமல் ஒதுங்கியிருக்கின்றனர். இந்த அவைக்கு வராமல் இருக்க அவர்கள் கூறுகின்ற சாக்குப் போக்கு எது என்பதை இன்றைக்கு மக்கள் நன்றாக உணர்ந்திருக்கின்றார்கள். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை நேருக்கு நேராக சந்திக்கத் துணிவில்லாமல், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களின் கருத்துக்கு எதிராகக் கருத்துக் கூற தைரியம் இல்லாமல், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கேட்கப்போகும் கேள்விகளை நினைத்தும், அளிக்கப்போகும் பதில்களை நினைத்தும் அச்சம் கொண்டு, தங்களது ஆட்சியில் செய்த ஊழல்களை, தாங்கள் அடித்த கொள்ளைகளை, ஒவ்வொன்றாகச் சொல்லி தங்களது உண்மை சொரூபத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வெளிப்படுத்தி விடுவார் என்ற பீதியின் காரணமாகத்தான் தி.மு.க.வினர் இந்த அவைக்கு வரவில்லை. உப்பு சப்பில்லாத ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்லி தலைவர் மட்டும், அவரது கட்சியின் தலைவர் மட்டும் தப்பித்துக் கொள்வார் என்று நினைத்தோம். ஆனால், தலைவர் எவ்வழி, தொண்டர்கள் அவ்வழி என்று தி.மு.க.வினர் இன்றைக்கு நிரூபித்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர் அவை நடவடிக்கைகளில் கலந்துகொள்ள மறுப்பது அவரைத் தேர்ந்தெடுத்தத் தொகுதி மக்களுக்குச் செய்கின்ற துரோகம் என்பதை தி.மு.க சட்டமன்ற உறுப்பினர்கள் மனதில் கொள்ளவேண்டும். கடந்த மைனாரிட்டி தி.மு.க ஆட்சியின்போது இதே அவையில் நடந்த

நிகழ்ச்சியை எண்ணும்போதே கழகத் தொண்டன் ஒவ்வொருவருக்கும் மெய்சிலிர்க்கும்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது அன்றைய பேரவைத் தலைவர் தனது சர்வாதிகாரப் போக்கால் அவையிலிருந்த அத்தனை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர்களையும் கூட்டத்தொடர் முடியும் வரை பங்கேற்க முடியாதபடி வெளியேற்றிவிட்டார். ஆனால், அந்த நிலையிலும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒரு சிங்கம்போல இந்த அவைக்குத் தன்னந்தனியாக வந்திருந்து (மேசையைத் தட்டும் ஒலி) விவாதத்தில் பங்கேற்று தனது கேள்விக் கணைகளால் தி.மு.க. தலைவரை திக்கு முக்காட வைத்தார். (மேசையைத் தட்டும் ஒலி) அத்தனை அமைச்சர்களையும் அலைபாயச் செய்தார். ஒரு வாக்கியத்தை மாண்புமிகு அம்மா அவர்கள் பேசி முடிக்கும் முன்பாகவே அத்தனை தி.மு.க. அமைச்சர்களும் ஒன்றுபோல் எழுந்து குறுக்கீடு செய்து பார்த்தார்கள். பதிலளிக்க வேண்டிய முதலமைச்சரோ தூண்டிவிட்டு, துணை நின்றார். முகம் காட்டத் துணிவில்லாத தி.மு.க. உறுப்பினர்கள் பின் வரிசையில் கோழைகளைப்போல உரக்கக் கத்தி ஓலமிட்டார்கள். பாரபட்சம் இல்லாமல் பாதுகாப்புத் தர வேண்டிய பேரவைத் தலைவரோ வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்.

*பிற்பகல் 1–05*

ஆனால், இந்தச் சலசலப்புக்கெல்லாம் அஞ்சிடாமல் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சிங்கம்போல் சிலிர்த்தெழுந்து தன்னந்தனியாக இந்த அவைக்கு வந்து மிகவும் துணிவுடன் எதிர்கொண்டு மக்கள் எதற்காகத் தேர்ந்தெடுத்தார்களோ அந்தக் கடமையைச் செய்தே தீருவேன் என்று சட்டமன்ற விவாதத்தில் பங்கேற்று, ஜனநாயக முறைப்படி வாதாடி, தி.மு.க. ஆட்சிக்கு எதிரான இறுதித் தீர்ப்பை மாண்புமிகு அம்மா அவர்கள் அன்றே எழுதிவிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆட்சி மாற்றத்திற்கு முன்னால் மதுரையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்திற்கு வந்தால் குண்டு வெடிக்கும்; கொலை செய்து விடுவோம் என்று பூச்சாண்டி காட்டிய ஹார்லிக்ஸ் திருடர்களையும்,





(மேசையைத் தட்டும் ஒலி) உர மோசடிப் பேர்வழிகளையும், புறமுதுகு காட்டச் செய்த வேலு நாச்சியார் அல்லவா மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்! (மேசையைத் தட்டும் ஒலி)

திகாரிலும், பாளையங்கோட்டையிலும், சேலத்திலும் ஒரே இடத்தில் இருப்பதைப்போல சட்டமன்றத்திலும் ஒரே பகுதியில் இருக்க வேண்டும் என்று தி.மு.க.வினர் விரும்புகிறார்களோ, என்னவோ, தெரியவில்லை! (மேசையைத் தட்டும் ஒலி)

அவர்கள் சொல்கிறார்கள், நோக்கங்கள் இல்லை என்று சொல்கிறார்கள். 10 விழுக்காட்டிற்கும் மேலாக நிலையான வளர்ச்சியை உறுதிசெய்ய முதன்மை மற்றும் உற்பத்தித் துறைக்கு முன்னுரிமை;

வளர்ச்சித் திட்டங்களையும், கட்டமைப்புப் பணிகளையும் கண்டறிந்து நிறைவேற்ற தமிழ்நாடு 2025 தொலைநோக்குத் திட்டம்; இத்தகு திட்டங்கள் நிறைவேறுவதைக் கண்காணிக்க மாண்புமிகு முதலமைச்சர் தலைமையிலான தமிழ்நாடு கட்டமைப்பு மேம்பாட்டு நிறுவனம்;

விவசாய உற்பத்தியைப் பெருக்க இரண்டாம் பசுமைப் புரட்சி; உணவு உற்பத்தி இலக்கு 115 இலட்சம் டன்; விவசாயிகளுக்கு 3,000 கோடி ரூபாய் வட்டியில்லாக் கடன்;

பால் உற்பத்தியைப் பெருக்க வெண்மைப் புரட்சி; மீன் வளத் துறையில் ஆழ்கடல் மீன்பிடிப்பை ஊக்குவித்தல்; பதனிடும் வசதிகள், மீன்பிடித் துறைமுகங்கள்;

வறுமை ஒழிப்பிற்கு ஒருங்கிணைந்த முயற்சி; நகர்ப்புற வளர்ச்சிக்கு சிறப்புத் திட்டங்கள்;

சென்னைப் பெருநகரப் போக்குவரத்து நெரிசலைச் சமாளிக்க மோனோ இரயில் திட்டம்;

நகர்ப்புறத்தில் திடக்கழிவு மேலாண்மை; கழிவுநீர் மறு சுழற்சி முறையில் மேலாண்மைத் திட்டத்திற்கு எடுக்க உள்ள முன்முயற்சி; பிளாஸ்டிக் குப்பைகளை அகற்ற மக்கள் இயக்கம்;

திருப்பூர் சாயக் கழிவுப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு; சுகாதாரத் துறையில் புரட்சிகரமான வீடு தேடி வரும் மருத்துவ

வசதி; ஏழைகள் பயன்பெற 24 மணி நேர நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம்; மாவட்ட மருத்துவமனைகள் மேம்பாடு;

உயர் கல்வியில் உலகத் தரம் மிக்க கல்வி நிறுவனங்களை உருவாக்கும் முயற்சி போன்ற எண்ணற்ற புதிய முயற்சிகள்.

இவையெல்லாம் தொலைநோக்குத் திட்டங்கள் இல்லையா? இவை உயர்ந்த நோக்கங்கள் இல்லையா?

சிறு, குறு விவசாயிகளுக்கு நுண்ணுயிர்ப் பாசனத்திற்கு 100 சதவிகித மானியம்; கிடங்கு வசதிகளுக்குப் புதிய திட்டங்கள்; சந்தைகள் நவீனமயமாக்கல்; உணவுப் பதனிடும் தொழிற்சாலையில் விவசாயிகளுக்கு 25 சதவிகித பங்கு மூலதனம்; 60,000 இலவச கறவை மாடுகள் வழங்கும் திட்டம்; 5 ஆண்டுகளில் 7 இலட்சம் இலவச ஆடுகள் வழங்கும் திட்டம்; பசுந்தீவனத்திற்குச் சிறப்புத் திட்டம்;

ஆழ்கடலில் மீன் பிடிக்க இயந்திரப் படகுக்கு 5 இலட்சம் ரூபாய் மானியம் வழங்கும் புதிய திட்டம்; மீன்பிடி அல்லாத காலங்களில் மீனவக் குடும்பங்களுக்கு 4,000 ரூபாய் உதவித் தொகை வழங்கும் புதிய திட்டம்; தமிழக ஆறுகள் இணைப்புத் திட்டம்; பள்ளிக்கரணை சதுப்பு நிலப் பாதுகாப்புத் திட்டம்; மதுரை-தூத்துக்குடி நெடுஞ்சாலையைத் தொழில் வளர்ச்சிப் பெருவழியாக மாற்றும் திட்டம்;

*பிற்பகல் 1–10*

தமிழ்நாடு சிமெண்ட் நிறுவன உற்பத்தி மேம்பாட்டுத் திட்டம்; குறு, சிறு, நடுத்தர நிறுவனங்களுக்கு மூன்று சதவீத வட்டித் தள்ளுபடி வழங்கும் திட்டம்; உயர் தொழில்நுட்பங்களில் இளைஞர்களுக்குப் பயிற்சி வழங்க உலகத் தரம் வாய்ந்த பயிற்சி மையம்; மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள் கேட்ட கேள்விக்கு, 10 புதிய கலை அறிவியல் கல்லூரிகள்; தேனியில் புதிய அரசுப் பொறியியல் கல்லூரி; பத்து புதிய தொழிற்பயிற்சி நிலையங்கள்; தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிலும் மாணவ, மாணவிகளுக்குச் சீருடை, காலணி; 3,800 மெகா வாட் மின் உற்பத்தி செய்ய ஐந்து புதிய திட்டங்கள்; ஆண்டுக்கு 60,000 பசுமை வீடுகள் கட்டும் திட்டம்; மேல்நிலைப் பள்ளிகளில் இடைநிற்றலை நிறுத்த 10, 11, 12 ஆம் வகுப்பு மாணவ, மாணவியருக்கு ஊக்கத் தொகை; மாணவ, மாணவியருக்கு



ஆண்டுக்கு 4 சீருடைகள் மற்றும் காலணி; கிராமப்புற இளம் பெண்களுக்கு இலவச சானிடரி நாப்கின் வழங்கும் திட்டம்; முதலமைச்சரின் விரிவான பொது மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்; கிராமப்புறக் கட்டமைப்பை மேம்படுத்த ஒருங்கிணைந்த கிராமப்புறக் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்; நகர்ப்புற மேம்பாட்டுக்கு இரண்டு புதிய திட்டங்கள்; மகளிருக்கு இலவச மிக்சி, கிரைண்டர், மின்விசிறி வழங்கும் திட்டம்; ஆதரவற்ற முதியோர், குழந்தைகள், மாற்றுத் திறனாளிகளுக்கு வட்டாரந்தோறும் சிறப்பு இல்லங்கள்; இவை எல்லாம் புதிய திட்டங்கள் இல்லையா?

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இந்த வரவு–செலவுத் திட்டத்தில் மக்கள் நலன் காக்க, இப்படி எத்தனையோ புதிய புதிய திட்டங்களை அளித்துள்ளார்கள். இவை தவிர, 1.83 கோடி குடும்பங்களுக்கு இலவச அரிசி; தாலிக்கு 4 கிராம் தங்கம் மற்றும் பட்ட, பட்டயப் படிப்பு படித்த ஏழைப் பெண்களுக்குத் திருமண உதவித் தொகை 50,000 ரூபாயாக உயர்வு; மீன்பிடிக்க தடை செய்யப்பட்ட காலங்களில் மீனவக் குடும்பங்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர உதவித் தொகை 1,000 ரூபாயிலிருந்து 2,000 ரூபாயாக உயர்வு; முதியோர் உதவித் தொகை போன்ற மாதாந்திர ஓய்வூதியத் தொகை 500 ரூபாயிலிருந்து 1,000 ரூபாயாக உயர்வு; கர்ப்பிணிப் பெண்களுக்கான உதவித் தொகை 6,000 ரூபாயிலிருந்து 12,000 ரூபாயாக உயர்வு; இலங்கைத் தமிழர்களுக்கு உதவித் தொகை உயர்வு; பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தில் உதவித் தொகை கணிசமாக உயர்வு; ஆதி திராவிட, பழங்குடியின, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் விடுதி மாணவர்களுக்கு வழங்கப்படும் உணவுக் கட்டணம் உயர்வு எனப் பல திட்டங்களில், திட்ட உதவி கணிசமாக உயர்த்தப்பட்டுள்ளது. இந்த அளவு மக்களுக்குப் பயன்தரும் திட்டங்களை வழங்கியது புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆனால், இந்தத் திட்டங்களெல்லாம் தனக்குத் தெரியவில்லை என்று தன் கண்ணை மூடிக்கொண்டு பக்கங்களை மட்டும் எண்ணி கருத்துக் கூறியுள்ளார் கருணாநிதி. அவர் செய்துள்ள விமர்சனம் கண்களை மூடிக்கொண்டு இந்த உலகமே இருண்டுவிட்டது என்று எண்ணிய பூனையைத்தான் நினைவூட்டுகிறது.

சட்டம்-ஒழுங்கைப் பராமரிக்க, மாண்புமிகு அம்மா அவர்களின் தலைமையிலான அரசு எடுத்துவரும் நடவடிக்கைகளை அனைவரும்

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2011 ஆகஸ்ட் 12

பாராட்டுகின்றனர். நில அபகரிப்பு குறித்து விசாரிக்க, காவல் துறையில் சிறப்புப் பிரிவுகள்; வாடகைக் கட்டடத்தில் இயங்கும் அனைத்து காவல் நிலையங்களுக்கும் புதிய கட்டடம்; கூடுதல் சைபர் கிரைம் பிரிவுகள், சைபர் தடயவியல் சோதனைக் கூடங்கள்; காவல் துறையில் 6,605 பணியிடங்களை நிரப்புதல்; ஊர்க் காவல் படையினரின் எண்ணிக்கையினை 16,000ஆக உயர்த்துதல்; ஒருங்கிணைந்த சென்னைப் பெருநகரக் காவல் ஆணையரகம் உருவாக்குதல் எனப் பல திட்டங்களைக் காவல் துறையில் செயல்படுத்த, மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு உறுதிபூண்டுள்ளது என்பதை இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு பொறுப்பேற்று மூன்று மாதங்களே ஆகியுள்ள நிலையில், இவ்வளவு திட்டங்களையும் தீட்டி வழங்கியுள்ளது இந்த நிதிநிலை அறிக்கை ஒரு தொடக்கமே. 'யானை வரும் பின்னே, மணி ஓசை வரும் முன்னே' என்பதுபோல, மணி ஓசையாக வந்துள்ள மாண்புமிகு அம்மா அவர்களுடைய நிதிநிலை அறிக்கை, வருங்காலத்தில் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு எத்தகைய பணிகளை மேற்கொண்டு தமிழகத்தை முதன்மை நிலைக்குக் கொண்டுவர உள்ளது என்பதற்கான ஒரு முன்னோட்டமான அறிக்கை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். இதைத் தொடர்ந்து துறைவாரியான மானியக் கோரிக்கைகள் விவாதிக்கப்பட உள்ளன. அதிலும் பல்வேறு திட்டங்களின் விளக்கம், அறிவிப்புகள் இடம்பெற உள்ள நிலையில் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் விவாதத்தில் எழுப்பிய வேறு சில கருத்துகளுக்கும் மனநிறைவு அளிக்கும் வகையில் பதிலும் துறைவாரியான விவாதமும் அமையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களின் அரசின் கவனமெல்லாம் இத்திட்டங்களை முறையாகச் செயல்படுத்தி, அதன் பயன் முழுமையாக மக்களைச் சென்றடைவதை உறுதி செய்யும் வகையிலும், உறுதியான பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தக் கூடிய வகையில் தேவைப்படும் வளர்ச்சித் திட்டங்களையும் கட்டமைப்பு வசதிகளையும் ஏற்படுத்தும் வகையிலும் இருக்கும் எனத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே சமயம், மாநில அரசின் நிதிநிலையை மேம்படுத்த பொருளாதார வளர்ச்சியை ஊக்கப்படுத்தி, அதனால் வரும் கூடுதல் வரி வருமானம்மூலம் நிதிநிலையை



2011 ஆகஸ்ட் 12] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

மேம்படுத்துவதே சிறந்த வழி என்பதை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு கவனத்தில் கொண்டு செயல்படும். இருக்கின்ற நிதி ஆதாரங்களைச் சிதறாமல், விரயமின்றி வசூலிப்பதிலும், தேவையற்ற செலவினங்களைக் கட்டுப்படுத்தி, வருவாய் செலவினத்தைக் குறைத்து, நிதி நிருவாகத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுப்பதிலும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு கவனம் செலுத்தும் என்பதை இம்மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–15

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சி செய்த முந்தைய ஆட்சிக் காலம் என்றாலும் சரி, இப்போதைய ஆட்சிக் காலம் என்றாலும் சரி, அதற்குமுன் ஆண்ட அரசின் நிருவாகச் சீர்கேடுகள், நிதிக் குளறுபடிகள், சாதாரண மக்களையும் பாதிக்கும் சமுதாய சுரண்டல்கள் எனப் பல்வேறு இடர்ப்பாடுகளை எதிர்நோக்க வேண்டிய கட்டாயம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு ஏற்படுகிறது. ஆனால், எப்படிப்பட்ட இடர்ப்பாடுகள் வந்தாலும், அவை எந்த வகையில் வந்தாலும், அவற்றையெல்லாம் தகர்த்தெறிந்து தமிழக மக்களின் நலனுக்கான திட்டங்களை, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எப்போதுமே வெற்றிகரமாகச் செயல்படுத்தி வருகிறார்கள். இதற்குக் காரணம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வெற்றிக்கு தெய்வமே முன்வந்து உதவி செய்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

யார் ஒருவர் தன்னுடைய குடிமக்களை உயரச் செய்யக் கடவேன் என்று உறுதி பூண்டு, அதற்கேற்ற செயல்களைச் செய்கின்றார்களோ, அவருக்கு தெய்வம் வரிந்து கட்டிக்கொண்டு (மேசையைத் தட்டும் ஒலி) முன்னே வந்து நின்று, உதவி செய்யும் என்று வள்ளுவர் கூறியதற்கிணங்க, தெய்வத்தின் பரிபூரண ஆசியுடன் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தில் நல்லாட்சி செய்துகொண்டிருக்கிறார்கள்.

தெய்வத்தின் உறுதுணையோடு தமிழக மக்களின் நலனுக்கான திட்டங்களை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வெற்றிகரமாக நிறைவேற்றி

வருகின்றார்கள். தமிழகத்தின் முன்னேற்றத்திற்காகவும், தமிழ் மக்களின் நல்வாழ்விற்காகவும் இன்னும் பலப் பல புதுமைத் திட்டங்களையும், புரட்சித் திட்டங்களையும் மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வெற்றிகரமாகச் செயல்படுத்துவார்கள். நேற்றைய தலைமுறை வணங்கி வாழ்த்தும்; இன்றைய தலைமுறை மகிழ்ந்து போற்றும்; நாளைய தலைமுறை வியந்து பார்க்கும்! (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் தமிழ்நாட்டின் நிரந்தர முதலமைச்சர். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்கள்தான் தமிழ்நாட்டின் நிரந்தர முதலமைச்சர், மாண்புமிகு அம்மா அவர்கள்தான் தமிழ்நாட்டின் நிரந்தர முதலமைச்சர் என்னும் வெற்றிச் சரித்திரச் சாதனை தொடரும், தொடரும் எனக் கூறி, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான வழிகாட்டுதலுக்கு மீண்டும் ஒருமுறை எனது கோடானு கோடி நன்றிகளைத் தெரிவித்து அமர்கின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆலோசனையோடு சிறப்பான நிதிநிலை அறிக்கையைக் கடந்த வாரம் சமர்ப்பித்தார்கள். அதிலே அடுக்கடுக்கான திட்டங்களை அறிவித்தார்கள். இன்றைக்குப் பதிலுரையாக அடுக்கடுக்கான மொழிகளோடு, நல்ல சிறப்பான பதிலுரையையும் சொல்லியிருக்கிறார்கள். அவருடைய பதிலுரைக்கு இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் நெல் அறுவடை தீவிரமாக நடந்து கொண்டிருக்கக்கூடிய சூழ்நிலையில், கொள்முதல் நிறுத்தப்பட்டிருப்பதாக அங்கு இருக்கின்ற விவசாயிகள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலையிட்டு, நெல் கொள்முதலைத் தொடர்ந்து நடத்திடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அதோடு, இந்த நிதிநிலை அறிக்கையில் சுமார் 9,000 கோடி ரூபாய் அளவிற்கு மக்கள் நலத் திட்டங்களைச் சிறப்பாக அறிவித்திருக்கிறார்கள். அதை எல்லோரும் வரவேற்றிருக்கிறோம். அந்த அடிப்படையில் நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் எப்பொழுதும் சவாலை சாதனைகளாக்கியே பழக்கப்பட்டவர். கடந்த காலத்தில் யாராலும் பிடிக்க முடியாத வீரப்பனை வேட்டையாடிப் பிடித்து அவருடைய கதையை முடித்தவர். அதைப்போல, கடந்த ஆட்சியில் இருந்த நிலத் திருடர்களுடைய கொட்டத்தை, சட்டத்தின் துணையோடு இன்று வேட்டையாடிக் கொண்டிருக்கிறார். இப்படி அவர் இருக்கிற இந்தக் காலத்தில் தமிழ்நாட்டில் கொசுத் தொல்லை என்பது மிகப் பெரிய அளவிலே மாறியிருக்கிறது. அதை எங்களால் வேட்டையாட முடியவேயில்லை. எங்கே பார்த்தாலும் கொசுப் பிரச்சினைதான் பெரிய பிரச்சினையாகவே இருந்துகொண்டிருக்கிறது. கொசுவை ஒழிப்பதற்காக அடிக்கக்கூடிய புகையாக இருந்தாலும், மருந்துகளாக இருந்தாலும்கூட, அது சுற்றுப்புறச் சூழலைக் கெடுக்கிறது; உடலுக்கும் தீங்கு இழைக்கிறது. கொசுவை மட்டுமே அது கொல்வதில்லை. மற்ற விளைவுகளை ஏற்படுத்துகிறது. எனவே, அந்தக் கொசுக்களை மக்கள் இயக்கமாக ஒழிப்பதற்கு, அரசு அறிவித்திருக்கிற மக்கள் நலத் திட்டங்களில் ஒரு கொசுறுத் திட்டமாக கொசுவை ஒழிக்கிற batகளை இலவசமாக வழங்க வேண்டும். எல்லா குடும்பங்களுக்கும் அந்த electric bat கொடுத்தால், எல்லாக் மக்களும் சாயங்காலம் அதை எடுத்து அடித்தார்கள் என்றாலே கொசு ஒழிந்துவிடும் என்று நினைக்கிறேன். அதனாலே, அதையும் இலவசமாக எல்லாக் குடும்பங்களுக்கும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, நான் இந்த நிதிநிலை அறிக்கைக்கான பதிலை வரவேற்று அமர்கிறேன்.

பிற்பகல் 1–20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களது ஆணையோடு திருவண்ணாமலை மாவட்டத்தில் கடந்த இரண்டு மாதங்களில் மட்டும் 13 இடங்களில் நேரடி நெல் கொள்முதல் மையங்கள் திறக்கப்பட்டு, சிறப்பான முறையில் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. கடந்த 5 ஆண்டுக் காலத்தில்

4 நேரடி நெல் கொள்முதல் மையங்கள் மட்டுமே திறக்கப்பட்ட திருவண்ணாமலை மாவட்டத்தில், மாண்புமிகு அம்மா அவர்கள் பொறுப்பேற்ற இரண்டு மாத காலங்களுக்குள்ளாகவே 13 நேரடி நெல் கொள்முதல் மையங்கள் திறக்கப்பட்டு சிறப்பான முறையிலே செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இந்தச் சபையின் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களினுடைய வழிகாட்டுதலோடு தமிழக மக்களுடைய வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கு எண்ணற்ற அறிவிப்புகளைக் கொண்ட இந்த நிதிநிலை அறிக்கையையும், இங்கே நடைபெற்றிருக்கிற, சட்டப் பேரவையில் நடைபெற்றிருக்கிற விவாதத்திற்கு அந்தக் கருத்துகளையெல்லாம் உள்ளடக்கி வந்திருக்கிற மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுடைய பதிலுரையையும் எங்கள் கட்சியின் சார்பிலே வரவேற்கிற அதே நேரத்தில், ஒன்றிரண்டு விஷயங்களை மட்டும் அரசின் மேலான கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன்.

குறிப்பாக, நிதிநிலை அறிக்கையில் கூட்டுறவுத் துறை வாயிலாக உரிய காலத்தில் கடனைத் திரும்பச் செலுத்துவோருக்கு வட்டியில்லா பயிர்க் கடனாக 3,000 கோடி ரூபாயினை வழங்கும் உயர் இலக்கினை இவ்வரசு நிர்ணயித்துள்ளது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஒருவேளை ஏதோ இயற்கை இடர்ப்பாடுகள் போன்ற காரணங்களால், உரிய காலத்தில் கடனைத் திரும்பக் கட்ட முடியாத நிலைமை ஏற்பட்டால், அவர்களுக்குக் கடன் கிடைக்காத ஆபத்து ஏற்படுகிற ஒரு எண்ணம், இந்த அறிவிப்பின்மூலம் ஏற்படும். எனவே, உரிய காலத்திலே கடனைத் திருப்பிக் கட்டுபவர்களுக்கு 3,000 கோடி ரூபாய் வட்டியில்லாத கடன் வழங்குவது என்கிற அந்த இலக்கினை வரவேற்கிற அதே நேரத்தில், தவிர்க்க முடியாத இயற்கை இடர்ப்பாடுகளாலோ அல்லது கரும்பாலைகள் உரிய நேரத்தில் பணத்தைக் கொடுக்க முடியாத நிலை ஏற்படுகிறபோதோ, அதனால் கடனை உரிய நேரத்தில் கட்டமுடியாத விவசாயிகளுக்கும் கடன் அளிப்பதற்கு இதிலே வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அதே நேரத்தில், இப்போது தமிழகத்தில் ஈரோடு மாவட்டம் உள்ளிட்ட சில மாவட்ட கரும்பு ஆலைகளில் கரும்புப் பயிருக்கான பணப் பாக்கி என்பது கொடுக்கப்படாமல் இருக்கிறது. அதையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்தக் கரும்புப் பணப் பாக்கிகளை வழங்குவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இறுதியாக, தமிழகத்திலே இருக்கிற ஏழையெளிய, கிராமப்புற, நகர்ப்புற மக்களுக்கு . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், சுருக்கமாகப் பேசுங்கள்.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** இதோ உரையை முடித்துக்கொள்கிறேன். தமிழகத்திலே இருக்கிற ஏழையெளிய, கிராமப்புற, நகர்ப்புற மக்களின் அடிப்படைப் பிரச்சினையாக இருக்கிற வீட்டுமனைப் பட்டா பிரச்சினையிலே, இந்த அவையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்தப் பட்டா வழங்குகிற உறுதியினை அளிப்பது தமிழகத்திலே இருக்கிற ஏழையெளிய மக்களுக்கு, அவர்களுடைய நெஞ்சத்திலே பால் வார்க்கும் என்பதைத் தெரிவித்து, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரும்பு உற்பத்தியாளர்களிடமிருந்து வெட்டப்பட்ட கரும்புக்கு ஈரோடு மாவட்டத்தில் சர்க்கரை ஆலைகள் மூலமாகப் பணம் வழங்கப்படவில்லை என்ற கருத்து இங்கே வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. உடனடியாக அந்தப் பணத்தை வழங்க வேண்டுமென்று ஆலை உரிமையாளர்களை இந்த அரசு வலியுறுத்தியிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உரிய காலத்தில் கடனைக் கட்டுவதற்கு, இடர்ப்பாடுகள் ஏற்பட்டால் அதற்கான தீர்வு என்ன என்று கேட்டார்கள். ஓராண்டுக் காலம் அந்தக் கடனுடைய காலம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. எனவே, அந்த ஓராண்டுக் காலத்திற்குள் எத்தனையோ பருவங்கள் வருகின்றன. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின்

கவனத்திற்கு, தாயுள்ளத்தோடு மாண்புமிகு அம்மா அவர்கள் ஏழை விவசாயிகள் பயன்பட வேண்டுமென்பதற்காக வட்டியில்லாமல் பயிர்க் கடனை இன்றைக்குக் கொடுத்திருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இப்பேரவையின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1–25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பட்ஜெட்டில் கடனைப்பற்றிக் குறிப்பிடும்போது, எல்லாம் இயல்பாக இருக்கும்; normal ஆக நடைபெறும் என்ற நம்பிக்கையில் இந்த நிதிநிலை அறிக்கையை வெளியிட்டிருக்கிறோம். இயற்கை இடர்ப்பாடுகள் ஏற்பட்டால் எப்படி என்று கேட்கிறார் மாண்புமிகு உறுப்பினர். இப்போது இயற்கை இடர்ப்பாடுகள் ஏதும் நிகழவில்லை. அப்படி வந்தால், அப்போது பார்த்துக்கொள்ளலாம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 16–8–2011 செவ்வாய்க்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1–25 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

—ஏதுமில்லை—

* * * * *